33 /31

# உதயன்

பக்கங்கள் 30

பதிப்பு: யாழ் | சுடர் 28 | வள்ளுவர் ஆண்டு 2044
விலை: ரூபா 25 | கதிர் 136 | பங்குனி 29, வியாழன் 11.04.2013

UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com



யாழ்ப்பாணம் மானிப்பாய்
வெள்ளைப்புற்றடி
அருள்மிகு ஸ்ரீ விரகத்தி
விநாயகர் தேவஸ்தானம்

புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா

இன்று (11.04.2013) வியாழக்கிழமை
மு.ப. 10 மணிதொடக்கம் ந.ப. 12
மணிவரை நடைபெறும்.
ஆலய பரிபாலன சபையினர்,
சித்திரத்தேர் திருப்பணிச் சபையினர்.
(C/83031)


## முல்லையில் கடல், நில ஆக்கிரமிப்புக்கு எதிராக அச்சுறுத்தல்களையும் மீறித் திரண்டனர் மக்கள்

முல்லைத்தீவு, ஏப்.11

அரச கட்சி ஆதரவாளர்களினாலும், சீருடையினராலும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களையும் தாண்டி கடல், நில ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக முல்லைத்தீவில் மக்களால் முன்னெடுக்கப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டம் பேரெழுச்சியுடன் நேற்று இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் முறையற்ற காணிப் பகிர்ந்தளிப்பு, கடல்வள அழிப்பு, வீட்டுத் திட்டத்தில் காட்டப்படும் பாரபட்சம் என்பவற்றைத் தடுத்து நிறுத்தக் கோரி முல்லைத்தீவு மாவட்ட கிராம மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டப் பிரஜைகள் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கவனவீர்ப்புப் போராட்டம் ஆயிரக்கணக்கான மக்களின் பங்களிப்புடன் நேற்று

பார்க்க பக்கம் 04



## மன்னாரில் அத்துமீறிய குடியேற்றம்

மன்னார், ஏப்.11

மன்னார், முள்ளிக்கண்டல் பகுதியில் கடந்த சில தினங்களாக, புத்தளத்திலிருந்து வந்த அரச ஆதரவுக் குழுக்களால் காடழிக்கப்பட்டுத் திட்டமிட்ட குடியேற்றம் அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்

பார்க்க பக்கம் 21


இந்தியக் கடற்பரப்பினுள் அத்துமீறியே இலங்கைக் கடற்படை கைது செய்தது 5

எல்லை தாண்டுவதாலேயே மீனவர்கள் மீது தாக்குதல் 6

எந்நேரமும் நடக்கலாம் தாக்குதல் 7

ஈழத் தமிழர் விவகாரத்தில் துரோகம் இழைத்தது யார்? 17


# கூட்டமைப்பு எம்.பிக்களை கொலை செய்யச் சதியா?



### ஹத்துருசிங்கவும் கே.பியும் இணைந்து திட்டம்:

### சபையில் சந்தேகம் வெளியிட்டார் ரணில்

கொழும்பு, ஏப்ரல் 11

யாழ். மாவட்டத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்கவும், விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தராக இருந்த கே.பியும் தனியான ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்பட்டு வருகின்றனர். இந்தத் திட்டத்தின் கீழ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களைப் படுகொலை செய்யவும் திட்டம் இருக்கின்றதோ தெரியவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுச் சபையில் சந்தேகம் வெளியிட்டார்.

பிரதமர் என்ற பதவி மிகவும் கௌரவமானது.

பார்க்க பக்கம் 04

## தமிழர் மீதான அராஜகங்களை உடனடியாகத் தடுத்து நிறுத்துக

### 'உதயன்' தாக்குதல் குறித்தும் சபையில் சம்பந்தன் காட்டம்

கொழும்பு, ஏப்.11

'உதயன்' சுயாதீனமான பத்திரிகை. அதில் வரும் செய்திகள் அரசினால் ஜீரணிக்க முடியாதவையாகும். நாட்டில் இன்று ஊடக சுதந்திரம் இல்லை என்பதையும் கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்பதையும் 'உதயன்' மீதான தாக்குதல்கள் எடுத்துக்காட்டுகின்றன. இத்தாக்குதல்கள் ஜனநாயக வழியில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் கருத்து வெளியிடும் சுதந்திரத்தின் மீதானவையாகும். இத்தாக்குதல்கள் இலங்கை அரசின் தீவிர ஆதரவுடனும் சம்மதத்துடனும் இணைவுடனும் நடத்தப்படுகின்றன.''

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்செயலை உடனடியாக

பார்க்க பக்கம் 04

## படையினர் குற்றமற்றவர்கள்

### இராணுவ நீதிமன்றம் மீண்டும் வலியுறுத்து

கொழும்பு,ஏப்.11

நடந்து முடிந்த போரின் இறுதி நாள்களில் பொது மக்கள் இருந்த பகுதிகளை நோக்கி இலங்கை இராணுவம் குண்டுவீசித் தாக்குதல் நடத்தியது என்ற குற்றச்சாட்டிலிருந்து இராணுவத்தை விடுவித்து இராணுவ நீதிமன்றம் மேலும் ஒரு புதிய அறிக்கையை வெளியிட்டுள்ளது.

குற்றச்சாட்டுகள் இராணுவத்தின் மீதே சுமத்தப்பட்டுள்ள நிலையில், சில குறிப்பிட்ட சம்பவங்கள் குறித்து இராணுவம் நடத்தியுள்ள விசாரணைகள் தொடர்பாக மனித உரிமை நிறுவனங்கள் சந்தேகங்களை வெளியிட்டிருந்தன.

இராணுவ நீதிமன்றத்


பார்க்க பக்கம் 04

## பொது இடத்தில் நேற்று புகைபிடித்த இந்திய எம்.பி.

யாழ்ப்பாணம்,ஏப்.11

பொது இடங்களில் புகை (சிகரெட்) பிடிக்கக்கூடாது என்று இந்தியாவிலும் இலங்கையிலும் சட்டங்கள் இருந்தபோதும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நேற்று யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் அதிகம் கூடியிருந்த பகுதியில் புகைப்பிடித்தார். பொலிஸாரும் யாழ்.மாநகர முதல்வரும் அதனைப்

பார்க்க பக்கம் 04



## ஜூனுக்கு முன்னர் வடக்கில் தேர்தலை நடத்த முடியுமா?

### அரசுக்கு கூட்டமைப்பு சவால்

கொழும்பு, ஏப்.11

ஜெனிவாத் தீர்மானத்தை அடியோடு நிராகரிப்பதாக அறிவித்துள்ள அரசு, நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை அமுலாக்கம் மற்றும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் வடக்குத் தேர்தல் நடத்தப்படும் என சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளையும் கூட நிராகரிக்கிறதா எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேள்வி எழுப்பியது.

அரசின் இந்த நடவடிக்கைகள் குறித்து சர்வதேச சமூகம் அவதானத்துடன் இருக்கவேண்டும் எனத் தெரிவித்த கூட்டமைப்பின்

பார்க்க பக்கம் 04

## கழுத்து இறுகி சிறுமி சாவு

யாழ்ப்பாணம்,ஏப்.11

இளவாலையைச் சேர்ந்த 9 வயதுச் சிறுமி ஒருவர் கழுத்து நெரிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

இளவாலை சென்.யூட்ஸ் வீதியில் வசிக்கும் ரூபன் நிலாங்கினி (வயது -9) என்ற பாடசாலை மாணவியே

பார்க்க பக்கம் 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையால் மண்ணெண்ணெயில் விழுந்த பாம்பாக அரசு

## மனோ கணேசன் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஏப்.11

கடந்த காலங்களில் உருவாக்கப்பட்ட ஒப்பந்தங்கள், அறிக்கைககளை குப்பைத் தொட்டியில் போட்டது போன்று நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையைக் குப்பைத் தொட்டியில் போடமுடியாது.

இது ஐ.நா.சபை வரை இந்த அரசால் முன்வைக்கப்பட்டுள்ளது. அதனால்தான் மண்ணெண்ணெயில் நனைந்த சாரைப் பாம்பு போன்று அரசு துடிக்கின்றது என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கத்தின் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பிரதம சேனாதிபதியாக இருக்கும் பொதுபல சேனா அமைப்பு, நாட்டில் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்களுக்கு எதிராக நடத்திய போராட்டங்கள் போதாதென்று தற்போது அமெரிக்காவுக்குச் சென்றுள்ளது.

இனிவரும் நாள்களில் புலம்பெயர் நாடுகளிலுள்ள முஸ்லிம்களும் இவர்களால் பிரச்சினைகளைச் சந்திக்கப் போகிறார்கள். இவர்கள் உண்மையில் பௌத்த தர்மத்தைக் காக்கப் போராடுபவர்கள் என்றால், இலங்கையில் அமையவுள்ள சூதாட்ட விடுதிக்கு எதிராகப் போராட்டம் நடத்த வேண்டும்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அரசின் உண்மை முகத்தை தோலுரித்துக் காட்டிவிட்டார். ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் எந்தவொரு நாட்டுடனும் பேசமாட்டோம் எனச் சொல்லி உலக நாடுகளுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை மறந்து பேசுகிறார்.

ஐ.நா.செயலரின் அறிக்கையை மூடி மறைப்பதற்காக நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையைத் தயாரித்துக் காட்டிவிட்டுத் தற்போது அதனைக் குப்பையில் போட முயல்கின்றனர். இந்த அறிக்கை ஐ.நா.சபையின் முன் வைக்கப்பட்டுள்ளதென்பதை மறந்து பேசுகின்றனர்.

தென்னிந்திய தமிழ்ப் படங்களை இலங்கையில் தடை செய்ய வேண்டும் என்று கோரி இன்னொரு அணியினர் கிளம்பியுள்ளனர். இதனைத் திரையிடாவிட்டால் அவர்களுக்கு நட்டமில்லை. உங்கள் திரைப்படக் கூட்டுத்தாபனத்துக்கே நட்டம்- என்றார். (த-5)

# இனங்களுக்கு இடையில் நல்லிணக்கம் அவசியம்

## ஹக்கீமிடம் ஆஸி.தூதுவர் எடுத்துரைப்பு

கொழும்பு,ஏப் 11

இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஏற்படுவது அவசியம் என இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் ரொபின் மூடி தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீமுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு ஆள்களைக் கடத்துவது மற்றும் அதனோடு தொடர்பான குற்றச் செயல்களை முறியடிப்பதற்கு ஆஸ்திரேலிய அரசுக்கு இலங்கை அரசு வழங்கி வரும் ஒத்துழைப்புக்கும் அமைச்சருடனான சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

தூதுவர் அமைச்சர் ஹக்கீமிடம் நன்றி தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடலில் கொழும்பிலுள்ள ஆஸ்திரேலியத் தூதரக இரண்டாவது செயலாளர் நடாலியா எயுஎப், நீதி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் அனூஷா முனசிங்க, அமைச்சரின் இணைப்புச் செயலாளர்களான சட்டத்தரணி எம்.எச்.எம். சல்மான் மற்றும் ரஹ்மத் மன்சூர் ஆகியோரும் கலந்துகொண்டனர். (த)

# தேசிய லொத்தர் சபை அம்பாந்தோட்டைக்கு

கொழும்பு,ஏப் 11

தேசிய லொத்தர் சபையைக் கொழும்பிலிருந்து அம்பாந்தோட்டைக்குக் கொண்டு செல்வதற்கான ஒரு முன்னெடுப்பைப் பொது நிறுவனங்கள் பற்றிய நாடாளுமன்றக் குழு இனங்கண்டுள்ளது என நாடாளுமன்றில் தெரிவிக்கப்பட்டது.

தேசிய லொத்தர் சபையில் அண்மையில் நடந்த கூட்டத்தில் இது தொடர்பில் உறுதி செய்யப்பட்டது. பொது நிறுவனங்கள் பற்றிய நாடாளுமன்றக் குழு கூட்டத்தில், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, ரவி கருணாநாயக்க, எரான் விக்ரமரத்ன, மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தத் திட்டத்தை நாடாளுமன்ற உறுப்பினர் ஜயசேகர சபையில் பிரஸ்தாபித்தார். லொத்தர் சபை அலுவலகம் அம்பாந்தோட்டைக்குக் கொண்டு செல்லப்பட்டால் அதன் ஊழியர்களுக்குப் பயணம் செய்வதிலும் தங்குமிட வசதியிலும் பெரும் பிரச்சினைகள் ஏற்படும் என அவர் கூறினார். இதன்போது, பிரதி நிதி அமைச்சரான சரத் அமுனுகம, தேசிய லொத்தர் சபை இடமாறுவதை மறுக்கவும் இல்லை. உறுதி செய்யவும் இல்லை. (த)

# “உங்களுக்கு எப்போதும் குறை கூறுவதே வேலை”

## மக்கள் மீது பாய்ந்து வீழ்ந்த மாநகர முதல்வர்



யாழ்ப்பாணம்,ஏப்.11

இந்திய வீட்டுத் திட்டத்தில் உள்ள குறைபாடுகள் மற்றும் தமக்குள்ள பிரச்சினைகளை இந்திய நாடாளுமன்றக் குழுவிடம் எடுத்துரைத்த மக்களை அனைவரும் பார்த்திருக்கக் கடுமையாக மிரட்டினார் யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா.

''நீங்கள் எப்பவும் குறை கண்டு பிடிச்சுச் சொல்லிக் கொண்டிருங்கோ. இதெல்லாம் சின்ன அஜெஸ்மென்ட்தான். நீங்கள் பேசாமல் இருங்கோ'' என்று மிரட்டல் பாணியில் கூறி குறைகளை வெளியிட்ட மக்களின் வாய்க்குப் பூட்டுப் போட்டார் முதல்வர்.

யாழ்.மாவட்டத்துக்கு வருகைதந்துள்ள அனைத்துக் கட்சி இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேற்றுப் புதன்கிழமை காலை 10 மணியளவில் கொழும்புத்துறை, மகேந்திரபுரம் பகுதிக்குச் சென்றது. அங்கு இந்திய அரசின் முன்னோடி வீட்டுத் திட்டத்தில் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளை இந்தக் குழுவினர் பார்வையிட்டனர்.

இந்தியக் குழுவினருடன் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ்.மாவட்ட உதவிச் செயலாளர் சாம்பசிவம் சுதர்சன், யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் ஆகியோருடன் யாழ்.மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜாவும் சென்றிருந்தார்.

இதன்போது இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களின் ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று பார்வையிட்டனர். மக்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வீடுகளிலுள்ள குறைபாடுகளை இந்தியக் குழுவிடம் சுட்டிக்காட்டினர் மக்கள்.

'மழைக்கு கூரையால வீட்டுக்க தண்ணி ஒழுகுது, கதவு உடைஞ்சு போச்சுது , நிலம் வெடிக்குது'' என்று மக்கள் தங்கள் பிரச்சினைகளை இந்தியக் குழுவிடம் தெரிவித்தனர்.

இதன்போது அங்கு நின்ற சகல அதிகாரிகளும் பேசாமல் இருக்க யாழ்.மாநகர சபை முதல்வர் மட்டும் ''தங்களுக்கு எப்பவும் குறைகண்டு பிடிக்கிறது தான் வேலை. இதெல்லாம் சின்ன அஜெஸ்ட்மென்ட். உங்களுக்கு இவ்வளவு பெரிய வீட்டைக் கட்டித் தந்திருக்கு அதை விட்டு குறைசொல்லுறியள்'' என்று கடுமையாகப் பொரிந்து தள்ளினார்.

இதற்கு இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் ''அவர்கள் தங்களின் பிரச்சினையைச் சொல்லட்டும்'' என்று கூறினார்.

குறித்த பகுதிக்கான குடிதண்ணீர் விநியோகத்தை யாழ்.மாநகர சபை ஒழுங்காகச் செய்வதாக மாநகர சபை முதல்வர் தெரிவிக்கும் போதே இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வீட்டுக்காரரிடம் தண்ணீக் குழாய் எங்கே உள்ளது எனக் கேட்டனர். அதற்கு வீட்டுக்காரர்கள் தண்ணீர் வருவதில்லை எனக் கூறினர். அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தண்ணீர் வருவதில்லையா என வீட்டுக்காரரிடம் கேட்டார்.

உடனே யாழ்.மாநகர முதல்வர் ''உங்களுக்குத் தமிழ் தெரியுமா என்று நாடாளுமன்ற உறுப்பினரிடம் கேட்டுவிட்டு அங்கு வழிந்து கொண்டு நின்றார்.

இதன்பின்னர் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் எழுதுமட்டுவாழில் நிர்மாணிக்கப்பட்டு வரும் இந்திய வீட்டுத் திட்டத்தைப் பார்வையிட்டனர்.

தொடர்ந்து இந்திய அரசின் நிதியுதவியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அச்சுவேலி பேட்டையையும் கைத்தொழில் பேட்டையும் அதன் பின்னர் குருநகர் வடகடல் வலைத் தொழிற்சாலை, காங்கேசன்துறை துறைமுகம் என்பவற்றையும் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். (த-5-9)

# மீனவர்களைக் காப்பாற்ற கச்சதீவை பெறுவதே வழி

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கூறுகிறது

புதுச்சேரி,ஏப் 11

இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்படுவதை நிறுத்துவதற்குக் கச்சதீவை இலங்கையிடமிருந்து மீளப்பெறுவதே ஒரேயொரு வழியென இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் புதுச்சேரி மாநில செயலாளர் ஆர்.விஸ்வநாதன் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் தமிழ்நாடு அரசு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கில் புதுச்சேரி நிர்வாகம் தலையீடு செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கைக் கடற்படையின் தாக்குதல் காரணமாக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மீனவர்களால் தமது வாழ்வாதாரத்தை ஈட்டிக்கொள்ள முடியாமல் உள்ளது எனவும் ஆர்.விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சரான வி.நாராயணசாமி தமிழ்நாட்டில் இலங்கைக்கு எதிரான கிளர்ச்சிகள் காரணமாகவே இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படை தாக்குகின்றது என இந்த தாக்குதல்களை நியாயப்படுத்துவதை ஏற்கமுடியாது என்றும் விஸ்வநாதன் கூறினார். (த)

# ஆஸி.எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தோல்வி

கான்பரா,ஏப் 11

ஆஸ்திரேலியா எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தோல்வி கண்டுள்ளதாக எதிர்கட்சித் தலைவர் ரொனி அல்பெட் குற்றம் சாட்டினார்.

66 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களுடன் சென்ற படகொன்று ஆஸ்திரேலியா எல்லைக்குள் நுழைந்தமை தொடர்பாகவே அவர் ஆஸ்திரேலியா அரசுக்கு எதிரான இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இந்தப் படகு பேர்த்தில் இருந்து 400 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள ஜெரால்டன் துறைமுகத்தினுள் நுழைந்துள்ளது. இந்தப் பின்னணியிலேயே எதிர்க்கட்சித் தலைவரின் இந்தக் குற்றச்சாட்டு வெளியாகியுள்ளது.

தற்போது உள் நுழைந்த படகு இலங்கையிலிருந்து வேறு எங்கும் செல்லாது நேரடியாக ஜெரால்டன் துறைமுகத்தினுள் நுழைந்துள்ளது. இந்த 66 புகலிடக் கோரிக்கையாளர்களில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் அடங்கியிருந்தனர். இவர்கள் கிறிஸ்மஸ் தீவுக்கு அனுப்பிவைக்கப்படுவரெனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (த-க)

# 1,230 வன்னி வர்த்தகர்களுக்கு இந்திய அரசின் நிதியுதவிகள்

இறுதிப் போரில், பாதிக்கப்பட்ட கிளிநொச்சி - முல்லைத்தீவு வர்த்தகர்கள் ஆயிரத்து 230 பேருக்கு இந்திய அரசின் நிதியுதவிகள் இன்று வழங்கப்படவுள்ளன. இதற்காக மேற்படி பிரதேசங்களுக்கு இந்திய உயர்மட்டக் குழுவினர் செல்லவுள்ளனர்.

வடபகுதிக்கு மூன்று நாள் பயணமாக வந்துள்ள இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயர்மட்டக் குழுவினர் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளை நேரில் பார்வையிட்டு வருகின்றனர்.

இந்திய அபிவிருத்தி கூட்டு நிர்வாகம் மற்றும் வெளிவிவகார அமைச்சின் சிறப்புச் செயலாளருமான எஸ்.இராகன் மற்றும் இந்திய சிறப்பு நிதி ஆலோசகரும் வெளிவிவகார அமைச்சின் சிறப்புச் செயலாளருமான [illegible] ஆகிய இருவருமே கிளிநொச்சிக்குச் செல்லவுள்ளனர்.

இன்று காலை 8 மணிக்கு, பளை சோரன்பற்றுக் கிராமத்தில் 65 வீடுகளை மக்களிடம் கையளிக்கவுள்ளனர். முற்பகல் 9.30 மணிக்கு முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிலுள்ள சுதந்திரபுரம் கிராமத்துக்குச் செல்வர். பின்பு மு.ப. 11 மணியளவில் கிளிநொச்சி கூட்டுறவு மாநாட்டு மண்டபத்தில் வர்த்தகர்களுக்கான காசோலைகள் வழங்கும் நிகழ்விலும் இவர்கள் பங்கேற்பர். இதற்காக 91 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

நண்பகல் 12 மணியளவில் கிளிநொச்சி அறிவியல் நகரில் யாழ்.பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம் மற்றும் விவசாயபீடத்தின்திறன் விருத்தித் துறைக்கான கட்டுமானப்பகுதியையும் சென்று பார்வையிடவுள்ளனர். (த-5-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரிசு நிலங்களை பயன்படுத்துங்கள்

## வலி . மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் சுட்டிக்காட்டு

*யாழ்ப்பாணம், ஏப்.11*

*வலி. மேற்கில் பயன்படுத்தப்படாத தரிசு நிலங்களை பயன்பாட்டுக்கு உட்படுத்த வேண்டும். இதற்காக வலி. மேற்குப் பிரதேச சபையும், பிரதேச செயலகமும் இணைந்த வகையில் முதலீட்டுத் திட்டங்கள், கைத்தொழில் துறைகள், புதிய தொழிற்சாலைகள், வீடமைப்புத் திட்டங்களை முன்வைக்க வேண்டும்.*

இவ்வாறு வலி. மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் த.நடனேந்திரன் தெரிவித்தார்.

பயன்பாடின்றி உள்ள தரிசு நில அபிவிருத்தி தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெளிநாட்டு, உள்நாட்டு முதலீட்டாளர் வருகை தந்து பல்வேறு கருத்தமர்வுகளில் பங்குபற்றுகின்றனர்.

அவர்களின் தொனிப் பொருளில் முதலீடு செய்வதற்கு தரிசு நிலங்கள் தேவை என்று சுட்டிக் காட்டுகின்றனர்.

ஆனால், வலி.மேற்கில் பயன்படுத்தப்படாத தரிசு நிலங்கள் பல இனங்காணப் பட்டுள்ளன.

இவ்வாறான நிலங்களை மீள் பயன்பாட்டுக்கு ஈடுபடுத்தி பல்வேறு முதலீட்டு வாய்ப்புக்களை ஏற்படுத்தி, பொருளாதார வளங்களை மீளக் கட்டியெழுப்பலாம்.

இதற்குப் பிரதேச செயலகமும் பிரதேச சபையும் இணைந்த வகையில் செயற்பட வேண்டும்.

தரிசு நிலங்கள் மீள பயன்பாட்டுக்கு ஈடுபடுத்தப்பட்டு தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டால் பெருமளவிலான வேலை வாய்ப்புக்கள் உருவாகும்.

எனவே மீள் பயன்பாட்டுக்கு ஈடுபடுத்தக் கூடியதான வளங்களை இனம் கண்டு வழங்க இரு தரப்பினரும் முன்வரவேண்டும்.

அத்துடன் வெளிப்படுத்தக் கூடிய வகையில் பயன்படுத்தக் கூடிய இடங்களை விளம்பரப்படுத்தி உதவ முன்வரவேண்டும் என்று மேலும் கூறினார். (ம-50)

# சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் வெற்றிடம் விரைவில் நிரப்பப்படும்

யாழ்ப்பாணம், ஏப்.11

யாழ்.மாவட்டத்தில் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களின் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கையைச்சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபை மேற்கொண்டுள்ளது. கடந்த 13 வருடங்களுக்குப் பின்னர் இதற்கான நேர்முகப் பரீட்சை கொழும்பில் இடம் பெற்றது.

யாழ்.மாவட்டத்தில் இருந்து 2 ஆயிரத்து 100 பேர் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

ஜி.சீ.ஈ. சாதாரணம் மற்றும் உயர் தரத்தில் சித்தியடைந்தவர்களுக்கும் சமூக சேவையில் ஈடுபாடு கொண்டவர்களுக்கும் இந்த நேர்முக தேர்வில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் சமுர்த்தி ஊக்குவிப்பாளர் பதவி 1998 இல் முதல் முதல் வழங்கப்பட்டு பின்னர் தகுதி காண் காலத்தின் பின்னர் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் தரம்-III க்கு நியமனம் செய்யப்பட்டனர்.

தற்போது நேரடியாக சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் நியமனம் வழங்கப்படவுள்ளது. இதேவேளை- சமுர்த்தி அலுவலர் பதவிகள் நீண்ட காலமாக வெற்றிடமாக இருப்பது குறித்து பிரதேச செயலாளர்கள் அரச அதிபருக்கு பல தடவைகள் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-50)

# கொடிகாமம் சந்தையில் தராசுகளில் மோசடி

### நடவடிக்கை எடுக்கக் கோருகின்றனர் மக்கள்

கொடிகாமம் பொதுச் சந்தை வியாபாரிகளால் பயன்படுத்தப்படும் தராசுகள் குறித்து பொதுமக்கள் அதிருப்தி தெரிவித்தனர்.

குறிப்பாக மீன் விற்பனைப் பிரிவில் கையில் தராசை வைத்துக்கொண்டு நிறுக்கும் போது குளறுபடி செய்வதாகவும். இவ்வாறு செய்வதால் ஒரு கிலோ கடலுணவு வெளியில் நிறுத்துப் பார்க்கும்போது 900 கிராம் இருப்பதாகவும் தெரிவித்தனர்.

கொடிகாமம் மீன் சந்தையில் பயன்படுத்தப்படும் தராசுகள் தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்துமாறும் இல்லையேல் சாவகச்சேரி பொதுச் சந்தையின் கடலுணவு விற்பனைப் பிரிவில் நகரசபையினால் வைக்கப்பட்டுள்ளது போன்று இலத்திரனியல் தராசை சந்தை வாசலில்வைக்கநடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் கேட்டுள்ளனர்.

இந்தவிடயம் தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளரிடம் கேட்ட போது, சந்தை குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் இது குறித்த எந்தவித நடவடிக்கையையும் உடனடியாக எடுக்க முடியாது.

அத்துடன் இது குறித்து மக்களும் எந்த விதமான முறைப்பாடுகளும் செய்யவில்லை. மக்கள் முறையிடும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்கப் படும்.-என்றார். (ம-9)

# பவுசர்– பஸ் விபத்து ; மூவர் படுகாயம்

யாழ்ப்பாணம்,ஏப்.11

பெற்றோல் பவுசரும் பஸ்ஸும் நேருக்கு நேர் மோதியதில் மூவர் படுகாயமடைந்தனர். மூவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றுக் காலை 6 மணியளவில் அனுமதிக்கப்பட்டனர்.

அநுராதபுரத்தில் இருந்து வந்த பெற்றோல் பவுசரும், யாழ்ப்பாணத்தில் இருந்து விடுமுறையில் சென்றுகொண்டிருந்த கடற்படையினரின் பஸ்ஸுமே இவ்வாறு நேருக்கு நேர் மோதின. நேற்றுக் காலை 5 மணியளவில் கைதடிப் பாலத்துக்கு அண்மையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இந்தவிபத்தின் போது பெற்றோல் பவுசர் சாரதி விமல் சந்திரசிறி வயது (வயது-52) உதவியாளர் அத்துல வயது (வயது-24) ஆகியோரும் பஸ்ஸில் பயணித்த ஏ.எஸ்.குமார வயது (வயது-29) ஆகியோரும் காயமடைந்தனர். இந்த விபத்தையடுத்து அந்தப் பகுதியில் சிலமணிநேரம் போக்குவரத்துக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-ரி)

# கல்வியியல் முதுமாணி கற்கை நெறிக்கு விண்ணப்ப முடிவு இன்று

யாழ்ப்பாணம்,ஏப். 11

2013-2014 கல்வியியல் முதுமாணி கற்கை நெறிக்கான இறுதி விண்ணப்ப முடிவு திகதி இன்று வியாழக் கிழமை ஆகும்.

இதுவரை ஆயிரம் பேர் இதற்கு விண்ணப்பித்துள்ளனர்.

பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வு மூலம் 100 பேர் கல்வியியல் முதுமாணி கற்கை நெறிக்கு தேர்வு செய்யப்படுவர். இவ்வாறு உயர்பட்ட கற்கைகள் நெறி பீடாதிபதி பேராசிரியர் ஏ.சத்தியசீலன் தெரிவித்தார்.

கல்வியியல் முதுமாணி கற்கைநெறி தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களை விட தற்போது விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. விண்ணப்பப் படிவம் ஒன்று ஆயிரம் ரூபாவாக உள்ளது.

2013-2014 கல்வியாண்டுக்கு 100 பேரை மட்டுமே உள்வாங்க முடியும்.

எதிர்காலத்தில் இந்தக் கற்கைநெறிக்கு அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது தொடர்பில் ஆலோசிக்கப்படும் என்று மேலும் தெரிவித்தார். (ம-50)

# உளமருத்துவ கருத்தரங்கு

தென்மராட்சி,ஏப். 11

தென்மராட்சி கல்வி வலய அதிபர்கள், ஆசிரியர்களுக்கான உள மருத்துவ கருத்தரங்கு நாளை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இடம் பெறும். உள மருத்துவ நிபுணர் தேவானந்தன் கருத்தரங்கில் வளவாளராக கலந்து கொள்வார்.

இந்தக் கருத்தரங்கில் வலயப் பாடசாலைகளின் அதிபர்கள், வழிகாட்டலும் ஆலோசனை வழங்கல் சேவைக்குப் பொறுப்பான ஆசிரியர்கள், விசேட கல்விக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் உட்பட ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்துள்ளார். (ம-9)

# தரம் 5 மாணவர்களின் சித்தி வீதத்தை உயர்த்தும் பரீட்சை

தென்மராட்சி,ஏப். 11

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் எதிர் வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் சித்தி வீதத்தை உயர்த்தும் நோக்கில் வலயத்தின் ஆரம்பக் கல்விப் பிரிவினரால் கடந்த மார்ச் மாதம் தொடக்கம் மாதம் ஒரு பயிற்சிப் பரீட்சை நடத்தத் திட்மிடப் பட்டது.

இதன் பிரகாரம் கடந்த மார்ச் 15 ஆம் திகதி முதலாவது பரீட்சை நடத்தப்பட்டது.

பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் 164 பேர் 150 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர் என்று குறிப் பிடப்பட்டுள்ளது.

இவர்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

சி.ஆதனா- குடமியன் அ.த.க.பாடசாலை-197 புள்ளிகள்

ஸ்ரீ.வைஷ்ணவி- சாவகச்சேரி மகளிர் கல்லூரி-196 புள்ளிகள்

ம.வீணஜா-அல்லாரை அ.த.க.பாடசாலை-194 புள்ளிகள்

ஏப்ரல், மே, ஜூன், ஜூலை ஆகிய மாதங்களிலும் பரீட்சைகள் நடத்தப்படும் என்று கூறப்பட்டுள்ளது. (ம-9)

# சிவில் பாதுகாப்புக் குழுக்களின் ஒத்துழைப்புடன் பொலிஸ் ரோந்து

வலி. வடக்கு ஏப் 11

இளவாலைப் பொலிஸ் பிரிவில் உள்ள சிவில் பாதுகாப்புக் குழுக்களின் பூரண மான ஒத்துழைப்புடன் இரவு ரோந்து நடவடிக்கைகளை பொலிஸார் சிறந்த முறையில் மேற்கொண்டு வருகின்றனர் என்று இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டாரா தெரிவித்துள்ளார்.

இளவாலைப் பொலிஸ் பிரிவில் இரவு பகல் வேளைகளில் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதற்குப் பொலிஸாருடன் சிவில் பாதுகாப்புக் குழுக்களின் அங்கத்தவர்களும் பக்கத் துணையாக இருந்து வருகின்றார்கள். இதன் காரணமாக பல்வேறு குற்றச் செயல்களையும் கட்டுப்படுத்தக் கூடியதாக இருப்பதுடன் குற்றங்கள் இடம்பெற்றால் அதனை உடனடியாக கண்டு பிடிக்கக் கூடியதாகவும் உள்ளது.

இது பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையே காணப்படும் நல்லுறவின் அடிப்படையில் இடம் பெற்று வருகின்றது என்றும் கூறப் பட்டது. (ம-86)

# முள்ளானை காணியை சுவீகரிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.11

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட முள்ளானை காணியை படையினர் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதன் மூலம் அரச நில அளவையாளர் மூலம் நிலங்களை அளவீடு செய்து கையகப்படுத்தி உள்ளனர்.

முள்ளானை ஜே/1546 பிரிவில் உள்ள காணி உடைமையாளர்கள் வெளிநாட்டில் உள்ள நிலையில் காணி சுவீகரிப்பதற்கான நடவடிக்கையை 513 பிரிகேட் படையணிக்கு உட்பட்ட இளவாலை படை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் படைத்தரப்பு தனியாரின் காணியில் அனுமதியின்றி நிரந்தரமாக குடியமர்வுக்கு நடவடிக்கை எடுத்துவருகின்றது.

இந்தச்சூழ்நிலையால் அந்தப்பகுதி மக்களிடையே பெரும் பதற்றச் சூழல் நிலவிவருகிறது என்று தெரிவிக்கப் படுகிறது. (ம)

# புத்தாண்டு சந்தை

சமுர்த்தி மற்றும் வாழ்வெழுச்சி கிராம புத்தாண்டு விற்பனைச் சந்தையும் உற்பத்திப் பொருள்கள் கண்காட்சியும் இன்றும் நாளையும் காலை 9 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை சென். ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்துக்கு அருகிலுள்ள இளம்சிங்கம் சனசமூக நிலைய விளையாட்டுத் திடலில் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரனும் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்டசமுர்த்தி இணைப்பாளர் ஆ.ரகுநாதன், யாழ்.மாநகரசபை முன்னாள் பிரதி முதல்வர் தி.இளங்கோ ஆகியோர் கலந்து கொள்வர். (வ)

# பஸ் தரிப்பிடம் இன்மையால் பயணிகள் பெரும் சிரமம்

தென்மராட்சி, ஏப்.11

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக பஸ்தரிப்பிடம் இன்மையால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வைத்தியசாலைக்கு முன்பாக யாழ்ப்பாணம் செல்லும் பயணிகளுக்கான நிரந்தர பஸ் தரிப்பிடம் நீண்டகாலமாக இருந்து வந்தது. ஏ-9வீதி அகலிப்பின் போது அந்தப் பஸ் தரிப்பிடம் அகற்றப்பட்டது.

தற்போது வீதி அபிவிருத்திச் சபையால் ஏ-9 வீதியில் பஸ்தரிப்பிடக்குறியீடு அமைத்த போது வைத்தியசாலைக்கு முன்பாக ஒரு பக்கத்துக்கு மட்டும் தரிப்பிட குறியீடு போடப்பட்டது.

ஏனைய பகுதிக்கு குறியீடு போடாததால் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களும், பார்வையாளர்களும் 200 மீற்றருக்கு அப்பால் உள்ள பஸ் தரிப்பிடத்தில் இறங்கி நடத்து வர வேண்டிய நிலையில் உள்ளனர்.

அத்துடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வெளியேறும் நோயாளர்களும் பஸ் தரிப்பிடமில்லாததால் கஷ்டமடைகின்றனர்.

உரிய அதிகாரிகள், நோயாளர்களின் நலன்கருதி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக பஸ்தரிப்பிடக் குறியீடு அமைக்க வேண்டும் என்று கேட்டுள்ளனர். (ம-9)

# உணவகங்கள் அனைத்திலும் சுகாதாரம் பேண அறிவுறுத்து

வலி.வடக்கு,ஏப்.11

தெல்லிப்பழை பிரதேச வைத்தியதிகாரி பிரிவில் உள்ள அனைத்து தேநீர் கடைகள், குளிர்பான கடைகள், உணவகங்கள் அனைத்தும் சுகாதார முறைக்கு உட்பட்ட முறையில் கடைகளை அமைக்க வேண்டும் என பொது சுகாதார பரிசோதகர்களால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஒரு வார காலத்தில் உரிய முறையில் கடைகள் சீர் செய்யப்பட வேண்டும் எனவும், இதனைப் பின்பற்றாத கடைகள் 'சீல்' வைக்கப்படுவதுடன் உரிமையாளரை சட்டத்தின் முன் நிறுத்த சட்டநடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் எனவும் அறிவுறுத்தல்கள் வழங்கப் பட்டுள்ளன.

ஏற்கனவே உரிய முறையில் சுகாதார நடவடிக்கைகளை பின்பற்றாத தெல்லிப் பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான துர்க்கையம்மன் ஆலயத்துக்கு அருகில் உள்ள தேநீர் கடை உட்பட கீரிமலைப் பகுதியிலும் நான்கு கடைகளுக்கு எதிராகவும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. கடைகளும் உரிய திருத்தங்களை செய்யும் வரை திறக்க வேண்டாம் என தடை செய்யப்பட்டுள்ளது எனவும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜூனுக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அரசுக்குத் துணிவிருந்தால் - நம்பிக்கையிருந்தால் எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் வடக்குத் தேர்தலை நடத்திக் காட்டட்டும் என்றும் சவால் விடுத்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று (நேற்றுமுன்தினம்) நாடாளுமன்றில் எழுப்பிய கேள்விக்கு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் பதிலளிக்கையில், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இம்முறை நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் தாம் முற்றுமுழுதாக நிராகரிக்கிறார் எனத் திட்டவட்டமாக அறிவித்தார்.

இந்தத் தீர்மானத்தில் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை நடைமுறைப்படுத்தல், வடக்குத் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் நடத்துதல் போன்ற பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவ்வாறெனில், இவற்றையும்கூட அரசு நிராகரிக்கிறதா?

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக இந்தியா, அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச சமூகத்துக்கு அரசு பல வாக்குறுதிகளைக் கொடுத்துள்ளது. இருப்பினும், அவை அனைத்தையும் அரசு நிராகரித்துள்ளது. இப்போது சர்வதேச சமூகத்துக்குக் கொடுத்த விசேடமான இந்த வாக்குறுதியையும் நிறைவேற்றமுடியாது என அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கூறியுள்ளார். வாக்குறுதிகள் அனைத்தையும் தாம் மீறிச் செயற்படுவார் என அவர் கூறுகிறார். எனவே, இவை குறித்து சர்வதேச சமூகம் அவதானத்துடன் இருக்கவேண்டும்.

வடக்குத் தேர்தல் அடுத்த வருடம் நடத்தப்படும் - அடுத்த வருடம் நடத்தப்படும் எனக்கூறி தற்போது நான்கு வருடங்கள் கழிந்துள்ளன. வடக்குத் தேர்தலை நடத்தினால் அரசு நிச்சயமாகத் தோற்றுவிடும். தமது தோல்வியை ஏற்றுக்கொள்ள மனமில்லாததால் தான் தேர்தலை அரசு பிற்போடுகிறது.

வடக்கு மக்களின் ஆதரவு அரசுக்கு இருக்கிறதா என்பதைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு இது நல்லதொரு தருணம். அத்துடன், இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன? தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் மக்களின் ஆதரவு எந்தளவில் இருக்கிறது? என்பதைத் தெரிந்து கொள்வதற்கும் இது நல்லதொரு தருணம்.

எனவே, துணிவிருந்தால் - நம்பிக்கையிருந்தால் வடக்குத் தேர்தலை எதிர்வரும் ஜூன் மாதத்திற்குள் அரசு நடத்திக் காட்டட்டும் என நான் அரசுக்குச் சவால் விடுக்கிறேன் - என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்.

## படையினர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தின் விசாரணைகள் தொடர்பான அறிக்கையின் முதல் பகுதி நேற்றுப் புதன்கிழமை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவினால் கையளிக்கப்பட்டது.

சிரேஷ்ட இராணுவக் களநிலைத் தளபதிகள், காலாட் பிரிவுத் தலைவர்கள், பீரங்கிப் படையினர், புலனாய்வுப் பிரிவின் சிவில் நிர்வாகப் பகுதியினர் மற்றும் மனிதாபிமானக் கடமையில் ஈடுபட்டிருந்த மருத்துவர்கள் ஆகியவர்களை இராணுவ நீதிமன்றம் விசாரணைக்குட்படுத்தியிருந்தது.

இராணுவ நீதிமன்றுக்கு வழங்கப்பட்ட சாட்சியங்களின்படி தமிழீழ விடுதலைப் புலிகள், பொதுமக்களைக் கேடயங்களாகப் பயன்படுத்தியும் பொதுமக்கள் மத்தியில் கனரக ஆயுதங்களை வைத்துக்கொண்டும், வயதானவர்கள் , சிறுவர்கள் ஆகியோரைப் படைகளில் சேர்த்தும் அவ்வாறு அவர்களை அபாயத்துக்குட்படுத்தியும் பல்வேறு குற்றங்களைப் புரிந்துள்ளனர் என்பது தெரியவந்துள்ளதாகவும் அந்த விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தரப்பில் சேதங்கள் எதுவும் இல்லாத வகையில் போர் நடத்தப்பட்டுள்ளது என்ற முடிவுக்கு இராணுவ நீதிமன்றம் வந்துள்ளது.

மேலும் சர்வதேச சமூகமானது புலிகள் நடத்திய போர்க்குற்றங்களைத் தடுத்து நிறுத்துவதற்குத் தவறிவிட்டது என்று இராணுவ நீதிமன்றம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இராணுவ நீதிமன்றம் அடுத்தகட்டமாக அதற்குரிய இரண்டாவது விசாரணை தொடர்பாக ஆராயவிருக்கின்றது. கைது செய்யப்பட்ட புலிப் போராளிகள் விசாரணை எதுவும் இன்றி கொல்லப்பட்டனர் என்ற சனல்-4 இன் குற்றச்சாட்டுக்கள் பற்றியதாக இது இருக்கும்-என்று கூறப்பட்டுள்ளது.

## பொது ...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பார்த்துத் தடுப்பதற்கு நடவடிக்கை ஏதும் எடுக்காது வளாவிருந்தனர்.

இலங்கையில் ஈழத் தமிழர்கள் படும் இன்னல்களை நேரில் பார்ப்பதற்காக இந்திய நாடாளுமன்றக் குழுவினர் வருகை தந்துள்ளனர். நேற்று முன்தினம் யாழ்.குடாநாட்டில் சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்களையும் அரசியல்வாதிகளையும் சந்தித்து அவர்கள் பேசினர்.

பின்னர் நேற்று இந்திய அரசின் நிதி உதவியில் இங்கு மேற்கொள்ளப்படும் திட்டங்களை நேரில் சென்று பார்வையிட்டனர்.

காலையில் மகேந்திரபுரம் கிராமத்துக்குச் சென்றனர். இதன்போது இந்திய திரிணாமுல் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சௌகத்தாறோய் வாகனத்திலிருந்து இறங்கியதும் வாயில் "சிகரெட்" புகைத்தபடி வந்தார்.

அவருடன் கூட ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்தியத் துணைத்தூதர் வி.மகாலிங்கம், அரச அதிபர் மாநாகர சபை முதல்வர் மற்றும் பொலிஸாரும் வந்தனர் அத்துடன் பெண்கள் சிறுவர்கள் எனப்பலரும் பார்த்துக்கொண்டு நிற்க சௌகாத்தாறோய் உல்லாசமாக புகைப்பிடித்தார்.

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களின் குறைகளை கேட்டறிவதைவிட ஒளிப்படம் எடுப்பதிலேயே குறியாக இருந்தனர் என்று எமது செய்தியாளர்கள் குறிப்பிட்டனர். (உ-5)

## முல்லையில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இடம்பெற்றது. முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் முன்பாக நேற்று மு.ப. 10 மணிக்குத் திரண்ட ஆயிரக்கணக்கான பொது மக்கள் மற்றும் தமிழ் அரசியல் தலைவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வராஜா கஜேந்திரன் மற்றும் வீ.ஆனந்தசங்கரி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கடல், நில ஆக்கிரமிப்புக்கு எதிரான பதாகைகளை போராட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர். பெருமளவில் இராணுவத்தினர், பொலிஸார், புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டிருந்த போதும் மக்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

சுமார் ஒன்றரை மணிநேரம் இடம்பெற்ற போராட்டத்தின் முடிவில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபரிடம் ஜனாதிபதிக்கான மனு கையளிக்கப்பட்டது. இதன் பின்னர் அரசியல் தலைவர்களின் உரை இடம்பெற்றது.

போராட்டம் முடிவடைந்து மக்கள் கலைந்து செல்ல முற்பட்ட சமயம், அரச ஆதரவாளர்களால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகக் கோஷம் எழுப்பப்பட்டது.

போராட்டக்காரர்களால் ஜனாதிபதிக்கான மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:-

முல்லைத்தீவில் காணி அற்றவர்களின் மொத்த எண்ணிக்கை 11 ஆயிரத்து 429. அத்தோடு விண்ணப்பித்தவர்கள் இன்னும் அநேகமானோர் உள்ளனர். இருந்தபோதும் முஸ்லிம் குடும்பங்களுக்கு மட்டும் 855 ஏக்கர் காணிகள் பகிர்ந்தளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றமை ஏனைய இன மக்களை விசனத்துக்கு உட்படுத்துகின்றது.

வீடமைப்புத் திட்டங்களிலும் தமிழ் மக்களாகிய நாம் புறக்கணிக்கப்படுகின்றோம்.

கரையோர மாவட்டமான எமது மாவட்டத்தில் மீன்பிடியை ஜீவனோபாயமாகக் கொண்ட தமிழ் மக்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் அடிக்கடி நிகழும் இந்திய 'ட்ரோலர்'களின் அத்துமீறலாலும் எமது நாட்டின் தென்பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் தடைசெய்யப்பட்ட கடற்றொழில் உபகரணங்களைப் பயன்படுத்துவதாலும் அன்றாட உணவுக்குக் கூட கையேந்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

கொக்கிளாய்,கொக்குத்தொடுவாய்,கருநாட்டுக்கேணி கிராமங்களைச் சேர்ந்த 656 குடும்பங்களின் 2 ஆயிரத்து 540 ஏக்கர் வயல் நிலங்களுக்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை. இவ் வயல்கள் சகோதர இன மக்களால் செய்கை பண்ணப்பட்டு வருகின்றன.

மேலும் இந்தப் பகுதியைச் சேர்ந்த 11 குடும்பங்களின் விளைநிலமான கம்பித்தரை வெளி என்ற 45 ஏக்கர் வயல் நிலங்கள் தற்போது இல்மனைற் தொழிற்சாலைக்காகக் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் [illegible] பகுதி மக்கள் போல் சமநிலையுடன் வாழ உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - என்றுள்ளது. (த-5)

## கூட்டமைப்பு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இப்பதவியில் இருப்பவர் அதன் உயர் கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையில் பொறுப்புடன் கூற்றுகளையும் பதில்களையும் வெளியிடவேண்டும்.

தெல்லிப்பழைத் தாக்குதல் சம்பவத்தைப் பிரதமர் பார்க்கவில்லை. ஆனால் நான் அங்கு கலந்துகொண்டு நேரில் கண்டேன் என ஆவேசமாகக் கூறினார் ரணில்.

அண்மைக் காலங்களில் வடக்கில் தொடர்ச்சியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் அடாவடித்தனமான தாக்குதல்கள் தொடர்பாகக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சபையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுப் பேசினார்

சம்பந்தனின் கூற்றுகளுக்குப் பதில் அளித்த பிரதமர் கூட்டமைப்பின் குற்றச்சாட்டுகளை ஒட்டுமொத்தமாக நிராகரித்தார்.

இதனைத் தொடர்ந்தே ரணில் விக்கிரமசிங்க தனது கருத்துகளை வெளியிட்டார். அவர் தெரிவித்ததாவது:-

தெல்லிப்பழையில் இடம்பெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் தாக்குதல் நடத்தியவர்களைப் பொலிஸார் கைதுசெய்யவில்லை. ஆனால், பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்ட நபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆனால் பொலிஸார் அவரை உடனடியாக விடுவித்துள்ளனர்.

மற்றுமொருவர் இராணுவ முகாமுக்குள் ஓடியுள்ளார். இவ்வாறான தாக்குதல்களையும் அச்சுறுத்தல்களையும் இராணுவத்தைச் சேர்ந்த ஒரு குழுவினரே மேற்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாக யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி எந்தவிதமான விசாரணைகளையும் நடத்தவில்லை.

கைதுசெய்யப்படும் நபர்கள் பொலிஸாரிடமே ஒப்படைக்கப்பட வேண்டும். ஆனால் யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரிடம் ஒப்படைப்பது ஏன்? - என்றார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் குறுக்கிட்ட பிரதமர், இந்தத் தாக்குதலை நடத்தியவர்களுள் ஐ.தே.கவினரும் இருந்தனர் எனக் கூறப்படுகிறதே - என்றார்.

இதனால் ஆத்திரமடைந்த ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவி பொறுப்பும் கௌரவமும் உடையது. அந்தப் பதவியில் இருப்பவர் பொறுப்புடன் பேசவேண்டும்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் விக்கிரமபாகு கருணாரட்ன, மனோ கணேசன் ஆகியோரும் தமது ஆதரவாளர்களுடன் கலந்துகொண்டனர்.

இத்தனைபேர் முன்னிலையில் தாக்குதல் நடத்தப்பட்டபோதும் எவரும் கைதுசெய்யப்படவில்லை. மக்களால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட அந்த நபர் எங்கே? அவர் யார் என்பதை இந்தச் சபையில் தெரிவிக்க முடியுமா? - என்றும் கேள்விகளைத் தொடுத்து சவால் விட்டார் ரணில் விக்கிரமசிங்க.

(த-சி)

## தமிழர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

நிறுத்தும்படி அரசை வலியுறுத்திய சம்பந்தன், கடந்த காலத்தை மீண்டும் கொண்டுவருவதைத் தவிர்க்கும்படியும் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றில் நேற்று விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த 30 ஆம் திகதி சனிக்கிழமை சுமார் 50 பேர் கொண்ட கும்பல், தேசியக் கொடியை ஏந்திய வண்ணம் ஏ - 9 நெடுஞ்சாலையால் ஊர்வலமாக வந்து நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரனின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அலுவலகத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த கூட்டத்தின் மீது கொங்கிறீட் கற்களாலும் கற்பாறைகளாலும் தாக்குதல் நடத்தியது.

சிறிதரனுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சேனாதிராசா, ஈ.சரவணபவன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் கூட்டத்தில் இருந்தனர். தமிழ் மக்கள் தொடர்பான விடயங்கள் குறித்து சுமார் 100 கிளிநொச்சி வாழ் மக்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரையாடிக்கொண்டிருந்தனர்.

கிளிநொச்சி பொலிஸாரின் முன்னிலையில் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. இதனைத்தடுப்பதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை. இத்தாக்குதலில் 13 பேர் காயமடைந்தனர். உடமைகளுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டது.

இத்தாக்குதல் சம்பவம் வீடியோவில் பதிவு செய்யப்பட்டது. படங்களும் எடுக்கப்பட்டன. தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்களை இலகுவாக அடையாளம் காணக்கூடியதாக இருக்கின்றது.

எவ்வாறாயினும் இத்திகதி வரை ஒருவர் கூட - பொலிஸார் அந்த இடத்தில் சமுகமளித்திருந்தும் கூட - கைது செய்யப்படவில்லை; உண்மையில் இங்கு சமுகமளித்திருந்தவர்களினால் கைது செய்யப்பட்ட ஒரு நபர் இலங்கைப் பொலிஸைச் சேர்ந்த சி.ஐ.டி. பிரிவின் அதிகாரி என்று அடையாளம் காணப்பட்டது.

அவர் அந்த இடத்திற்கு வந்த பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் கையளிக்கப்பட்டார். பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார். அதே போன்று கைது செய்யப்பட்ட ஏனைய இரண்டு நபர்களும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதை அடுத்து உடனடியாக விடுவிக்கப்பட்டு விட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட்டங்கள் மீது இவ்வாறான தாக்குதல்கள் நடத்தப்பட்டமை இது முதல் தடவை அல்ல. 16.06.2011 அன்று அளவெட்டியில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் கூட்டமும் தாக்குதலுக்கு உள்ளானது. தாக்குதல் நடத்தியவர்கள் சீருடையில் காணப்பட்டனர்.

அவர்கள் அடையாளம் காணப்பட்டனர். அச்சம்பவம் குறித்து இன்று வரை எவரும் கைது செய்யப்படவில்லை. குறிப்பாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு முதல் நாள் மக்களுக்கு எதிராக பெரும் வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

அண்மையில் 15.02.2013 அன்று இராணுவப் புலனாய்வினர் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய முன்றிலில் தமிழ் மக்கள் நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்தைக் குழப்பினர். எதிர்க்கட்சித் தலைவரும் உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டிருந்தார். அங்கும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்களை இராணுவம் தலையிட்டு விடுவித்தது.

நடத்தப்பட்ட இத்தாக்குதல்களில் உள்ள பொது அம்சத்தை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். அத்தாக்குதல்கள் பாதுகாப்புப் படையினரால் அல்லது பொலிஸ் படையின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்டுள்ளன. தாக்குதல்கள் நடத்தியவர்கள் அடையாளம் காணப்பட்டும் அவர்கள் கைது செய்யப்படவில்லை. பொலிஸாரின் கண்களுக்கு முன்னேயே இத்தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன. சம்பந்தப்பட்ட அதிகாரத்தரப்பினரின் ஆதரவுடன் நடத்தப்பட்டன என்பது தெட்டத்தெளிவாகின்றது.

கடந்த மூன்றாம் திகதி (3.4.2013) அதிகாலை 'உதயன்' பத்திரிகையின் கிளிநொச்சி விநியோக அலுவலகம் ஆயுத பாணிகளால் தாக்கப்பட்டதுடன் 4 பேர் காயமடைந்தனர். ஒருவர் பலத்த காயமடைந்தார். உடைமைகள் சேதப்படுத்தப்பட்டன. 'உதயன்' பத்திரிகை பிரதிகளுடன் வாகனம் ஒன்று கிளிநொச்சி அலுவலகத்திற்கு வந்தபோது இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கடந்த சில மாதங்களின் முன் 'உதயன்' அலுவலர்கள்மீது நடத்தப்பட்ட மோசமான தாக்குல்களில் இதுவே கடைசியாக நடத்தப்பட்ட தாக்குதலாகும்.

2012 டிசம்பர் மாதத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடந்த ஆர்ப்பாட்டம் ஒன்று பற்றி செய்தி சேகரிக்கச் சென்றிருந்த 'உதயன்' ஆசிரியர் ரி.பிரேமானந்த், இராணுவ அதிகாரிகளாலும் சிவில் உடையில் நின்ற பொலிஸாரினாலும் திரும்பத் திரும்பத் தாக்கப்பட்டார். இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் பத்திரிகை விநியோகத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 'உதயன்' ஊழியர் ஆயுததாரிகள் நால்வரால் தாக்கப்பட்டார். ஊழியரின் மோட்டார் சைக்கிள் எரிக்கப்பட்டது. ஊழியர் உடைந்த கையுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இவ்வாறான தாக்குதல்களில் சம்பந்தப்பட்டவர்கள் இன்னும் கைது செய்யப்படவில்லை.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நசுக்க எடுக்கப்படும் இவ்வாறான முயற்சி எதிர்மறையானதும் முக்கியத்துவமற்றதுமானதுமாகும். தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயலை உடனடியாக நிறுத்தும்படி இலங்கை அரசைக் கேட்கின்றோம். கடந்த காலத்தை மீண்டும் கொண்டு வருவதைத் தவிர்க்கும்படி நாம் கோருகின்றோம்.

உண்மையை உறுதிப்படுத்தி, நீதியை நிலைநிறுத்தி மற்றும் போதுமான இழப்பீடுகளை எல்லாத் தரப்பினரின் வன்செயல்களினாலும் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் கிடைக்கக்கூடியதான அடிப்படையில் அர்த்தம் உள்ள உண்மையான நல்லிணக்கத்தை, அதற்கான செயல்திட்டத்தை இலங்கை அரசு விரைந்து ஆரம்பிக்க வேண்டும் - என்றார்.

(த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வெள்ளம் தலைக்கு மேல் உயர்ந்த நிலைமை எங்கள் பிரதேசங்களில்

புதிய கொடுமைகள், அட்டூழியங்கள், அரக்கத்தனங்கள் ஒருவனது வாழ்க்கையைச் சோதிக்கும் போது, அவனது மனம் மலினப்படுகிறது. அதே போன்று வெள்ளம் தலைக்கு மேல் உயரப் போகிறது என்ற நிலைமை வரும்போது கிடைத்ததைப் பிடித்துக் கரையேற மனம் உந்துவதும் இயல்பு.

ஈழத் தமிழ் மக்கள் இப்போது இரண்டாவது வகையினராக மாறும் நிலை மேலெழுந்துள்ளது. தங்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படுவதற்கு முன்னதாக, தற்போது பல வடிவங்களில் ஒப்பேற்றப்படும் இன அழிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என்ற ஒருமித்த குரல் எழுந்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் விடுத்த வேண்டுகோள் அல்லது கோரிக்கை அதன் குறியீடாகவே அமைகிறது.

தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படுவதற்கு முன்னர், அவர்களின் பிரதேசங்களில் இப்போதுள்ள இனப்பரம்பலை மாற்றும் நோக்குடன் அதற்கு முன்னுரிமை கொடுத்து, பெரும்பான்மை இன மக்களை குடியேற்றுவதற்கான அரசின் செயற்பாடே முதன்மையான பேராபத்து என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மக்கள் தாம் வாழ்ந்த பூர்வீக நிலங்களில் மீளக்குடியமர அனுமதி வழங்காமல், உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற "பெயருடன்" அரசினால் அவை முடக்கப்படுகின்றன-

தமிழர் தமது சொந்த மண்ணில் ஒன்று கூடிப் பேச முடியாத நிலை, அவர்களின் பேச்சு, கருத்து, கலந்துரையாடல் சுதந்திரங்களைத் தட்டிப்பறிக்கிறது-

புலனாய்வாளர் தரப்புக்களும், ஒட்டுக்குழுக்களும் மக்களின் அன்றாட மற்றும் தனிப்பட்ட விடயங்களில் மூக்கை நுழைத்து வேண்டாத விபரீதங்களுக்குத் தூபமிடுகின்றன, குழிபறிக்கின்றன-

இறுதிக்கட்டப் போரில் பொதுமக்கள் பல்லாயிரம் பேர் கொல்லப்பட்டார்கள் என்று ஐக்கிய நாடுகள் சபை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. ஆனால் அவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் அரசினால் வழங்கப்படவில்லை.

இத்தகைய பின்னணியில் சுயாட்சியுடன் கூடிய இடைக்கால அரசு ஒன்று அவசியம். அதுவே தமிழ் மக்களின் இன்றைய- உடனடிப் பிரச்சினைகளுக்கு உகந்ததாக அமையும் என்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இந்தியத் தூதுக் குழுவிடம் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் அரசியல் தலைவர்களும் ஒரே குரலில் வலியுறுத்தி உள்ளனர்.

தமிழ் மக்களின் வாழ்வியல், அரசியல், பொருளாதார மேம்பாட்டுக்கு உடனடியாக உகந்த தீர்வு ஒன்றை வழங்கும் உத்தேசம் அரசிடம் இருப்பதற்கான சிறு புள்ளிதானும் தென்படவில்லை.

உலகத்தையும் தமிழர்களையும் ஏய்க்காட்டி, காலத்தைத் தன்பக்கம் வாங்கி அற்ப சொற்ப உரிமைகளைக் கூட வழங்குவதற்கு "பிகு" பண்ணும் போக்கையே அரசு சாமர்த்தியமாகக் கடந்த நான்கு வருடங்களாகக் கையாண்டு வருகிறது.

நிரந்தரத் தீர்வுக்குக் காத்திருப்பது, கடல் வற்றும் வற்றும் என்று காத்திருந்து, உடல் வற்றிச் செத்த கொக்கின் நிலைக்கு ஈழத் தமிழ் மக்களை இட்டுச் செல்ல வழிவகுக்கும் என்பதனை-

இந்த வேளையிலாவது எமது மக்கள் உளமார உணர்ந்துள்ளனர்; எல்லோரும் முழுமையாக உணர வேண்டும்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் கொழும்பு அரசுகளை நம்பி ஏமாந்த- ஏமாற்றப்பட்ட - நிலையே தொடர்கதையாக விரிந்து செல்கிறது.

அருகில் உள்ள இந்தியா உட்பட அனைத்துலக சக்திகளுக்கும் உள்ளார்ந்தமாக இது மிகத் துலக்கமாகவும் துல்லியமாகவும் தெரியும்.

எனினும், என்னத்தைச் சொன்னாலும் நிரந்தரத் தீர்வுக்காகக் காத்திருக்கும் போக்கைத் தளர்த்தி அனைத்துலக சக்திகளுக்கு எமது உடனடியான அவசரமான தேவையை உணர்த்தி இடைக்கால அரசு ஒன்றுக்கு உதவ வேண்டுவது காலத்தின் தேவையாக உள்ளது.

சர்வதேச நியமங்கள், நியாயங்களை நீண்ட காலத்துக்கு உதறித் தள்ளுவதால் நாட்டின் நிலை கீழ் நோக்கிச் செல்லும் என்ற உண்மையை, யதார்த்தத்தைத் தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் புரிந்து கொள்வது என்பது தொடர்ந்தும் கல்லில் நார் உரிப்பதாகவே இருக்கும் என்பது காலப்போக்கில் தெரியும்.

# இந்தியக் கடற்பரப்பினுள் அத்துமீறியே இலங்கைக் கடற்படை கைது செய்தது

## சிறையிலுள்ள இந்திய மீனவர் தெரிவிப்பு

மன்னார், ஏப்.11

இந்தியக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்தே இலங்கைக் கடற்படை எம்மைக் கைது செய்தது. இவ்வாறு சிறையில் உள்ள இந்திய மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

அனுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள இந்திய மீனவர்கள் மற்றும் அரசியல் கைதிகளை கடந்த சனிக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தலைமையில் சென்ற விசேட குழு சந்தித்து உரையாடியது.

அனுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற குறித்த குழுவினர் சிறை வைக்கப்பட்டுள்ள 19 இந்திய மீனவர்களை முதலில் சந்தித்து அவர்களுடன் உரையாடினர். அத்தியாவசிய உதவிகளையும் வழங்கியுள்ளனர்.

இதன் போது சிறைச்சாலையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக மீனவர்கள் குறித்த குழுவிடம் தெரிவித்தனர். இதன் போதே மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்தனர்.

நாங்கள் இலங்கை கடற்பரப்புக்குள் நுழையவில்லை. எமது கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்த இலங்கை கடற்படையினரே எம்மைக் கைது செய்து கொண்டு வந்தனர் என்று கூறினர்.

இந்த நிலையில் இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பினுள் நுழைவதால் எமது மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் குறித்த குழுவினர் இந்திய மீனவர்களுக்கு தெளிவுபடுத்தினர்.

இதேவேளை குறித்த குழுவினர் அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகள் 31 பேரையும் சந்தித்து உரையாடியுள்ளனர். இந்த நிலையில் அரசியல் கைதிகள் தமது விடுதலை தொடர்பாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதேவேளை சிறைச்சாலையில் மலசலகூட பிரச்சினை இருப்பதாகவும் தாங்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் அரசியல் கைதிகள் குறித்த குழுவிடம் கூறினர்.

இந்த நிலையில் சிறைச்சாலையில் கைதிகள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளிடம் நாடாளுமன்ற உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

குறித்த குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், மன்னார் பிரஜைகள் குழுவின் அதிகாரிகள், தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவையின் வட மாகாண இணைப்பாளர் ஏ.யேசுதாஸ், மன்னார் மாவட்ட இணைப்பாளர் சுனேஸ் சோசை, மன்னார் பிரதேச சபையின் உப தலைவர் அந்தோனி சகாயம் ஆகியோர் சென்றிருந்தனர்.

மேற்படி குற்றச் சாட்டுக்களை இலங்கைக்கடற்படை மறுத்துள்ளதுடன் இலங்கை கடல் எல்லை தாண்டி வந்த மீனவர்களே கைது செய்யப்பட்டனர் என்றும் அது தெரிவித்துள்ளது. (ம-12)

## சமுர்த்திப் பயனாளிகளுக்கான மகப்பேற்று கொடுப்பனவில் மாற்றம்

வலி. வடக்கு ஏப்.11

சமுர்த்தி பயனாளிகளின் மகப்பேற்றுக்கான கொடுப்பனவுகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று சமுர்த்தி ஆணையாளர் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியம் புதிய சுற்ற றிக்கைக்கு அமைவாக இந்த திருத்தத்தை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளும்படி அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் சமுர்த்தி அபிவிருத்தி ஆணையாளரால் கையொப்பம் இடப்பட்டுக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் சமுர்த்திப் பயனாளிகள் குடும்பத்தில் இடம் பெறும் மகப்பேற்றுக்கான கொடுப்பனவாக இரண்டு பிள்ளைகளுக்கு மட்டும் தலா ஐயாயிரம் ரூபா வழங்கப்பட்டு வந்தது.

புதிய சுற்றுநிருபத்துக்கு அமைவாக மூன்றாவது பிள்ளைக்கும் ஐயாயிரம் ரூபா கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை காரணமாக சமுர்த்திப் பயனாளிகள் கூடிய நன்மை பெறக் கூடிய வாய்ப்புக் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

புதிய சுற்றறிக்கை 2013 மார்ச் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வருகிறது என்றும் கூறப்பட்டது. (ம-86)

## கலாபூஷணம் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி,ஏப். 11

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் கலைஞர்களுக்கு இந்த வருடத்துக்கான கலாபூஷணம் அரச விருது வழங்குவதற்கு 60 வயதினைப் பூர்த்தி செய்த கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலக்கியம், எழுத்துத்துறை, மேடைநாடகம், நாட்டியம், சங்கீதம், ஓவியம், சிற்பம், தொலைக்காட்சி சினிமா, பாட்டு, கவி நயத்தல், பைலா போன்ற கலைத்துறைகளில் சிறந்த சேவையாற்றியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தமிழ்க் கலைஞர்கள் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்கும், முஸ்லிம் கலைஞர்கள் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துக்கும் விண்ணப்பங்களை எதிர்வரும் மே 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளனர்.

விண்ணப்பப் படிவங்களையும், அறிவுறுத்தல்களையும் அந்தந்த பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்றுக் கொள்ளுமாறும் மேலும் அவர் தெரிவித்துள்ளார். (ம-9)

## புகைத்தல் எதிர்ப்பு தின வேலைத்திட்ட அறிவுறுத்தல்

வலி. வடக்கு, ஏப். 11

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு சமுர்த்தி கொடித்தின வேலைத் திட்டம் சம்பந்தமான அறிவுறுத்தல்கள் இலங்கை சமுர்த்தி அதிகார சபையால் வெளியிடப்பட்டுள்ளன.

சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினம், சமுர்த்தி கொடித்தினம் சம்பந்தமான அறிவுறுத்தல் சுற்றறிக்கை இலங்கை சமுர்த்தி அதிகார சபையால் மாவட்ட செயலகங்கள், மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்கள், உதவி சமுர்த்தி ஆணையாளர்கள், மாவட்ட சமுர்த்திப் பிரதிப் பணிப்பாளர்கள், பிரதேச செயலர்கள், பிரதேச சமுர்த்தி பிரதிப் பணிப்பாளர்கள், மாவட்ட சமுர்த்தி ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக நிதியங்களை சேகரிக்கும்போது விசேட வேலைத் திட்டங்களை செயற்படுத்த வேண்டியதுடன் சமுர்த்திப் பயனாளிகளிடம் பலவந்தமாக நிதியை எவ்விதத்திலும் சேகரித்தலாகாது.

பலவந்தமாக சமுர்த்திப் பயனாளிகளிடம் நிதி சேகரிக்கப்படுவது சம்பந்தமான செயற்பாடுகள் இடம் பெறுவதாக தெரிய வந்தால் குறிப்பிட்ட சமுர்த்தி அலுவலருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு யாழ். மாவட்டத்தில் இத்தகைய கட்டாய நிதி சேகரிப்பு பரவலாக சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இது சம்பந்தமாக உரிய அதிகாரிகளிடம் பொது மக்கள் முறைப்பாடுகளை தெரிவித்த போதிலும் எவரும் அதைக் கண்டு கொள்ளவில்லை என்று மக்கள் முறைப்பாடு தெரிவித்திருந்தனர்.

இந்தச் சுற்றறிக்கை யாழ். மாவட்டத்தில் கருத்தில் கொண்டு செயல்படுத்தப்படுமா அல்லது கதிரைகளுக்காக மக்கள் துன்புறுத்தப்படுவார்களா என்பதைக் காத்திருந்து தான் பார்க்க வேண்டும் என கடந்தாண்டு பாதிக்கப்பட்ட சமுர்த்திப் பயனாளிகள் தெரிவிக்கின்றனர். (ம-86)

## போதைப் பொருள் குற்றவாளிக்கு தண்டனைகள் புதிய முறையில்

கொழும்பு,ஏப். 11

போதைப்பொருள் குற்றங்களுக்கு உள்ளாகும் சந்தேக நபர்கள் சிறைச்சாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதற்குப் பதிலாக அவர்களைப் புனர்வாழ்வுக்கு உட்படுத்தும் செயற்றிட்டம் ஒன்றை புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் செயற்பாட்டுப் பிரிவு மே மாதத்தில் இருந்து ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

அதன் முதற்கட்டமாக 250 சந்தேகநபர்கள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் இத்தரப்பினரை ஆயிரம் பேர் வரை உள்வாங்கிப் புனர்வாழ்வளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெலிக்கந்த, கந்தக்காடு புனர்வாழ்வு மையத்தில் வைத்து 6 மாத காலத்துக்கு இவர்கள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படுவார்கள் எனவும் அவர் மேலும் கூறினார். (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம்புரண்டது விரைவு ரயில்

## 4 பேர் சாவு; பலர் படுகாயம்



சென்னை, ஏப்.11

பீகார் மாநிலத்தில் இருந்து பெங்களூர் நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயில் அரக்கோணம் அருகில் நேற்றுத் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. அதில் சிக்கி 4 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாய மடைந்தனர்.

பீகார் மாநிலத்திலிருந்து முஷாபர்பூர் - பெங்களூர் யஷ்வந்த்பூர் விரைவு ரயில் இன்று காலை ஐந்தேமுக்கால் மணியளவில், அரக்கோணம் அருகே சித்தேரி என்ற இடத்தில் சென்று கொண்டிருந்தது. அப்போது ரயிலின் 12 பெட்டிகள் திடீரென தடம் புரண்டன. தடம் புரண்ட ரயில் பெட்டிகளுக்குள் பெருமளவான பயணிகள் சிக்கிக் கொண்டனர்.

மீட்புப் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. இதுவரை 4 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ள மீட்புக்குழுவினர்,30க்கும்மேற்பட்டவர்கள் படுகாயமடைந் துள்ளனர் என்றும் கூறுகின்றனர். (ற)

# எல்லை தாண்டுவதாலேயே மீனவர்கள் மீது தாக்குதல்

## மத்திய அரசைக் குறைகூறுவதில் பயனில்லை என்கிறார் அமைச்சர் நாராயணசாமி

சென்னை, ஏப்.11

இலங்கையில் உள்ள தமிழ் மீனவர்களின் முறைப்பாட்டின் பேரிலேயே இலங்கைக் கடற்படை தமிழக மீனவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறது. இந்தப் பிரச்சினைகளுக்கு மத்திய அரசைக் குறை கூறுவது ஏற்கத்தக்கது அல்ல என்று மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தமிழகத்தின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மத்திய அரசைக் குறை கூறுவது ஏற்கத்தக்கதல்ல. இலங்கையில் உள்ள தமிழ் மீனவர்களின் முறைப்பாட்டின் பேரிலேயே இலங்கைக் கடற்படை தமிழக மீனவர்கள் மீது நடவடிக்கை எடுக்கின்றது. எல்லை தாண்டித் தமிழக மீனவர்கள் மீன்பிடிப்பதாக இலங்கையில் உள்ள தமிழ் மீனவர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர். அதனாலேயே தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்கின்றது.

இதேவேளை- டெல்லியில் மம்தா பானர்ஜிக்கு எதிரான போராட்டம் கண்டிக்கத்தக்கது. மேற்கு வங்க நிதியமைச்சர் தாக்கப்பட்டமைக்கு கம்யூனிட்ஸ் கட்சியே பொறுப்பேற்க வேண்டும் - என்று தெரிவித்துள்ளார். (ற)



# தி.மு.க. விலகியமையால் எந்தப் பாதிப்பும் இல்லை

## தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன்

சென்னை, ஏப்.11

காங்கிரஸ் கூட்டணியில் இருந்து தி.மு.க. விலகியமையால் எந்தவிதப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என்று தெரிவித்துள்ளார் தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஞானதேசிகன்.

மதுரையில் நடைபெற்ற காங்கிரஸ் நிர்வாகிகளுக்கான கருத்தரங்கிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

காங்கிரஸ் கூட்டணியில் இருந்து தி.மு.க. விலகியதால் காங்கிரஸ் கட்சிக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது. இந்தியா முயன்றால் மட்டும் வாக்கெடுப்பு நடத்த முடியாது. சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பு இருக்க வேண்டும்.

இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கும் பட்சத்தில் இலங்கை தமிழர்களுக்கு இந்திய மத்திய அரசு உதவ முடியாது. அதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். மக்களவைத் தேர்தலில் திராவிடக் கட்சிகளுடன் மீண்டும் கூட்டணி அமைப்பது அல்லது தனித்து போட்டியிடுவது குறித்து தேர்தல் வரும்போது அறிவிக்கப்படும் - என்று தெரிவித்தார். (ற)

# வெளியேறுகிறார் குஷ்பு?

சென்னை, ஏப்.11

கட்சிக்குள் ஏற்பட்டுள்ள கடும் நெருக்கடிகளை அடுத்து தி.மு.கவை விட்டு வெளியேற குஷ்பு தீர்மானித்துள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது தி.மு.கவில் அதிகாரப் போட்டி நிலவுகிறது. அதையடுத்து எழுந்த நெருக்கடிகளாலேயே குஷ்பு இந்த முடிவை எடுத்திருக்கிறார் என்று கூறப்படுகிறது.

தி.மு.கவை விட்டு வெளியேறும் பட்சத்தில் குஷ்பு காங்கிரஸில் இணைந்து கொள்ளலாம் என்று அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர். (ற)

# மம்தாவுக்கு எதிராக மாணவர் போர்க்கொடி

புதுடில்லி, ஏப்.11

கொல்கத்தாவில் கடந்த வாரம் மாணவர் தலைவர் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, டெல்லி வந்திருந்த மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியை வழிமறித்து மாணவர்கள் போராட்டம் நடத்தினர்.

டெல்லியில் உள்ள திட்ட ஆணையாளர் அலுவலகத்துக்கு வந்திருந்த மம்தாவையும், மேற்கு வங்க நிதியமைச்சர் அமித் மித்ராவையும் முற்றுகையிட்ட மாணவர்கள் அவர்களுக்கு எதிராகக் கோஷம் எழுப்பியதுடன், நிதியமைச்சர் மீது தாக்குதலும் நடத்தினர். அதையடுத்து கோபமடைந்த மம்தா பானர்ஜி திட்ட ஆணைய துணைத் தலைவர் மான்டேக் சிங்கை கடுமையாகத் திட்டியதுடன் அங்கிருந்து உடனடியாகப் புறப்பட்டுச் சென்றார் என்று கூறப்படுகிறது. (ற)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## வேலுப்பிள்ளை நடராசா

(பாலசுந்தரம்)

(முன்னாள் முகாமையாளர், பல.நோ.கூ.சங்கம்
முன்னாள் கிராம சபை அங்கத்தவர்-மண்டைதீவு)

திதி:- 11.04.2013



அன்னை மடியில் 12.04.1927

ஆண்டவன் அடியில் 22.04.2012

மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் நாட்டை (Montereux)வசிப்பிடமாகவும் கொண்டிருந்த அமரர் வேலுப்பிள்ளை நடராசா அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கரம் பிடித்த நாள் முதலே கண்ணை இமை காப்பது போல்
எனைக் காத்து வந்தீரே! ஓராண்டு காலம் உங்களைப்பிரிந்து!
வாழ்ந்தாலும் ஒரு நொடிப் பொழுதேனும் -உங்கள்
நினைவின்றி வாழாமல் வாடுகின்றேன் என் ஆருயிரே
தரணியிலே நாம் தனித்துவமாய் வாழ்ந்திடவே
தன்னம்பிக்கையுடன் தாலாட்டி எமை வளர்த்த தந்தையே!
ஆண்டொன்று கடந்தாலும் ஆசையுடன் எமை வளர்த்த
அன்பென்றும் அழியாது எம் வாழ் நாளிலே
செல்வங்கள் போல் எங்களை செழுமையுடன் வாழ வைத்த தெய்வமே
ஆண்டு ஒன்று கடந்தாலும் கலையாது உம் நினைவுகள்
காலம் உள்ளவரை........
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம் நாங்கள்.

மனைவி,பிள்ளைகள்,மருமக்கள்,
சகோதரர்கள்,பெறாமக்கள்,பேரப்பிள்ளைகள்.

பாலேந்திரா(சுவிஸ்-ராசன் -மகன்)
021 964 1637

(35880)(5-4)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Lukshmee Transport

* 9 தொன் சுமை ஏற்றக் கூடிய TATA லொறி வாடகைக்கு விடப்படும்.

* 38 ஆசனங்கள் உடைய அரைச்சொகுசு TATA BUS வாடகைக்கு விடப்படும்.



சுற்றுலா செல்பவர்கள், பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள், தொண்டுநிறுவனங்கள், ஏனைய விசேடவைபவங்களுக்கு, மிகக் குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

**TP.021 567 0256**

105, இராஜ வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.


# மரண அறிவித்தல்

## பாலச்சந்திரன் பாதுசன்



சேச்லேன் திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலச்சந்திரன் பாதுசன் நேற்று (10.04. 2013) புதன்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் பாலச்சந்திரன்-பாமதி தம்பதியரின் அன்பு மகனும், பாரதன், சிவதர்சன், பபீசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - பாலேஸ்வரி தம்பதியரின் பேரனும், , சிவகுமாரின் பெறாமகனும், சிறிகாந்தா(ஜேர்மனி), ஞானேஸ்வரி, கலாநிதி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11.04.2013) வியாழக்கிழமை பி.ப. 3.00மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சேச் லேன்,
திருநெல்வேலி கிழக்கு. (c/8319, 17)

தகவல்:
குடும்பத்தினர்.

# லக்ஷ்மி இஞ்சினியரிங்
## Lukshmee Engineering

கணினி பழுதுபார்த்தல், வலையமைப்பு (Computer Repair, Net works, Computer Services)

மின்இணைப்பு வேலைகள் (House & Industrial wiring)

மீளச்சுற்றுதல் (Rewinding Works)
பான், மோட்டார், கிறைண்டர், டைனமோ, ராண்ஸ்போமர்.

குழாய் பொருத்துதல் (Plumbing Works)

மின் ஒட்டுதல், கேற் ,கிறில், றஸ், றோலிங் சட்டர் வேலைகள் (Welding. Gate, Grill , Truss, Roller Shuter works)

கடைச்சல் வேலைகள் (Lathe Works)

ஒவ்செற் அச்சு இயந்திரங்கள் பழுது பார்த்தலும் அதற்கான கடைச்சல் வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

பேப்பர் கட்டர் கத்தி தீட்டிக்கொடுக்கப்படும். (இயந்திரம் மூலம்)

வாகன திருத்த வேலை (Vehicle Repair)
டீசல், பெற்றோல் வாகனங்கள் மற்றும், ஜெனறேற்றர்கள் திருத்தப்படும்.

**TP.021 567 0256**

105, இராஜ வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



டச்சு வீதி, உடுவிலைச் சேர்ந்த

**திரு. நாகேந்திரன் நவரூபன்**

அவர்கள் நேற்று (10.04.2013) புதன்கிழமை
university of Survey, Londonஇல்
நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில்

**Master of Science in Structural Engineering**

பட்டத்தினை பெற்றமையை இட்டு அகமகிழ்ந்து வாழ்த்துவதோடு, மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ்வில் மிக உயர்நிலை பெற எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துபவர்கள்: திரு. ந. சிறிகாந்தா குடும்பம் (மாமா)
(சிறி காந்தா சேவிஸ் ஸ்ரேசன், கோண்டாவில் சந்தி)

பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு.

## திவானி பில்டேர்ஸ்

சகலவிதமான கட்டடங்களும் குறுகிய காலத்தில் உறுதியாகவும் அழகாகவும், தரமாகவும், உத்தரவாதத்துடனும் பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் அதிசிறந்த கட்டிட நிபுணர்களின் கைவண்ணத்தில் உங்களின் எண்ணத்துக்கு ஏற்ப குறித்த தவணையில் ஒப்பந்த அடிப்படையில் நிர்மாணித்து தரப்படும்.

அரச அங்கீகாரம் பெற்ற ஒப்பந்தகாரர்.
தொடர்புகளுக்கு: 0779000957

## கண்ணீர் அஞ்சலி



எமது எபநேசர் திருச்சபையின் உதவிப்போதகர்
சிசுபாலன்(டேவிட்) அவர்களின் பாசமிகு தந்தை
**சின்னவன் மார்க்கண்டு** அவர்கள் நேற்று
(10.04.2013) புதன்கிழமை காலமான செய்தியறிந்து ஆழ்ந்த
துயரடைவதுடன் அன்னாரின்
ஆத்ம சாந்திக்காக ஆண்டவர் இயேசுவை பிரார்த்திக்கின்றோம்.

போதகர்கள், ஊழியர்கள், விசுவாசிகள்
எபநேச ஜெப ஆலயம், வட்டுக்கோட்டை.

## மரண அறிவித்தல்



திருமதி **அன்னம்மா நடராசா**

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா அன்னம்மா நேற்று (10.04.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற உருத்திரமணி இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகேஸ்வரி, திலகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற வர்களான மகாலிங்கம் (வரணி), தங்கராசா (மதவடி) ஆகியோரின் அன்பு மாமியும், சுரேந்திரராசா பிருந்தா (பிரான்ஸ்), கயேந்திரராசா, றொபின், யூட்சினி (பிரான்ஸ்), ரவீந்திரராசா (இந்தியா), திருமலர், மதிவதனி (இந்தியா), ராஜா, வதனகீதாயினி, சதீஸ்குமார், வாசுகி, சிவாநந்தன், அனுசியா (ஜேர்மன்), தீபன், ஜெகசுதா, சுகிந்தன், காந்தன் (சவுதி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிரணவன், யூலியாற், கனுசிகா, யூலியற், பிறின்சன், யூமிஷா, திவ்யா, கஜானா, கேனுயா, தேனிகா, தக்ஷிகன், கஜானிகா, குஜிலன், அக்ஷரா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.04.2013) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1010/4, கே.கே.எஸ் வீதி,
(கன்னன் ஒழுங்கை) யாழ்ப்பாணம். (35928)(14.9)

தகவல்:
த.தீபன் (பேரன்)

## சின்னவர் மார்க்கண்டு



(மாட்டு வண்டில் ஆசாரி மூளாய்)

மூளாய் றோட் காளி கோயிலடியைப் பிப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட சின்னவர் மார்க்கண்டு நேற்று(10.04. 2013) கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னவர்-வியாலம்மா தம்பதியரின் அன்பு மகனும், மாணிக்கத்தின் பாசமிகு கணவரும், புஸ்ப மலர்(மூளாய்), குணரத்தினம்(குணா-வட்டுக்கோட்டை), குலேந்திரன் (பருத்தித்துறை), சச்சொரூபவதி(இந்தியா ), கிருபைலட் சுமி, சோதிநாதன் (சோதி-மானிப்பாய்), சந்திரபாலு (சூரி-கந்தரோடை), சிசுபாலன் (போதகர், எபநேசர் ஜெப ஆலயம்), கமலாம் பிகை, சத்தியசீலன், மேகவர் ணன்(குரு), சாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அண்ணாமலை, நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்றவர்களானசங்கரன்- மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று(11.04. 2013) மு.ப.10.00 மணி யளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சங்கானை கரச்சி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், போதகர்கள், ஊழியர்கள், சபையார் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய் காளிகோயிலடி.

தகவல்:
குடும்பத்தினர்.
சிசுபாலன் (மகன்-போதகர்)

## உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு

021-567 1111, 021- 567 6666

## மணல் விற்பனைக்கு

கட்டட வேலைகளுக்கான கண்டாவளை ஆற்றுமணல் மிகவும் குறைவான விலையில் டிப்பர்கள் மூலம் நேரடியாக உங்கள் இடங்களுக்கே விநியோகிக்கப்படும். தொடர்பு- 0755110767

(35925)(9.14)

## வீடு வாடகைக்கு

இல 6/1, பேக்கறி லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீடு வாடகைக் குண்டு.

தொடர்புகளுக்கு: 0773824588 பார்க்கக்கூடிய நேரம் மு.ப.8.00-பி.ப.5.00 வரை

## வீட்டுப்பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.
தொடர்புகளுக்கு: 021 2222594, 077 3276502

## வீடு வாடகைக்கு

யாழ்.வைத்தியசாலைக்கும் பஸ் நிலையத்துக்கும் மிக அருகில் வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: 0215672024

## மரண அறிவித்தல்

திருமதி **தையலம்மா சங்கரையா**

**(கோதையம்மாள்)**



யாழ்ப்பாணம் இல. 270, கே.கே.எஸ் வீதியைப் பிறப்பிடமாகவும் இல.75, மானிப்பாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தையலம்மா சங்கரையா நேற்றுமுன்தினம்(09.04.2013)செவ்வாய்க்கிழமை அகலமரண மானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரையாவின் அன்பு மனைவியும், ஞானம்மாள், ராஜீநாயுடு(சங்கரையா) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான கோவிந்தசாமி, இராமலட்சுமி(சுசிலா) ஆகியோரின் மாமியும், வெங்கடசாமி, ஜெய லட்சுமி, ஜானகி, மகேந்திரன், குமரன், கணேசன், கவிதா, கல்பனா, ஜோதி ஆகியோ ரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11.04.2013) வியாழக்கிழமை பி.ப. 3.00மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப.4.00 மணியளவில்கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 75, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**மரியாம்பிள்ளை அல்போன்ஸ்**



செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகவும், தாளையடியை வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை அல்போன்ஸ் நேற்று (10.04.2013) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை-மதலேனம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற எலிச பெத்தின் அன்புக் கண வரும் பவுலீனப்பு, கிறிஸ் சாந்து, ஞானசிகாமணி ஆகியோரின் சகோதரனும் இக்னேசியா தயா (லண்டன்), நிமல்ராஜ் (லண்டன்), தனராஜ் (லண்டன்), இன்ப ராஜ் (அபிவிருத்தி உதவியாளர் பிரதேச செயலகம், பருத்தித் துறை), வெனிசியா (தாளையடி) ஆகியோரின் அன்புத்தந்தையும், மனோ (லண்டன்), கொறற்றி (லண்டன்), இமெல்டா(லண்டன்), தவச்செல்வி (பருத்தித் துறை), றெஜிஸ் ஆகியோரின் அன்பு மாமனும் துசாந்தி, செறினா, நிம்சா, நிவேதா, நிவிதா, தர்சன், தர்சிகா, தனோஷ், சௌமியா, எல்சியா, றியோசன், றைஜிஸ் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் பருத்தித்துறையிலுள்ள அவரது மகனது இல்லத்திலிருந்து (13.04.2013) சனிக்கிழமை காலை தாளையடிக்கு எடுத்துச்செல்லப்பட்டு இறுதி நல்லடக்க ஆராதனைகள் பி.ப.2.00 மணிக்கு தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்று தாளையடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கடற்கரை வீதி,
பருத்தித்துறை.

தகவல்:
இன்பராஜ் (மகன்)
தொ.பே: 0779672871

(35926)(8.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்நேரமும் நடக்கலாம் தாக்குதல்

## முடிந்தது வடகொரியாவின் காலக்கெடு; எதிர்கொள்ளத் தயாராக தென்கொரியா



சியோல், ஏப்.11

தென்கொரியாவில் உள்ள வெளிநாட்டுத் தூதரங்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் வழக்க முடியாது. இந்த மாதம் 10ஆம் திகதிக்கு முன் அவை அங்கிருந்து வெளியேற வேண்டும் என்ற வடகொரியாவின் எச்சரிக்கை நேற்றுடன் முடிவடைந்த நிலையில் தென்கொரியா மீதான வடகொரியாவின் தாக்குதல் எந்தநேரமும் ஆரம்பமாகலாம் என அஞ்சப்படுகின்றது.

தென்கொரியா மற்றும் அமெரிக்க இராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்துவோம் என்று எச்சரித்துள்ள வடகொரியா, 4 ஆயிரம் கிலோமீற்றர் தூரம் சென்று இலக்கைத் தாக்கக் கூடிய ஏவுகணைகளைத் தயார்நிலையில் வைத்துள்ளது. இவை தென்கொரியா, ஜப்பான் மற்றும் பசிபிக் பெருங்கடலில் உள்ள அமெரிக்காவுக்கு சொந்தமான குவாம் தீவுகள் ஆகியவற்றையே இலக்கு வைத்துள்ளன என்று கூறப்படுகிறது.

எந்நேரமும் தாக்குதல் ஆரம்பிக்கலாம் என்ற பதற்றம் நிலவும் சூழ்நிலையில் தென்கொரியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கப் படைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. வடகொரியா ஏவுகணை தாக்குதல் நடத்தும் பட்சத்தில் ஜப்பான் கடற்பகுதியில் அவற்றை இடைமறித்து அழிக்கும் ஏற்பாடுகளை ஜப்பான் இராணுவம் மேற்கொண்டுள்ளது.

இதேவேளை, ஏப்ரல் 15ஆம் திகதி வடகொரியா என்ற தனி நாட்டை ஏற்படுத்திய தலைவர் கிம் ஈ-சுங்கின் 101ஆவது பிறந்த நாளாகும். அதனால் எந்நேரமும் முன்னறிவிப்பின்றி வடகொரியா திடீர் தாக்குதல் நடத்தும் சந்தர்ப்பம் அதிகமாக உள்ளது என்று போர்வல்லுநர்கள் உறுதியாகக் கூறுகின்றனர். (ற)

## பாகிஸ்தான் வெற்றிகரமாக ஏவுகணை சோதனை

இஸ்லாமாபாத், ஏப்.11

300 கிலோமீற்றர் தூரம் சென்று இலக்குகளைத் தாக்கக் கூடிய சக்திவாய்ந்த 'ஹேட்ப்-4' ஏவுகணையை வெற்றிகரமாகச் சோதனை செய்துள்ளது பாகிஸ்தான்.

'ஷாஹீன்-1' என்றும் அழைக்கப்படும் இந்த ஏவுகணை, அணு ஆயுதங்களை சுமந்து செல்லக்கூடியது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

போர் திட்டங்களுக்கான லெப்டினன்ட் ஜெனரல் தலைவர்(ஓய்வு) காலித் அஹமத் கித்வாய், விஞ்ஞானிகள், பொறியாளர்கள் மற்றும் மூத்த ராணுவ அதிகாரிகளின் முன்னிலையில் பாகிஸ்தான் கடல் பகுதியில் இருந்து இந்த ஏவுகணை சோதனை செய்யப்பட்டது என்று பாகிஸ்தான் இராணுவத்தின் செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது.(ற)

## மலேஷிய நாடாளுமன்ற தேர்தல் எதிர்வரும் 5ஆம் திகதி

கோலாலம்பூர், ஏப். 11

மலேஷியாவின் நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் இந்தமாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்கும் என்றும், அதிலிருந்து 15 நாள்கள் பிரசாரப் பணிகளை மேற்கொள்ள முடியும் என்றும் மலேஷிய தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மலேஷியாவில் கடந்த 56 ஆண்டுகளாக தேசிய முன்னணி கட்சியின் ஆட்சி நடைபெற்று வந்தது. துணை பிரதமராக பதவி வகித்த அன்வர் இப்ராகீம் பிரதமரான நஜீப் ரசாக்குடன் சமீப காலமாக மோதல் போக்கை கடைபிடித்தார். அதனையடுத்துமலேசிய மன்னர் அப்துல் ஹலீம் கடந்த 3ஆம் திகதி நாடாளுமன்றத்தைகலைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# நிலநடுக்கம்

## ஈரானில் 32 பேர் சாவு 650க்கு மேற்பட்டோர் காயம்



தெஹ்ரான், ஏப்.11

ஈரானில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட நிலடுக்கத்தில் 32 பேர் உயிரிழந்தனர். 650இக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.1 அலகாகப் பதிவாகியுள்ளது. பிரதான நிலநடுக்கத்தின் பின்னர் 12க்கும் மேற்பட்ட சிறு அதிர்வுகளும் உணரப்பட்டன என்று கூறப்படுகிறது.

ஈரானின் துறைமுக நகரான பஷ்கரே நிலநடுக்கத்தால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு மீட்புப் பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன. இதுவரை 32 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ள மீட்புக் குழுவினர் 650க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறுகின்றனர்.

நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதியிலேயே ஈரானின் ஒரேயொரு அணுமின் நிலையம் அமைந்துள்ளது. குறித்த நிலநடுக்கத்தால் அணுமின் நிலையத்துக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து ஈரான் அதிகாரிகள் கருத்துக் கூற மறுத்துவிட்டனர்.

இதேவேளை, இந்த நிலநடுக்கம் பிறவளைகுடா பகுதிகளான பஹ்ரைன், குவைத், கத்தார், துபை, ஐக்கிய அரபு இராஜியத்திலும் உணரப்பட்டுள்ளது. அதையடுத்து ஐக்கிய அரபு இராஜியத்தில் உள்ள உலகின் மிக உயரமான கட்டட மான புர்ஜ் கலிபாவில் இருந்தவர்கள் வெளியேற்றப்பட்டனர் என ஐக்கிய அரபு இராஜ்ஜிய தகவல்கள் தெரிவிக் கின்றன. (ற)

## தலை துண்டித்து சவூதியில் மரணதண்டனை

ரியாத், ஏப். 11

இளைஞர் ஒருவரின் தலை துண்டிக்கப்பட்டு சவூதி அரேபியாவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

கார்பந்தயம் ஒன்றின் போது உடன் போட்டியிட்டவர்களின் காரில் மோதி அதில் இருந்த 3 பேர் உயிரிழக்கக் காரணமாக இருந்தார் என்று கூறியே அவருக்கு இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (ற)

# பாக். இராணுவம் அதிரடி 100 தீவிரவாதிகள் சாவு

இஸ்லாமாபாத், ஏப்.11

தலிபான்களுக்கு எதிராக பாகிஸ்தான் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கையில் 100க்கு மேற்பட்ட தலிபான் தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளனர். பாகிஸ்தான் இராணுவத் தரப்பில் 30 படையினர் உயிரிழந்துள்ளனர்.

திரா பள்ளத்தாக்குப் பகுதியிலேயே இந்தத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. பள்ளத்தாக்குப் பகுதியில் முகாமிட்டிருந்த தீவிரவாதிகளின் பதுங்குழிகள் மீது பாகிஸ்தான் விமானப் படை கடும் தாக்குதலை மேற்கொண்டது.

அத்துடன் தரைவழிவாயாகவும் பாகிஸ்தான் இராணுவத்தினர் தாக்குதலை நடத்தினர். தீவிரவாதிகளும் கடும் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர். அதில் 100க்கு மேற்பட்ட தீவிரவாதிகள் உயிரிழந்தனர் என்றும் 30 பாகிஸ்தான் படை வீரர்கள் உயிரிழந்தனர் என்றும் இராணுவ உயர் அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் இந்தப் பகுதியில் ஊடகங்களை அனுமதிக்காததால் உயிரிழந்தோரின் சரியான எண்ணிக்கை தெரியவரவில்லை.

தீவிரவாதிகளின் பிடியில் இருந்த திரா பள்ளத்தாக்கின் பெரும்பாலான பகுதிகளை பாகிஸ்தான் இராணுவம் கைப்பற்றியுள்ளது. இது ராணுவத்துக்குக் கிடைத்த பெரும் வெற்றி என்றும் திரா பள்ளத்தாக்குக்கு அருகே முக்கிய நகரான பெஷாவர் அமைந்துள்ளதால் அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று உயர்அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, இராணுவத்தினருடனான மோதலில் ஒரு படைத்தலைவர் உள்பட ஐந்து தலிபான்கள் மட்டுமே உயிரிழந்தனர் என்று தெஹ்ரிக்-இ-தலிபான் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் இசானுல்லா இசான் கூறியிருக்கிறார். (ற)

# மரண தண்டனை குறைந்து வருகிறது

## மன்னிப்புச்சபை தகவல்

ஜெனிவா, ஏப்.11

உலகளாவிய ரீதியில் மரண தண்டனை நிறைவேற்றப்படுகின்றமை குறைவடைந்துள்ளது என்று சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உலகளாவிய ரீதியில் மரண தண்டனை நிறைவேற்றப்படுகின்றமை குறைவடைந்துள்ளது. எனினும் அமெரிக்கா, இந்தியா, சீனா, சவுதி அரேபியா உள்ளிட்ட சில நாடுகளில் இன்னும் மரண தண்டனை நிறைவேற்றப்படுகின்றது.

சீனா, ஈராக், ஈரான், சவுதி அரேபியா போன்ற நாடுகளில் கடந்த வருடம் அதிகளவானோருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டதாக தரவுகள் குறிப்பிடுகின்றன.

இதேவேளை, மரணதண்டனை நிறைவேற்றப்படுகின்றமை மனித உரிமைகளையும், மனிதாபிமானத்தையும் மிக மோசமாக மீறும் செயல் என்பதை ஏற்றுக்கொண்டுள்ள பல்வேறு நாடுகள் மரணதண்டனை நிறைவேற்றப்படுகின்ற நடைமுறையை நிறுத்துவதற்கு தற்போது இணங்கியுள்ளன.- என்று கூறப்பட்டுள்ளது. (ற)

## தட்சரின் இறுதிச் சடங்கு 17 ஆம் திகதி



லண்டன், ஏப்.11

பிரிட்டனின் முன்னாள் பிரதமர் தாட்சரின் இறுதிச் சடங்குகள் எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறும் என்று பிரிட்டன் அரசு அறிவித்துள்ளது.

இங்கிலாந்து முன்னாள் பிரதமர் மார்கரெட் தாட்சருக்கு கடந்த ஜனவரி மாதம் அறுவைச் சிகிச்சை நடந்தது. அதன்பின், அவர் ரிட்ஸ் ஓட்டலில் தங்கி இருந்தார். கடந்த திங்கட்கிழமை திடீரென அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார்.

எதிர்வரும் 17ஆம் திகதி செயின்ட் பால்ஸ் கதீட்ரல் தேவாலயத் தில் தாட்சர் உடல் அடக்கம் செய்யப்படும் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. தட்சரின் இறுதிச் சடங்குகள் முழு இராணுவ மரியாதையோடு நடைபெறும் என்று பிரிட்டன் பிரதமர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (ற)

## 5 இந்திய வீரர்கள் தென் சூடானில் சாவு

ஜோங்லாய், ஏப்.11

தெற்கு சூடானில் ஐ.நாவின் அமைதி காக்கும் படையில் பணியாற்றிய ஐந்து இந்திய வீரர்கள் தீவிரவாதிகளின் தாக்குதலில் உயிரிழந்தனர்.

தென் சூடானின் கிழக்கே ஜோங்லாய் மாகாணத்தில் மறைந்திருந்த ஆயுதக்குழு ஒன்று, அங்கு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த ஐ.நா அமைதிப் படையினர் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். அதில் இரண்டு அதிகாரிகள் மற்றும் மூன்று படை வீரர்கள் உயிரிழந்தனர்.

ஐ.நாவின் அமைதி காக்கும் படையைச் சேர்ந்த இந்திய வீரர் ஒருவர் கடந்த மாதம் இதேபகுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட நிலையில் தற்போது மேலும் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.

2011ஆம் ஆண்டு தெற்கு சூடான் தனி நாடாக அங்கீகரிக்கப்பட்ட பின்னர் ஜோங்லாய் பகுதியில் பரந்து பட்ட அளவில் இன மோதல்கள் நடைபெற்று வருகின்றன.

அவற்றைக் கட்டுப்படுத்துவதற்காகவே ஐ.நா அமைதிப்படையினர் அங்கு நிலைகொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.(ற)

# விசாரணைகள் நடத்துவதற்கு ஐ.நா.குழுவுக்கு அனுமதியில்லை

## சிரிய அரசு உறுதியாக அறிவிப்பு

டமஸ்கஸ், ஏப்.11

ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழுவிற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது என்று சிரியா அறிவித்துள்ளது.

சிரியாவில் இடம்பெற்று வரும் மோதல்களில் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டனவா என்பது குறித்து ஆராய்வதற்காக குழுவொன்றை சிரியாவுக்கு அனுப்பி வைக்க ஐக்கிய நாடுகள் அமைப்பு திட்டமிட்டுள்ளது. தற்போது அந்தக் குழுவினர் சைப்பிரஸில் தங்கியுள்ளனர்.



இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள சிரியா குறிப்பிட்ட குழுவினர் தமது நாட்டுக்குள் வந்து விசாரணை நடத்த அனுமதிக்க முடியாது என்று அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பு பக்கச்சார்பாக விசாரணை நடத்தி பிழையான தகவல்களை வெளியிடக் கூடும் எனவும் இதனால் விசாரணைகளுக்கு அனுமதியளிக்க முடியாது என்றும் தெரி வித்துள்ள சிரிய அரசு, நாடு முழுவதிலும் இடம்பெற்று வரும் வன்முறைகள் குறித்து விசாரணை நடத்த ஐக்கிய நாடுகள் அமைப்பு முயற்சிப்பதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மாவட்ட குளங்களில் இருந்து 15 தொன் மீன் நாளாந்தம் கிடைக்கிறது

## நன்னீர் மீன் பிடியில் அபிவிருத்தி

வவுனியா, ஏப். 11

வவுனியா மாவட்டத்தில் நன்னீர் மீன் பிடித்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் அண்மையில் 6 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீன்குஞ்சுகள் வவுனியா மாவட்ட குளங்களில் விடப்பட்டன. இதன் மூலம் சராசரியாக நாளாந்தம் 12 தொடக்கம் 15 ஆயிரம் கிலோ கிராம் மீன் உணவை வவுனியா மாவட்ட மக்கள் பெறுகின்றனர் என்று வவுனியா மாவட்ட நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபை அதிகாரி பா.நிருபராஜ் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இராசேந்திரம் குளத்தில் 45 ஆயிரம் மீன் குஞ்சுகளும், சின்னகுளத்தில் 30 ஆயிரமும், ஜெங்கமகுளத்தில் 15 ஆயிரமும், துலாவ குளத்தில் 30 ஆயிரமும், பிரமநாளன் குளத்திலும் ரம்பக் குளத்திலும் 15 ஆயிரமும், பெரியகட்டு குளத்தில் 15 ஆயிரமும், வண்ணா பெரிய குளத்தில் 15 ஆயிரமும், கொம்பு வைத்த குளத் தில் 30 ஆயிரமும், பெரியமடுவில் 15ஆயிரமும், முதலியார் குளத்தில் 30 ஆயிரமும், பெரியகுளத்தில் 30 ஆயிரமும், கருவெந்தபுலவு குளத்தில் 15 ஆயிரமும், கரப்பமடுவில் 30 ஆயிரமும், மருதுடையார் குளத்தில் 30 ஆயிரமும், சின்ன சிற்பிகுளத்தில் 15 ஆயிரமும், பெரிய சிற்பி குளத்தில் 15 ஆயிரமும், வாடிவள புளியங்குளத்தில் 15ஆயிரமும், புளியங்குளத்தில் 15 ஆயிரமும், மாவியங்குளத்தில் 30 ஆயிரமும், அலகல்லு போட்டகுளத்தில் 30 ஆயிரமும், மகாரம்பக்குளத்தில் 15 ஆயிரமும், கலாபோகஸ் வெவ குளத்தில் 90ஆயிரமும், செட்டிகுளத்தி 15 ஆயிரமும், ஆண்டியா புளியங்குளத்தில்15 ஆயிரமும் மீன்குஞ்சுகள் விடப்பட்டுள்ளன.

39 குளங்களில் சுமார் 1800 மீனவர்கள் இதன் மூலம் இலாபம் பெறுகின்றனர். குளங்களில் நீர் வற்றாது இருக்குமாயின் மீன்கள் இறக்கும் வாய்ப்பு இல்லை. அதன் பெருக்கம் பல மடங்காக இருக்கும்.

வவுனியா மாவட்ட மக்கள் பலர் தற்போது குளத்து மீன்களை உணவாக உட்கொள்ளும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர். சுமார் 10 பேர் வீடுகளிலும் மீன்களை வளர்த்து சுயதொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

சுயதொழிலில் ஈடுபட விரும்புவர்கள் மீன் வகைகளை பெற்று வருமானத்தை ஈட்டலாம்.

வவுனியாவில் திலாப்பியா, கொமன்சாப், மிரிகால் மீன்களுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது. மன்னாரில் இருந்து வரும் கடல் மீன்களின் விலை உயர்வால் வவுனியா மாவட்ட குளங்களில் பிடிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் உடன் மீனுக்கு அதிக வரவேற்புக் கிடைத்துள்ளது.- என்று அவர் மேலும் கூறினார். (ம-402)

## கொலைவெறியில் முகமாலைப் பகுதி

அக்கராயன்,ஏப்.11

கிளிநொச்சி முகமாலைப் பகுதியில் மிதிவெடிகள் உயிர்களை பறிக்கும் இடமாக மாறிவருகின்றன.

2000 ஆம் ஆண்டில் போர் அதிகரித்த பிரதேசமாக முகமாலை இருந்தது. இரு பகுதியினரும் ஏட்டிக்கு போட்டியாக மிதிவெடிகளை முகமாலைப் பகுதியில் புதைத்தனர்.

எண்ணில் அடங்காத மிதிவெடிகள் பொறிவெடிகள், மிதிவெடியுடன் கூடிய எறிகணைகள், வெடிக்காத விமானக் குண்டுகள் போன்றன முகமாலைப் பகுதியில் நிறைந்து காணப்படுகின்றன.

கிளாலி, முகமாலை, நாகர்கோவில் வரையான முன்னிலைப் பகுதியில் எண்ணில் கூட அடங்காத வெடிபொருள்கள் புதைந்துள்ளன.

மீள்குடியமர்வு ஆரம்பித்திருந்த நிலையில் இராணுவம் முகமாலை வீதியோரங்களில் மிதிவெடி அகற்றலில் ஈடுபட்டது. அபாயத் தன்மை கருதி படையினர் பின்வாங்கிய நிலையில் மிதிவெடி அகற்றும் பிரிவினர் தற்போது பணியாற்றிவருகின்றனர். (ம-18)

## சட்டவிரோத மணல் அகழ்வை புத்துவெட்டுவானில் நிறுத்துக

அக்கராயன், ஏப்.11

துணுக்காய் புத்துவெட்டுவான் கிராமத்தில் சட்ட விரோத மண் அகழ்வு காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் உருவாகி வருவதாக அந்தப் பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

புத்துவெட்டுவான், துவரடிப்பூ, வடக்காறு மருதங்குளம் ஆகிய பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு காரணமாக பெரும் குழிகள் ஏற்பட்டுள்ளன.

மழை காலங்களில் இவற்றில் நீர் நிரம்பி குடிமனைகளுக்குள்ளும் புகும் அபாயம் ஏற்படும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான மணல் அகழ்வு காரணமாக கிணறுகளின் நீர் மட்டமும் பாதிக்கப்படுவதாக அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். இதே வேளை குறித்த இடங்களில் சட்டவிரோத மணல் அகழ்வு நடைபெறுவது குறித்து துணுக்காய் பிரதேச செயலகத்தினருக்கு தகவல் வழங்கப்பட்டபோதும் அது குறித்து அவர்கள் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள வில்லை எனவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-18)


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 16.09.1937 உதிர்வு 13.03.2013



அமரர் **முத்துக்கிருஷ்ணன் சிவபாக்கியம்**

*எங்கள் குடும்ப ஒளி விளக்காய்*
*ஒளிர்ந்த அன்னையே உங்கள்*
*நினைவுகள் நிழலாகப் படர்ந்து*
*காலமெலாம் நாம் சுமந்து செல்கின்றோம்.*

எமது அன்புத் தாயாரின் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டு ஆறுதல் வழங்கிய உள்ளங்களுக்கு நன்றி கூறுவதுடன், இன்று (11.04.2013) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புதுவளவு, தும்பளை மேற்கு,
பருத்தித்துறை.

(C 8308) (6.11)

**குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 15 * 09 * 1927



உதிர்வு 12 * 03 * 2013

அமரர்

**சின்னத்தங்கம் சதாசிவம்**

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து ஊன்றுகோலாய், வழிகாட்டியாய் விளங்கி 12.03.2013 இல் அமரத்துவம் அடைந்த எமது தாயார் அமரர் சின்னத்தங்கம் சதாசிவம் அவர்களின் இறுதிச்சடங்குகளில் நேரில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் தபால், தந்தி மூலம் அனுதாபச்செய்திகள் அனுப்பியவர்களுக்கும் மலர் வளையங்கள் வைத்தவர்களுக்கும் மற்றும் பல்வேறு வகைகளில் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

26/1,அல்பிறட் பிளேஸ்,
கொழும்பு.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

(C/8147)(10,6,7)


## நிறுத்தல், அளத்தல் கருவிகளில் மோசடி செய்தோர்க்கு அபராதம்

வவுனியா நகரப் பகுதியில் நிறுத்தல், அளத்தல் கருவிகளில் முறைகேடு செய்த 17 வர்த்தகர்களுக்கு எதிராக நிறுவை, அளவை கருவிகள் அளவீட்டு அலகுகள் சேவைத் திணைக்களத் தினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகர்ப் பகுதி கடைகளில் நிறுத்தல், அளத்தல் கருவிகளுக்கான முத்திரையிடும் பணி அந்தத் திணைக்களத்தின் வவுனியா மாவட்ட அலுவலக அதிகாரிகளின் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது நிறுத்தல், அளத்தல் கருவிகளில் மோசடி செய்த 17 வர்த்தகர்கள் மாட்டிக்கொண்டனர். இவர்களிடம் அபராதம் அறவிடப் பட்டுள்ளது.

பொதுமக்களால் வழங்கப்பட்ட முறைப்பாடுகளை அடுத்தே தாம் இந்த திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும், அதன் போது மோசடி செய்தவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் வவுனியா மாவட்ட அலுவலகப் பொறுப்பதிகாரி பா.இராஜேஸ்வரன் தெரிவித்தார். (ஜ-40?)


## மரண அறிவித்தல்

### திருமதி இராசமணி கனகசபை

(ஓய்வுபெற்ற அற்ரண்டன் யாழ். போதனா வைத்தியசாலை)



நல்லூரைப் பிறப்பிடமாகவும் இருபாலை, கொய்யாத் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி கனகசபை 09.04.2013 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி -இராசம்மா தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்ற கந்தையா கனகசபையின் அன்பு மனைவியும், நாகேஸ்வரி, நாகேஸ்வரன், பரமேஸ்வரன் (U.S.A) ஆகியோரின் பாசமிகு தாயாரும், குணரத்தினம் (குணம் அண்ணை) யோகமலர், ராஜசிறி ஆகியோரின் அன்பு மாமியாரும், இரத்தினேஸ்வரி-தயாநிதி (ஜேர்மனி), இராஜேஸ்வரி -யோகேந்திரராஜா (கொழும்பு), குணரஞ்சன் (ஜேர்மனி), ஞானரஞ்சன் (U.S.A), செந்தூரன், மயூரன், அகிலன், சிந்துஜா, பிரவீன் ஆகியோரின் பேர்த்தியும், தஸ்மினி, யாழினி, உஷாந்தினி, தயாளன், தாசன், அரவிந்தன், அபிராமி, அகல்யா, றஞ்சிதன், ரமேஷ், கவின், காவியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2013) வியாழக்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இராச வீதியில் அமைந்துள்ள கானான் கல்லறைத் தோட் டத்தில் மாலை 4 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வெ.செ.குணரத்தினம்
(மருமகன்)
021 223 0236,
077 644 2563

அரசடி வீதி,
இருபாலை,
கோப்பாய்.

(36897)(6.11)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம் பிரச்சினைகளை பேச விடாத அஸ்வர், காதர் எம்.பிக்கள்

### இனத்தைக் காட்டிக்கொடுக்காதீர் என சம்பந்தன் சாட்டை

கொழும்பு, ஏப். 11

முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான அடக்குமுறைச் சம்பவங்களைச் சுட்டிக்காட்டி நாடாளுமன்றில் செவ்வாயன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உரையாற்றுகையில், ஆளுந்தரப்பு முஸ்லிம் உறுப்பினர்களான அஸ்வர் எம்.பியும், பிரதியமைச்சர் அப்துல் காதரும் அடிக்கடி இடையூறு விளைவித்தனர்.

சம்பந்தனின் உரைக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டு அவர்கள் இருவரும் ஆவேசமாகக் கோஷங்களை எழுப்பியிருந்தும் ஒலிவாங்கி மூடப்பட்டு விடப்பட்டதால் அவர்கள் வெளியிட்ட கருத்துகள் தெளிவாகப் புரியவில்லை.

நாடாளுமன்றம் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. வாய்மூல விடைக்கான கேள்வி நேரம் முடிவடைந்த பின்னர் நிலையியற் கட்டளை 23/2 இற்கமைய விசேட அறிக்கையொன்றை விடுத்து முஸ்லிம் சமூகம் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் உரையாற்றுவதற்கு சம்பந்தன் எழுந்தது முதலே குறித்த அரச தரப்பு முஸ்லிம் உறுப்பினர்கள் இருவரும் கூச்சல் குழப்பத்தில் ஈடுபட்டனர்.

இதனை அவதானித்துக் கொண்டிருந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில், சம்பந்தனுக்கு சுதந்திரமாக உரை யாற்ற வாய்ப்பளிக்குமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார். இதன் பின்னர் கூட அவ்விருவரினதும் செயற்பாடுகள் ஓயவில்லை. எழுந்து நின்றவாறு பத்திரிகைகளை ஏந்திக்காட்டி ஏதேதோ பேசினர். (சி)

# இலங்கையின் 30 வருடப் போருக்கு இந்தியாவின் ஆட்சியாளரே காரணம்

## கோத்தபாய ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்.11

இலங்கையில் 30 வருட காலம் இழுபறிப்பட்டு முடிவடைந்த போருக்கு இந்தியாவின் முன்னாள் ஆட்சியாளர்களே காரணமாக இருந்துள்ளார்கள் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

தகவல் திணைக்களம் வெளியிட்ட ஓர் அறிக்கையில், இலங்கையில் பயங்கரவாதத்தைத் தோற்றுவித்தமைக்கான பொறுப்பிலிருந்து இந்தியா ஒரு போதும் தன்னை விடுவித்துக்கொள்ள முடியாது. இலங்கையை சீர்குலைப்பதில் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்தவர்கள் சிலரே, இன்று இலங்கைத் தமிழர்களின் துன்பங்களுக்கு ராஜபக்ஷ நிர்வாகமே காரணம் என்று குற்றஞ்சாட்டுகிறார்கள் என்று கோத்தபாய கூறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஐ.நாவுக்கான இந்தியாவின் முன்னாள் நிரந்தர பிரதிநிதி ஹர்தீப் சிங் பூரி இலங்கையில் நடைபெற்ற போரின் இறுதி 100 நாள்களில் இடம்பெற்ற குறிப்பிட்ட வகையிலான போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்று தெரிவித்துள்ளார். இது பற்றி கருத்து தெரிவித்துள்ள பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, இறுதி 100 நாள்களில் நடந்த சம்பவங்கள் பற்றி இலங்கை பொறுப்புக் கூறவேண்டும் என்று வலியுறுத்துபவர்கள், இலங்கையில் ஏற்பட்ட பயங்கரவாதத்தின் ஆரம்பம் குறித்து மௌனம் சாதிக்கிறார்கள் என்று குற்றஞ் சாட்டியுள்ளார்.

இலங்கையில் இந்தியா மேற்கொண்ட தலையீடு இப்பிராந்தியத்தில் பிரதான நெடுக்கடியொன்றுக்கு காரணமாயிற்று என்பதைப் பூரி உணரவேண்டும் என்றார் கோத்தபாய.

1988 இல் மாலைதீவு மீது இலங்கை பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினார்கள் என்பதை அவர் சுட்டிக் காட்டினார். இந்த விடயம் தொடர்பாக இந்தியத் தலையீடு தொடக்கம் விரிவான விசாரணையொன்றை நடத்துவது பற்றிச் சர்வதேச சமூகம் ஆலோசிக்க வேண்டும் என்றும் கோத்தபாய கூறினார்.

இன்று விடுதலைப்புலிகள் இல்லாதநிலையில் இலங்கை மிகச் சிறந்த இடமாக இருக்கிறது என்பதை அநேகர் ஏற்றுக்கொள்ளமறுக்கிறார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப)

## பெற்றோலிய கூட்டுத்தாபன சட்டங்களில் புதிய திருத்தம்

### அரசு தீர்மானம்

கொழும்பு, ஏப் 11

லங்கா இந்தியன் எண்ணெய் நிறுவனம் உள்ளிட்ட தனியார் பிரிவுகளின் பெற்றோல் உற்பத்திகளை இறக்குமதி செய்து விநியோகிக்கும் நிறுவனங்களை ஒழுங்கமைத்தல் தொடர்பில் புதிய சட்டங்களை உருவாக்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இதற்கென பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் 2 சட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சின் செயலாளர் கலாநிதி கீ.ஏ.கு.சமரதுங்க தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது நடை முறையிலுள்ள சட்டங்களுக்கு அமைய, தனியார் பிரிவுகளிடம் உள்ள பெற்றோல் உற்பத்திகளை விநியோகிக்கும் நிறுவனங்களை ஒழுங்கமைக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

பெற்றோல், டீசல், மசகு எண்ணெய் மற்றும் கப்பல்களுக்கு பயன்படுத்தப்படும் எரிபொருள் என்பன தனியார் பிரிவுகளின் ஊடாக இலங்கையில் விற்பனை செய்யப்படுகின்றன.

புதிய திருத்தங்கள் கொண்டுவரப்பட்டதன் பின்னர் குறித்த நிறுவனங்கள் விநியோகிக்கும் உற்பத்திகளின் தன்மை மற்றும் விலை தொடர்பில் விதிமுறைகளைக் கொண்டுவர முடியும்-என்றார்.

## வகைப்படுத்தப்படாத கழிவுகள் இனிமேல் சேகரிக்கப்படமாட்டா

### கொழும்பு மாநகர சபை ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு, ஏப்11

வகைப்படுத்தப்படாத கழிவுப் பொருள்களை எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி முதல் சேகரிக்காதிருக்க திட்டமிடப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகர சபை ஆணையாளர் பத்ரா- ஜயவர்தன தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதன் ஒத்திகை நடவடிக்கையாக எதிர்வரும் 15ஆம் திகதி முதல் மாநகர எல்லைக்குட்பட்ட நிறுவனங்கள் மற்றும் வீடுகளிலிருந்து வகைப்படுத்தப்பட்ட கழிவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

வகைப்படுத்தப்படாத கழிவுப் பொருள்களால் அதனை மீளப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. அவை குவிக்கப்படுவதினால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

எனவே, இந்தத் திட்டத்தின் ஊடாக மக்கும் மற்றும் மக்காத கழிவுப் பொருள்களை வகைப்படுத்தி மக்கும் கழிவுப் பொருள்களைக் கொண்டு உயிர்வாயு, இரசாயனப் பசளை தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மக்காத பொருள்களை மீளப் பயன் படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த திட்டம் பற்றி மக்களுக்கு தெளிவுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது-என்றார்.

## இலங்கைப் பணிப்பெண் துஷ்பிரயோகம் இந்தியருக்கு சிறை

கொழும்பு, ஏப்11

இலங்கைப் பணிப்பெண் ஒருவரை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியமை தொடர்பில் துபாய் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்ட இந்திய பிரஜைக்கு 6 மாதகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தண்டனைக்காலம் நிறைவடைந்த பின்னர் அவர் இந்தியாவிற்கு திருப்பி அனுப்பி வைக்கப்படவுள்ளார்.

துபாயில் வீடொன்றுக்குள் நுழைந்து இலங்கைப் பணிப்பெண்ணை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக குறித்த இந்தியருக்கு எதிராக நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இதேவேளை, பஹ்ரேனில் நீதிமன்றம் வழங்கிய மூன்றாண்டு சிறைத் தண்டனைக்கு எதிராக இலங்கைப் பணிப்பெண் ஒருவர் அந்தநாட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டுள்ளது.

பணிபுரிந்த வீட்டின் உரிமையாளர் வெளிநாட்டுக்குச் சென்றிருந்த சந்தர்ப்பத்தில் வீட்டிலிருந்து ஒரு இலட்சம் பஹ்ரேன் தினாரையும் பெறுமதிவாய்ந்த பொருள்களையும் கொள்ளையிட்டதாக அவர்மீது குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

குற்றவாளியாகக் காணப்பட்ட குறித்த இலங்கைப் பெண்ணுக்கு மூன்று வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# வலிமையான நாடுகளின் பொருளாதார தடைகளால் பாதிக்கப்படுவது நாமே

## மனிதவுரிமை பற்றி பேசும் நாடுகள் சிந்திக்க வேண்டும் என்கிறார் ஜனாதிபதி

அபிவிருத்தி அடைந்த நாடுகளின் மனித உரிமை மீறல்கள் குறித்தும் இதர விடயங்கள் குறித்தும் பேசும் சில நாடுகள் தாங்கள் விதிக்கும் சில தடைகளால் அந்த நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் நெருக்கடிகள் குறித்தும் சிந்திக்க வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியின் 2012 ஆம் ஆண்டறிக்கையை வெளியிட்டு வைத்து நேற்று உரையாற்றிய ஜனாதிபதி, அரசை குற்றம்சாட்டுபவர்கள் ஒன்றையும் ஆராயாமல் கண்ணை மூடிக்கொண்டு பேசுவதாகவும் சாடினார்.

இலங்கை மத்திய வங்கியில் நேற்றுக் காலை ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் கூறியதாவது,



போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் நடக்கும் செயல்திட்டங்கள் குறித்து எவரும் பேசுவார் இல்லை. முன்னாள் புலி உறுப்பினர்களை நாம் தண்டிக்கவில்லை. சிறைகளில் அடைத்து அவர்களை பழிவாங்கவில்லை. அவர்களுக்கு புனர்வாழ்வு அளித்து அவர்களுக்கு தொழில் வாய்ப்பையும் வழங்கி உள்ளோம். பொலிஸிலும், இராணுவத்திலும் அவர்கள் இணையும் போது அவர்களுக்கு அணிவகுப்பை மட்டுமே சொல்லிக் கொடுக்க வேண்டியிருந்தது. அவர்கள் இதர பயிற்சிகளை பெற்றிருந்தனர். அப்படித்தான் நாங்கள் நடந்து கொண்டோம். ஆனால், எங்களுக்கு எதிராக விமர்சனங்களை முன்வைக்கும் பலருக்கு நாங்கள் தென்பகுதியை விட வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்கிறோம் என்பது தெரியவில்லை. அந்த இரு மாகாணங்களின் [illegible] இதுவரை [illegible] ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

முன்னைய காலங்களில் இந்த மத்திய வங்கி இருக்கும் பகுதிகளுக்கு வருவதற்கு மக்கள் அச்சப்பட்டனர். ஏனெனில் என்ன நடக்கும் என்பது தெரியாது குண்டுகள் வெடிக்கலாம் என்பதால் இந்தப் பகுதியில் செல்லும் போது சற்று வேகமாக செல்லும் வழக்கமும் இருந்தது. இதுதான் உண்மை. நாங்கள் அந்த நிலையை மாற்றி நாட்டை அபிவிருத்தி நோக்கி கொண்டு செல்கிறோம். அண்மையில் மத்தளவில் புதிய விமான நிலையம் ஒன்றை திறந்தோம். உண்மையில் இதுதான் எமது நாட்டின் முதலாவது சர்வதேச விமான நிலையம் என்பது எனது கருத்து.

ஆனால், அதனையும் எதிக்கட்சியினர் விமர்சிக்கின்றனர். மத்தளவில் விமான [illegible] தரையிறக்க மூன்று விமானிகள் தேவையென ஒருவர் கூறி உள்ளார். ஏனெனில், ஒரு விமானி குருவிகளை விரட்டவும், இன்னுமொருவர் யானைகளை விரட்டவும், மூன்றாமவர் விமானத்தை செலுத்தவும் தேவையென ஒரு எதிர்க்கட்சி உறுப்பினர் தெரிவித்துள்ளார் இப்படியான விமர்சனங்களை முன்வைக்கும் அவர்கள் நாட்டின் அபிவிருத்தி பற்றி கவலைப்படுவதில்லை.

சர்வதேச ரீதியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளின் தாக்கங்கள் எம்மைப் பாதித்த போதும் பொருளாதாரத்தில் நாங்கள் பெரிய பின்னடைவைச் சந்திக்கவில்லை. ஆனால் வலிமையான நாடுகள் பிற நாடுகள் மீது விதிக்கும் பொருளாதாரத் தடைகளால் பாதிக்கப்படுவதும் நாம்தான். இதனை அந்த நாடுகள் வேண்டும் - என்றார் ஜனாதிபதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பஸ்தர் காயம்

தென்மராட்சி,ஏப்.11

ஆலய தரிசனத்துக்காக வந்தவர் திருத்த வேலை நடைபெற்றுக்கொண்டிருந்த வீதியில் மோட்டார் சைக்கிள் சில்லு சறுக்கியதில் தூக்கி வீசப்பட்டு தலையில் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்கு அருகில் இடம் பெற்றது.

ஆலயத்துக்கு அடியார்களுடன் வருகை தந்த வாகனங்களுக்காக வீதியோரத்துக்கு மோட்டார் சைக்கிளை ஒதுங்கியபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

காயமடைந்தவரான மட்டுவில் தெற்கைச் சேர்ந்த கோவிந்த பிள்ளை வரதராஜமூர்த்தி (வயது-55) சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (ந-9)

## புதுவருடத்தில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம்,ஏப்.11

புதுவருடத்தை முன்னிட்டு குருதிக் கொடை முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கொக்குவில் இந்து விளையாட்டுக் கழகத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெற உள்ள முகாம் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் பொற்பதி அறிவாலயத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறை அஞ்சலி இளையோர் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் குருதிக் கொடை முகாம் எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை நெல்லண்டை வீதி அஞ்சலி உளவளத் துறை நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் குருதிக் கொடை முகாம்களில் குருதிக் கொடையாளர்கள் பங்கு பற்ற முடியுமென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (உ-ரி)

# தம்மை கடனாளியாக்காதீர் என சாவகச்சேரி வணிகர் உருக்கம்

## நடைபாதை வியாபாரத்தை ஒழுங்குபடுத்தவும் வலியுறுத்து

சாவகச்சேரி,ஏப்.11

புதுவருட வியாபாரத்தில் ஈடுபடும் நடை பாதை வியாபாரிகள் நேர்மையாகச் செயற்பட வேண்டும் எனவும், இது விடயத்தில் சாவகச்சேரி நகர சபையும் நிரந்தர வர்த்தகர் களின் நலன்களை மதித்துச் செயற்பட வேண்டும் எனவும் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் சாவகச்சேரி வணிகர் மன் றம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;

தற்போது யாழ்.மாவட்டத்தில் மிகப்பெரிய அளவில் வணிகர்களின் வியாபாரம் வீழ்ச்சிகண்டு வருகின்றது. இவ் வீழ்ச்சிக்கான காரணங்கள் பல. எனினும் இவ்வீழ்ச்சியில் இருந்து மீள்வதற்கு வணிகர்கள் படாதபாடுபடுகின்றார்கள் என்பது வணிகத்தோடு தொடர்புபட்ட அனைவருக்கும் புரியும். இப்படியான காலகட்டத்தில் நாம் பொதுவாக பண்டிகைக் காலங்கள், தமிழர் திருநாள்கள் போன்றவற்றையே வியாபாரத்துக்காக மிகவும் எதிர்பார்த்துக் காத்திருப்பது வழமை.

எனினும் நாம் ஓரளவேனும் வீழ்ச்சியில் இருந்து மீளலாம் என எண்ணும் போது எமது வயிற்றில் அடிப்பது போல வழமைக்கு மாறாக இப் பண்டிகைக் காலங்களில் மிகப் பெரிய அளவில் நடைபாதை வியாபாரிகள் வருகை தந்து எமது எண்ணத்தைத் தவிடு பொடியாக்குகின்றார்கள்.

எனவே அன்பான நடைபாதை வியாபாரிகளே தயவு செய்து எம்மை மேலும் மேலும் கடனாளியாக்காதீர்கள். உங்களைப் போல் நாமும் உழைக்க வேண்டும். எமது கடமை களைச் செய்ய வேண்டும் என்பதை மறக்காதீர்கள்.

எனவே எமது வியாபாரத்தில் தயவு செய்து நட்டத்தை ஏற்படுத்தாதீர். அதுபோல் இந்த நடவடிக்கையை எப்போதும் வரு மானம் கருதி ஆதரிக்கின்ற நகராட்சி மன்றை மனச்சாட்சிப்படி நேர்மையாக நடக்கும்படி அன்பாக வேண்டுகின்றோம். சாவகச்சேரி வணிகர்களின் பங்களிப்பு எப்போதும் நக ராட்சி மன்றுக்கு தேவை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

நாம் முன்வைத்த முக்கியமான கோரிக்கையாக ,நடைபாதை வியாபாரத்தைத் தடை செய்தல் அல்லது நவீன சந்தையின் மையத்தில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் அதற்குரிய இடத்தைக் கொடுத்தல் என்கின்ற விடயத்தை நகராட்சி மன்றம் கவனத்தில் எடுக்கவேயில்லை என்பதை நவீன சந்தைக்கு அருகில் உள்ள மைதானத்தில் புதிதாக தகரக் கொட்டகைகள் போடப்பட்டு நடைபாதை வியாபாரிகளுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பதில் இருந்து உணர முடிகிறது.

எனவே எம்முடன் பேச நகராட்சிமன்றம் அழைப்பு விடுத்திருப்பதாக பத்திரிகைகளில் செய்திகள் வெளிவருவதை வெறும் பிரசாரமாகவே நாம் எண்ணுகின்றோம். இவ்வாறான செயற்பாடு தங்களுடன் புரிந்துணர்வை தோற்றிவிக்காது என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்-என்றுள்ளது. (த-8-9)

## தற்செயல் நிவாரண கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஏப்.11

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவு ஊடாக தற்செயல் நிவாரண உதவி கோரி விண்ணப்பித்தவர்களுக்கான கொடுப்பனவு வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பின்வரும் பயனாளிகள் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ அறிவித்துள்ளார்.

வேலாயுதம் செல்லம்மா-துன்னாலை, கமலநாதன் திருச்செல்வதி-கரணவாய் வடக்கு, வேலாயுதம் நல்லம்மா-கரணவாய் தெற்கு. (ந-9)

## பால் விநியோகம்: குறைபாடு இருப்பின் தெரியப்படுத்தலாம்

யாழ்ப்பாணம், ஏப்.11

யாழ். மாவட்ட யாழ்கோ நிறுவனத்தின் பால் விநியோகத்தில் குறைபாடுகள் இருந்தால் வாடிக்கையாளர்கள் சங்கத்துடன் தொடர்பு கொண்டு தெரிவிக்க இயலுமென அந்த நிறுவன பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்கோ நிறுவனத்தின் பால் விநியோகம் ஒழுங்காக இல்லை என உதயனில் வெளியாகி இருந்த செய்தியை ஆட்சேபிக்கும் அவர் அத்தகைய முறைப்பாடுகள் எதுவும் இதுவரை தமக்குக் கிடைத்ததில்லை எனவும் இத்தகைய முறைப்பாடெதனையும் வாடிக்கையாளர்கள் 0213212926 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு நிவர்த்தி செய்து கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

வாடிக்கையாளர்கள் உதயனுக்குத் தெரிவித்த முறைப்பாடே செய்தியாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. (உ)

## ஆகாசம், வாயு ஆகியவற்றின் சாத்வீக ராஜச தன்மைகளது சிறப்பியல்புகள்

ஆகாச அதன் சாத்துவிக தன்மையில் காதாக விளங்குகிறது. ராஜச தன்மையில் வாக்காக விளங்குகிறது. அதாவது பேச்சுத்துறை.

இவ்வகையில் ஆகாசத்திற்கு இரு பிள்ளைகள் உண்டு எனக் கொள்ளலாம். அவை சாத்துவீக நிலையை எடுத்தியாம்பக் காதும், ராஜச நிலையை எடுத்தியாம்ட ஒலியும் ஆகும்.

ஆகாசத்தின் முதற் பிள்ளையாகிய காது புறத்தேயிருந்து ஒலியை வாங்கிக் கொள்கிறது. இரண்டாவது பிள்ளையாகிய வாக்கு அல்லது ஒலி, உள்ளிருந்து செயற்பாட்டைப் புறத்தே சொல் உருவமாக வெளிப்படுத்துகிறது. இதுபோலவே சருமம் வாயுவின் முதற்பிள்ளை, சாத்துவிக நிலையில் இரண்டாவது பிள்ளை கை, ராஜச நிலையில் இவ்விதம் தோலானது உடம்பின் மீது ஊருகின்ற எறும்பை உணர்ந்து கொள்கிறது. கையானது அதனை அப்புறப்படுத்த விளைகின்றது.



நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது

சாயி சிந்தனை

## தென்கொரியாவில் அமைதி குலைந்தால் இலங்கையரை அழைத்துவர சகல ஏற்பாடுகளும் தயார்

கொழும்பு, ஏப் 11

தென்கொரியாவில் அமைதியற்ற சூழ்நிலை ஏற்படுமாயின் அங்குள்ள இலங்கையர்களை பாதுகாப்பாக நாட்டுக்கு அழைத்து வருவதற்கு சகல ஏற்பாடுகளும் செய்யப் பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு விரிவாக்கல் மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேராவினால் தென் கொரியாவின் இலங்கைத் தூதரகத்துக்கு இது தொடர்பில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. போர் அச்சுறுத்தல்கள் ஏற்படும் நிலையில் இலங்கை பணியாளர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்குத் தேவையேற்படின் சர்வதேச குடிவரவு அமைப்புகளின் ஆதரவுகளையும் பெற்றுக் கொள்ள ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனை முன்னிட்டு தேவையான பேச்சை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் முன் னெடுத்துள்ளது. இதேவேளை, தென் கொரியா வில் உள்ள இலங்கை பணியாளர்கள் தூதரகத்துக்குச் சென்று தம்மைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

## யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலை பராமரிக்கப்படுமா?

யாழ்ப்பாணம், ஏப்.11

யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சிற்றாலயத்துடன் இணைந்த கத்தோலிக்க சேமக்காலை பராமரிப்பு இன்றியும், அசுத்தமான நிலையிலும் காணப்படுவதாக சேமக்காலைக்குச் செல்லும் வெளியூர் கத்தோலிக்க மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

''யாழ்.மரியன்னை பேராலயத்துக்குட்பட்ட யாழ்.மாந கர எல்லைக்குள் உள்ள குறித்த சேமக்காலை பற்றைக் காடாகக் காணப்படுகின்றது. புனிதமாகப் போற்றப்பட வேண்டிய சேமக்காலையை இயற்கைக் கடன் கழிப்பிடமாக வும் பயன்படுத்துவதால் சேமக் காலைக்குள் நுழைய முடியாத நிலையில் துர்நாற்றம் வீசுகிறது'' என்று அவர்கள் கூறுகின்றனர்.

நவம்பர் மாதத்தில் இடம்பெறும் புனித ஆத்மாக்களின் திருநாள் வேளையில் மட்டும் ஒவ் வொரு கல்லறையும் உறவினர்களால் துப்புரவு செய்யப்படுகின்றது.

அதன்பின் உறவினர்களும் வருவதில்லை, பராமரிப்பும் இடம்பெறுவதில்லையெனவும் தெரிவிக்கப் பட்டது. (வ-9)

## புத்தாண்டு கொடுக்கல் வாங்கல்

யாழ்ப்பாணம், ஏப்.11

யாழ்.கன்னாதிட்டியில் உள்ள மக்கள் வங்கிக் கிளையில் புதுவருடத்தினத்தன்று காலை 8.30 மணிக்கு வாடிக்கையாளர் சேவையை ஆரம்பிக்கும் புதுவருடக் கொடுக்கல் வாங்கல்களும், கைவிசேடக் கொடுப்பனவும் நடைபெறவுள்ளன.

மேலும் 5000, 10,000, 25,000, 50,000 தொகையில் மேற்கொள்ளும் ஒரு வருட வைப்புகளுக்கு முறையே குடை, சுவர்க் கடிகாரம், கிறைண்டர், காஸ்குக்கர் ஆகிய பரிசுகளும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் முற்பகல் 10 மணிக்கு நிறுவுதின நீட்டிப்பின் ''இசுறு உதான'' வெற்றியாளர்களுக்கும் ''ஜெயசிறி'' வெற்றியாளர்களுக்குமான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றவுள்ளது. (உ-ரி)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 03.08.1995 மறைவு: 23.03.2012

அமரர் சந்திரசேகரம் சுஜித்தா

ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை உன் நினைவுகள்
சுஜித்தா என்றும் எம்மை விட்டகலாத உன்
நினைவுகளுடன் வாழும்

7 ஆம் கட்டை, சேர்ச்லேன்,
மல்லாகம்.

சித்தி (குணா),
அம்மம்மா.

(35848) (6)



## உடனடி வேலைவாய்ப்பு

மத்திய கிழக்கு கட்டாரை தலைமையகமாகக் கொண்டு 2006 ஆம் ஆண்டு முதல் இயங்கும் Morning Star Trading & Contracting கம்பனியில் மத்திய கிழக்கில் வேலை செய்வதற்கு பின்வரும் வேலை வாய்ப்புக்கள் உள்ளன.

| தொழில் | எண் | சம்பளம் QAR |
|---|---|---|
| 1. மேசன் | 20 | 1200 |
| 2. தச்சு தொழிலாளி | 20 | 1200 |
| 3. உருக்கு பொருத்துபவர் | 25 | 1200 |
| 4. HVAC தொழிநுட்பவியலாளர் | 05 | 1400 |
| 5. பிளம்பேர்ஸ் | 05 | 1200 |
| 6. HVAC Duct தொழிநுட்பவியலாளர் | 05 | 1200 |
| 7. எலக்ரீசியன்ஸ் | 05 | 1200 |
| 8. வெல்டேஸ் | 05 | 1300 |
| 9. உதவியாளர்கள் | 10 | 750 |
| 10. பெயின்ரர் | 05 | 1100 |

நிபந்தனைகள்
* இரண்டு வருட கால ஒப்பந்தம்
* வீசா இலவசம்
* மருத்துவ வசதி, தங்குமிட வசதி என்பன வழங்கப்படும்
* ஒப்பந்த காலத்திற்குள் அனைத்து வேலையாளருக்குமான காப்பு றுதி

மேலதிக தொடர்புக்கு:

அ.ஸ்ரனிஸ்லஸ் 077 911 9075 (35856)(6.11)



## ஓராண்டு நினைவஞ்சலி





எமது பாசமிகு மகள்

அமரர் சந்திரசேகரம் சுஜித்தா

மண்மகிழ 03.08.1995 கண்நெகிழ 23.03.2012

திதி:- 11.04.2013

தாய்மடிமீதேறி மழலையாய் நீ பூத்து
தவழ்ந்திருந்த போதெல்லாம் - நாம்
பூரித்துத்தான் இருந்தோம் உமைக் கண்டு
பிஞ்சுக்கால் பதித்து துள்ளிக்குதித்து
நீ பள்ளிக்குச் சென்றபோதும்
பார்த்து மகிழ்ந்தோம் அன்று
இன்று கடிதென வளர்ந்து கலகலப்பாய்ப் பேசி
பலர் மனம் கவர்ந்த சுஜித்தா
இப்போது மட்டும் உன் வாய் பேச மறுப்பதேன்
சுஜித்தா, எம்மைவிட்டு எங்கு சென்றாய்
ஏங்குதம்மா எம்மிதயம் உன் பிரிவால்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நாகபூசணி ஒழுங்கை,
நரியிட்டான், மல்லாகம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(35849)(2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பைமேட்டுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் 5 பேர் கைது



கொலன்னாவை, ஏப்11
கொலன்னாவை மீதொட்டமுல்லயிலுள்ள குப்பை மேட்டை அகற்று மாறு கோரி செவ்வாயன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் 5 பேர் பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாநகர சபையால் மீதொட்டமுல்ல பிரதேசத்தில் குப்பைகள் கொட்டப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த சனிக்கிழமை முதல் பிரதேச வாசிகளால் இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டுவந்தது.

இந்நிலையில், அவர்கள் நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை பொலிஸாரால் விரட்டப்பட்டமை குறிப்பி டத்தக்கது. இதனால் குறித்த பிரதேசத்தில் பதற்ற நிலை ஏற்பட்டதையடுத்து 5 பேர் பொலிஸாரால் கைது செய் யப்பட்டனர்.

அமைதிக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் புத்திக சிறிவர்தன தெரிவித்தார்.

# மேலும் 66 இலங்கையர் ஆஸி.கரையடைந்தனர்

இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் 66 பேர் படகு மூலம் ஆஸ்திரேலியாவைச் சென்றடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்கு ஆஸ்திரேலியாவின் ஜெரால்டன் துறைமுகத்தை அண்டிய பகுதியை குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் சென்றடைந்துள்ளனர். அந்தப் படகில் பெண்கள், சிறுவர்கள் உள்ளிட்டோரும் பயணித்துள்ளனர்.

படகில் பயணித்தவர்களில் அதிக மானவர்கள் தமிழர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பகலில், பாதுகாப்பு கட்டமைப்புக்குள் சிக்காது துறைமுகத்தை அண்டிய பகுதிக்குள் குறித்த படகுப் பயணிகள் பிரவேசித்தமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

# இனங்களின் இடைவெளியை நிரப்ப பேராயரின் யோசனை



சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதன் மூலமும், நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதன் மூலமும் இனங் களுக்கு இடையிலான இடைவெளியை நிரப்ப முடியும் என்று அங்கிலிக்கன் திருச்சபையின் முன்னாள் தலைமைப் பேராயர் துலிப் டி சிக்கேரா தெரிவித்துள்ளார்.

பேச்சு மூலம் இன சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை வலுப்படுத்திக்கொள்ள முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மதங்களை மனிதரின் பிரதான அடையாளமாக கருத முடியாது.

ஒரு மதச் சமூகம் ஏனைய சமூகங்களை அடக்கி ஆள முற்படும்போது முரண்பாடுகள் ஏற்படுகின்றன. கடும்போக்காளர்கள், மிதவாதிகள் என சகல தரப்பினரும் ஒன்றாக இணைந்து பிரச்சினைகளுக்கு பேச்சு மூலம் தீர்வு காண்பதே ஏற்புடைய நடைமுறையாகும்-என்றார்.

# வெசாக் நிகழ்வுகள் மொனராகலையில்

வெசாக் தின கொண்டாட்டங்களை இம்முறை மொனராகலை மாவட்டத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் பிரதமரும் புத்த சாசன மற்றும் மத விவகார அமைச்சருமான தி.மு.ஜயரத்ன இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

இதன்படி, மொனராகலை மாவட்டத்தைச் சேர்ந்த புத்தள, யுதகனாவ ரஜமஹா விகாரை வளவில் எதிர்வரும் மே மாதம் 25ஆம் திகதி 57 ஆவது அரச வெசாக் பெருநாள் நடை பெறும்.

# டிப்பர்–மோ. சைக்கிள் விபத்து; இருவர் சாவு

ஆனைமடு - பங்கதெனிய வீதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் மேலும் இருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் குறிப் பிட்டனர். இதுகுறித்து பொலிஸார் மேலும் தெரிவித்ததாவது:-

டிப்பர்- மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 70 வயதான பெண் ஒருவரும் ஒரு வயது நிரம்பிய ஆண் குழந்தையுமே உயிரிழந்தனர்.

விபத்தில் காயமடைந்த 4 வயது சிறுமியும் மற்றுமொரு பெண்ணும் சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# இரவு நேர உணவுச் சந்தை பத்தரமுல்லையில் திறப்பு

இலங்கை உணவு தயாரிப்பாளர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள இரவு நேர உணவுச் சந்தை நேற்று முன்தினம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவால் பத்தரமுல்லை -'தியத்த-உயன'பூங்காவில் திறந்து வைக்கப்பட்டது.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ உட்பட பிரமுகர்கள் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். வர்த்தக கூடங்களையும் பார்வையிட்டனர்.

இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 50 இற்கும் மேற்பட்ட வர்த்தக கூடங்கள் இங்கு அமைக்கப்பட் டுள்ளன. பாவனையாளர்கள் நியாய விலையில் உணவுப் பொருள்களை கொள்வனவு செய்யும் நோக்கிலேயே குறித்த இரவு நேர உணவுச் சந்தை திறக்கப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# மஸ்கெலிய பொலிஸ் பிரிவில் ஆணொருவரின் சடலம் மீட்பு

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சாமி மலை குமரி தோட்டத்தில் 65 வயதுடைய ஆணொரு வரின் சடலம் மீட்கப்பட் டுள்ளது. குறித்த நபர் நேற்று முன்தினம் இரவு கொலை செய்யப்பட்டிருக் கலாமென சந்தேகிக்கப்ப டுகின்றது.

ஒரே வீட்டில் வசிக்கும் தந்தைக்கும் மகனுக்கும் நேற்று முன்தினம் இரவு வாய்த்தர்க்கமும் கைக்கலப்பும் ஏற்பட்டுள் ளது.

இதன்போது 65 வயதுடைய தந்தை மர்ம மான முறையில் உயிரிழந் துள்ளார். உயிரிழந்தவரின் உடலில் வெட்டுக்காயங்கள் காணப்பட் டுள்ளன. இந்தச்சம்பவம் தொடர்பில் தோட்ட மக்களால் மஸ் கெலியா பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு சென்ற மஸ்கெலியா பொலிஸார் விசாரணைகளில் ஈடு பட்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள உயிரிழந்தவரின் மகனான 35 வயதுடைய நபர் பொலிஸாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

# றப்பர் தோட்டத்தில் கருங்காலி மரங்கள் பொலிஸாரால் மீட்பு

மொனராகலை, புத்தள, மகசொடயாய பிரதேசத்தில் றப்பர் தோட்டத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கருங்காலி மரக் குற்றிகள் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப் பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட மரக்குற்றிகளின் பெறுமதி ஒரு லட்சத்து எண்பதாயிரம் ரூபா என கணிக்கப் பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்பட வில்லை எனவும் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மரண அறிவித்தல்

### தம்பையா துரைச்சாமி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் தற்பொழுது கனடாவில் வசித்தவருமான தம்பையா துரைச்சாமி 08.04.2013 கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா- செல்லம் தம்பதியரின் மூத்தமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சியாமளாதேவி (கனடா), சிறீ மோகன் (பதிவாளர், மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்), சிறீராகவன் (பிரான்ஸ்), சிறீவிஜயன் (கனடா), மீரா (ஆசிரியை, கொழும்புத்துறை இந்து மா.வி), மஞ்சுளா ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசேந்திரம் (கனடா), வசந்தி, சாந்தி, குசலா (கனடா), காலஞ்சென்ற மகேந்திரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

197, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P NO-021 222 5283

தகவல்:
து.சிறீமோகன்
(மகன்).

(35895)(6.11)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
14.02.1943

மறைவு
07.04.2008



அமரர்
சுப்பையா கணேசு
[தந்தை சொல்மிக்க மந்திரமில்லை]

வாழ்க்கை எனும் ஓடம் வழி தவாறது பயணிக்க
நாக்கை அடக்கி வாழ்வதே நற்பண்பென
உறவின் உயிரோட்டமாய் எங்களை வழி நடத்திய
உயிரான உறவாம் – எம் அப்பாவின்
ஐந்தாம் ஆண்டு நினைவுடன்

டச்றோட், மானிப்பாய்.

குடும்பத்தினர்.

(35889)(5.6)

## மரண அறிவித்தல்

### சின்னப்பிள்ளை இராமலிங்கம்



கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், சட்டநாதர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பிள்ளை இராமலிங்கம் 09.04.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், கந்தையா, வள்ளிப்பிள்ளை மற்றும் சிதம்பரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராமலிங்கத்தின் அன்பு மனைவியும், ஜெயராணி, ஜெயராஜா (சாலை முகாமையாளர்-காரைநகர் சாலை) ஆகியோரின் அன்புத் தாயும், கணேசலிங்கம், உமா (ஆசிரியை-யா/செங்குந்தா இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும், சுகன்யா (மாணவி-சட்டத்துறை, 3ஆம் வருடம், யாழ்.பல்கலைக்கழகம்), டற்சிகன் (மாணவன்-2014 கணிதப் பிரிவு, யா/இந்துக்கல்லூரி), குலரூபன் (மாணவன்-2015, கலைப்பிரிவு, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2013) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.28, சட்டநாதர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(C/8307)(10.8.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மண்கும்பான் வெள்ளைப்புற்ற

# புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம்

11.04.2013

முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணி வரையிலான அமிர்த சித்தயோகமும் அச்சுவி
சுப முகூர்த்த வேளையில் வெள்ளோட்ட விழா இடம்பெறும்

## அருளாசிச் செய்தி



உலகெல்லாம் செழிக்க உயிரினங்கள் வாழ எல்லாம் வ
ஸ்ரீ வீரகத்தி விநாயகருக்கு புதிய முகவுத்தர எண்கோ
அழகுற அமைக் கப்பெற்று நந்தன வருடம் பங்குனித்
வியாழக்கிழமை வெள்ளோட்ட விழா நடைபெறவிருக் கின்
மண்கும்பான் என்னும் மாபதியில் விக்கினங் கள் தீர்
ஓங்கார ரூபா ஒளிமய மான ஜோதியாக ஒளி
விநாயகனே உனை நிதம் சுமந்து வர. சித்திரத்
அமைத்த அவ்வூர் மக்களுக்கு வரும் இடர் தீ
மாபவனி மானிலத்தோர் போற்றிடவே.

வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்துவரும்.

அனைவருக்கும் அருள் புரிந்து நல்வாழ்வு தர வேண்டுமென உளமாரப் பிரார்த்தித்து அருளாசி நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.

## ஸ்தபதியின் ஆசிச் செ

மண்கும்பான் வெள்ளைப் புற்றடியில் ஓங்காரரூபன் விநாயகப் பெருமான் த
விரும்பி இடம் கொண்டு அருள் பாலிக்கின்றார்.

விண்ணிலே அணுவெடித்து, அண்டவெளிக் கதிர்கள் தவளை மாநெறியாக (ம
ஒளியாக விளங்குகிறது. அதிலிருந்து அதிர்ந்து பிறந்ததே ஓம் ஒலியான பிரணவ ஒ
மயன் பேசுகிறார். கனசதுரவடிவமான அணு விண்ணில் இருந்து மண்ணை அடை
கின்றது என்றும் பேசுவார். பிரமிட்டு வடிவமாகப் பிரபஞ்சம் அமைகின்ற ஒழுங்கை
விஸ்வ கர்ம முனிவர்கள், தூபிகள், கோபுரங்கள், பிரபஞ்ச வடிவமான தேர்கள் ஆகி

மகாதிரிபுரமாகிய கோட்டைகளை அழிக்க விஸ்வகர்மாவாகிய சிவபெருமான் பு
அச்சைப் பொடி செய்தவர் விநாயகப் பெருமான். முதல் வணக்கம் ஏற்றருளும்
திருத்தேர் ஒன்றை அமைப்பதற்கு எனக்கும் என் பஞ்சகிருத்திய பரிவாரர்களுக்கு

வெள்ளோட்டம் என்பது ஓர் ஊர்தியின் பரீட்சார்த்த ஓட்டமும், அத்தேரி
பரசிவரூபராகப் பூசிப்பதும், அவர்களால் செய்யப்படும் தேர் பிரதிஸ்டையும் ஆகு

இக் கைங்கரியத்தை முன்னின்று நடத்தும் ஆலய பரிபாலகர்கள், உபயகாரர்க
பெருமானின் நல்லருள் கிடைக்க வேண்டி ஆசி கூறுகின்றேன்.

★★★★★★★★★★★★★★★★★★★★விளம்பர அனுசரண

Maithely
Nagai Madam
மைதிலி
நகைமாடம்
தங்கநகை வியாபாரி
89 V, Kasthuriyar Road,
Jaffna. T.P. 021 222 7902

நியூ நகுலா
ஜுவல்லர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 4101

நியூ லலிதாஸ்
ஜுவல்லர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
111, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 4134

கந்தவேலன்
ரேடர்ஸ்
110, Stanley Road,
Jaffna
T.P : 021 2222822
Fax : 021 222 4496

ஹரன்
ரேடர்ஸ்
134, ஸ்ரான்லி
வீதி,
யாழ்ப்பாணம்


புதிய நவீனா
நகையகம்
Navena Nakaiyakam
Genuine 22 Kt Jewellery
Manufacturing jewellery
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 7115 625

பாலவிநாயகர்
மோட்டோர்ஸ்
NO. 6, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

அம்பிகை ஜுவலர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து
கொடுக்கப்படும்
T.P. 021 222 2538
34 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர்



...வினி நட்சத்திரமும் கூடிய...
...ம்


## ...செய்தி



...தானே திருவுளங்கொண்டு,

...(மண்டுக பதமாக) பரந்து ஓம்
...ஒலிஎன விஸ்வகர்மாவாகிய
...டயும்போது வட்டமாக அமை
...க வைத்துக் கொண்டே தமிழ்
...ஆகியவற்றை அமைத்தார்கள்.
...புறப்பட்டபோது திருத்தேரின்
...ஐங்கரனுக்கு, திராவிட முகபத்திர எண்கோண
...தும் அப்பெருமான் அருணோக்கம் செய்துள்ளார்.
...தரின் நிர்மாணியான ஸ்தபதியை விஸ்வகர்ம
...கும்.
...ர்கள், அடியார்கள் யாவருக்கும் விக்கினேஸ்வரப்

ஸ்தபதி க.இளங்கோவன் ஆச்சாரியார்.



...ணை ★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

**உதயர் ஜுவல்லர்ஸ்**
தங்கப்பவுண் நகை வியாபாரம்
தொ.பே. 021 2224 434
81, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தரமான 22
கரட் தங்க நகைகளுக்கு
நீங்கள் நாடவேண்டிய ஒரே
இடம் ஓடர் நகைகள்
குறித்த தவணையில் செய்து
தரப்படும்.

**சிறி மதுனா**
நகை மாளிகை
தங்கப்பவுண் நகை
வியாபாரம்
ஓடர் நகைகள் 22 கரட்டில்
குறித்த
தவணையில் செய்து
கொடுக்கப்படும்.
இல. 155/M கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 7772

**புதிய நதியா நகை மாடம்**
உங்கள் ஓடர் நகைகளை குறித்த
தவணையில் நாகரிமான டிசைன்களில்
உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்
புதிய நதியா நகை மாடம்
103,73 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 2223261,
021 2228397

**ஐங்கரன்**
**மோட்டோர்ஸ்**
137, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

மலர் அமைப்பு:- கதிர்

(ரீ/5585) (2-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஏப்.11

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை 2012 பெறுபேறுகள். அண்மையில் வெளியாகி யிருந்தன. அதனடிப்படையில் பாடசாலை ரீதியாக எமக்குக் கிடைத்த பெறுபேறு கள் வருமாறு:-

**உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்**

க.சுதர்சன்-9ஏ, ச.திலக்சனா-8ஏபி, சி.கௌதம்ராஜ் -4ஏ3பிசிஎஸ், சி.கிருஷிகா -3ஏ3பி2சிஎஸ், கு.யசந்த குமார்-3ஏ2பி3சி, ரி.சர்வதன் - 3ஏ2பிசி3எஸ், க.நிஷாந்தினி-2ஏ2பிசி2எஸ், ப.லக்சன்-2ஏபி2சி4எஸ், கு.விதுர்சன்-2ஏபிசி5எஸ், அ.லோஜிதன்-2ஏ5சி2எஸ்.

**கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.**

க.சாந்தினி-7ஏபிசி, கோ.கஸ்தூரி-5ஏ2பி2சி, தே. ரஜினா-5ஏ பி3சி, க.தனுஸா-4ஏ2பி2சி, ந.டினோஜா-3 ஏ2பி 2சிஎஸ்.

**சன்மார்க்க மகா வித்தியாலயம்**

செல்வி கீர்த்திகா நந்தகுமார் - 6ஏ2சிஎஸ். (வ-250)


## ஏழு ஆண்டுகளும் கழிந்தனவோ?
## நெஞ்சு விட்டகலாத நினைவலைகள்

மலர்வு
24.12.1942

உதிர்வு
30.03.2006



அமரர்
**நாகலிங்கம் றெங்கநாதன்**

(தொழில் நுட்ப உத்தியோகத்தர் (T.A)
நீர்ப்பாசனத் திணைக்களம்)

திதி: பிரதமை (11.4.2013) வியாழன்

ஏழு ஆண்டுகளாய் ஏங்கித் தவிக்கின்றோம்
ஏரம்பன் அருளால் பெற்றிடுக சாந்தி!!

அத்தியடிப் பிள்ளையார் கோயிலடி,
அம்பலவாணர் வீதி, யாழ்ப்பாணம். (35806) (6.7.11)

உங்கள் நினைவோடு வாழும்
அன்பு மனையாள், மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



## மரண அறிவித்தல்
### பவளகாந்தராசா கார்த்தீபன்



மாதகலை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட பவளகாந்தராசா கார்த்தீபன் 31.03.2013 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் பவளகாந்தராசா-சந்திரலேகா தம்பதியரின் மகனும் இளங்கீரன் (அமரர்) முகுந்தன் (அமரர்) துஷாந்தன், துஷாந்தினி (A/L 2012 பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2013) வியாழக்கிழமை (ஜேர்மன் நேரம்-9.00Am-1.00 Pm) ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாதகல் வடக்கு,
மாதகல். (c/8301)(6.11)

தகவல்:
குடும்பத்தினர்.



## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
22.06.1956

உதிர்வு
27.03.2009

அமரர் **குண்டுமணி திரவியநாதன்**
(உடுப்பிட்டி)

கணிதத்தின் சிகரமே! விழி மூடிய சிந்தனையா?
மௌனத்தை ஊற்றி வைத்த பாத்திரமாய் இருக்கின்றீர்கள்
மௌனித்தது போதும் மலர் விழிகளைத் திறந்து பாருங்கள்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்
நாவலடி, உடுப்பிட்டி. குடும்பத்தினர். (C/8289)(2.6)


# பயன் கருதாப் பணி செய்த காந்தீயவாதி



உருத்திரபுரம் காந்தி நிலையத்தின் நிறுவுநரும் அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் முன்னாள் தலைவருமான சி.க.வேலாயுதப்பிள்ளை அவர்களது இருபதாவது ஆண்டு நினைவு தினம் [11.04.2013] இன்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.


எம்.ஜெயந்தன் சத்தியகீர்த்தி
அகில இலங்கை காந்திசேவா சங்கம்


இளம் பருவத்திலேயே காந்தீயக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவர் சி.க.வேலாயுத பிள்ளை அவர்கள். சாதாரண உயரம், நல்ல நிறம், பரந்த நெற்றி, சிறிய குடுமி, நான்கு முழவேட்டி, மேலாடை அற்ற தோளில் சால்வை இவ்வாறான தோற்றமுடைய அவர் 1922 ஜப்பசி 31 ஆம் திகதி யாழ்ப்பாணம் நீர்வேலியில் பிறந்தார்.

கல்வி கற்கும் பருவத்தில் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, பண்டிதர் செ.துரைசிங்கம் ஆகியோரின் தொடர்பு அவரை நற்பண்பாளனாக்க வழி வகுத்திருந்தது. மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற உண்மை மொழியை தனது தாரக மந்திரமாகக் கொண்டு இறுதிவரை பிரமச்சாரியாகவே வாழ்ந்து மக்கள் சேவையாற்றியவர் அவர்.

''காந்தீயம்'' என்று அடைமொழியால் அழைக்கப்பட்ட அவர், அகில இலங்கை காந்திசேவா சங்கம் நிறுவப்படுவதற்கு மூல காரணமாயிருந்தவர். ஹெண்டி பேரின்பநாயகம், பேராசிரியர் நேசையா, முதலியார் சின்னத்தம்பி, பொ.கந்தையா (காந்தி வாத்தியார்), பண்டிதர் துரைசிங்கம் ஆகிய காந்தியவாதிகளின் ஆலோசனைகளைப் பெற்று காந்தி சேவா சங்கம் மூலம் பல சமூகத்தொண்டுகளைச் செய்து வந்தவர். அவர் இந்தியா சென்று பூதான இயக்கத் தலைவர் வினோபாவின் சர்வோதய மாநாடுகளில் கலந்துகொண்டதன் மூலம் காந்தீயக் கொள்கைகளைப் பரப்புவதில் வெற்றி கண்டவர்.

அக்காலத்தில் காந்தீயத் தொண்டர்களின் பேச்சுகளும் அவர்களது எளிமையான வாழ்க்கை முறையும் யாழ்ப்பாண மக்களுக்கு காந்திய தத்துவத்தில் ஆர்வத்தை ஊட்டின.

காந்திசேவா சங்கத்தின் செயற்பாடுகளைப் பன்முகப்படுத்தும் நோக்கத்தோடு கிளிநொச்சி உருத்திரபுரத்தில் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தை நிறுவி காந்திய நெறியில் பல பணிகளை ஆற்றி வந்தார். பெற்றோரை இழந்த சிறுவர்களுக்காக உருத்திரபுரத்தில் இல்லம் அமைத்து சிறந்த முறையில் பராமரித்து வந்தார்.

''எவன் தனக்குத் தானே சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்கிறானோ அவனே சுதந்திர புருஷன்'' என்ற காந்தியடிகளின் கூற்றுக்கிணங்க வாழ்ந்த பெருமகன் அவர்.

''மகாத்மா காந்தியின் காலம் தொடக்கம் இந்தியாவில் நடைபெற்ற சகல சர்வோதய சம்மேளனங்களிலும் பங்குபற்றிய ஒரே ஒரு இலங்கையைச் சேர்ந்த காந்தியவாதி இவர் ஒருவரே. சர்வோதய முதியோர்கள் ஆலோசனைச் சபையின் அங்கத்தவராகவும் கிளிநொச்சி மாவட்டத்தின் இணைப்பாளராகவும் செயலாற்றி, காந்தியடிகளின் எண்ணங்களை [illegible] சேவையில் இளைஞர்களை ஊக்கத்துடன் உட்புகுத்தும் நோக்குடன் அளப்பரிய சேவையாற்றினார்.

''வேலாயுதபிள்ளையின் மனிதநேயமும், நட்பின் பிரதிபலிப்பும் எப்படிப்பட்டதாயிருந்தது என்பதற்கு, அவர் தன்னுடைய கிளிநொச்சி ஆச்சிரமத்தில் 1960 ஆம் ஆண்டில் என்னைக்கொண்டு நாட்டுவித்த மாமரத்தில் ஒவ்வொரு பருவகாலங்களிலும் காய்க்கும் மாம்பழங்களில் என்னுடைய பங்கான மாம்பழங்களை எனக்குக் கொண்டு வந்து தந்து கொண்டிருந்தமையே சான்றாகும். வேலாயுதப்பிள்ளையின் வாழ்நாள் ஞாபகங்கள் எங்கள் எல்லோருக்கும், மனித சமுதாயத்துக்கும், வாழ்கின்ற உலகுக்கும் உயர்நலமான சேவைகளைச் செய்வதற்கு ஊக்கமளிக்கட்டும்'' என்று இலங்கை சர்வோதய இயக்கத் தலைவர் கலாநிதி ஏ.ரி.ஆரியரத்னா, காந்தி வேலாயுத பிள்ளையின் நினைவுகளைப் பகிர்ந்துகொள்கிறார்.

வன்னிப்பிரதேசத்தில் குடியேற்றங்களும் குடிப்பரம்பலும் ஏற்படாத காலமது வெளியான இடங்களில் திட்டமிட்டுப் பனைமரங்களை நாட்டி அவற்றின் பராமரிப்பில் கவனம் செலுத்தினார் வேலாயுதபிள்ளை. அவை வளர்ந்து பயனளிப்பதைக் காணக் கொடுத்து வைத்தவர். விழாக்கள் ஒழுங்குசெய்து பனையின் பயனை மக்கள் உணர உதவினார். வேலாயுதபிள்ளை அவர்கள் சர்வோதயத்தில் கொண்ட ஈடுபாட்டினால் தர்மஅந்த இயக்கத்துடன் இணைந்து கொண்டு தமது இறுதிமூச்சுவரை நலிந்தோரின் உயர்ச்சிக்காகவும் தமது பணியின் வளர்ச்சிக்காகவும் பாடுபட்டார். சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினால் திருநெல்வேலியில் நடத்தப்படும் சிறுவர் நிறைவாழ்வு இல்லம், வேலாயுதபிள்ளை அவர்களை உருவாக்கியதில் பெரும் பங்கு வகித்திருந்தது. மகாத்மா காந்தியின் அடிச்சுவட்டின் நெறிநின்று உண்மைக் காந்தியத்தின் உத்தம அடியவராக விளங்கிய சி.க.வேலாயுதபிள்ளை அவர்களது நினைவுகளை நாம் மனதிருத்தி அவர்காட்டிச்சென்ற காந்திய வழியில் செயற்பட்டு எமது சமூகத்துக்கு உதவ மனம்கொள்வோம். ★


## கடை வாடகைக்கு

கடை வாடகைக்கும், கடையில் உள்ள கணினி, கணினி உதிரிப் பாகங்கள் விற்பனைக்கும் உண்டு.

தொடர்பு: 077 283 4960 (35874)(6.11)



## MARSHA SYSTEMS (PVT) LTD

www.marshasystems.lk

SOLUTION TO THE PEOPLE

Solution to the People




FREE
1 year key
Antivirus

CLASSIC
intel Pentium
3rd Generation
Intel® Dualcore® Processor G2020
Motherboard G61
2GB DDR III
Hard Disk 500 GB
19" LED Monitor
UPS DCP
ATX Casing
DVD Writer
KEY Board
Mouse
49000.00

HP G4 Pavilion
Intel Core i3 370M 2.40Ghz
2GB DDRIII SDRAM
500GB HDD 7200rpm
14" HD LED Display
69000.00





சித்திரைப்புத்தாண்டு
சிறப்புத்தள்ளுபடி
கையிருப்பு உள்ளவரை மட்டுமே.

CLASSIC
intel CORE i3
3rd Generation
Intel® Core i3 Processor 3.30GHz
Motherboard G61
2GB DDR III
Hard Disk 500 GB
19" LED Monitor
UPS DCP
ATX Casing
DVD Writer
KEY Board
Mouse
58000.00

எம்மிடம் கணனிகளை கொள்வனவு செய்து கணனி பராமரிப்பு சேவையினை எப்பொழுதும் இலவசமாக்கிக் கொள்ளுங்கள்.

இன்றே உங்கள் அருகில் இருக்கும் எமது காட்சியறைக்கு விரையுங்கள்..

யாழ்ப்பாணம்
இல : 232 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்
TP :021 4924437

நெல்லியடி
MMV Road, Nelliady
TP : 021 4924118

(c/8288)(6.7.11)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபான சாலைகளால் மக்கள் வாழ்வு சீரழிவு

## இலங்கைப் பெண்கள் சட்டத்தரணிகள் சங்கத்திடம் வாகரை மக்கள் முறைப்பாடு

மட்டக்களப்பு, ஏப் 11

மட்டக்களப்பு மாங் கேணி மற்றும் வாகரைப் பிரதேசங்களிலுள்ள மதுபானசாலைகளால் அங் குள்ள மக்களின் வாழ்க்கை சீரழிவதாக இலங்கைப் பெண்கள் சட்டத் தரணிகள் சங்கத்திடம் வாகரை மக்கள் முறையிட்டுள் ளனர்.

வாகரை மகாவித்தியாலத்தில் குடும்பத்தைப் பாதுகாப்பவர்களைப் பாதுகாப்போம் என்ற சட்ட ஆலோசனை வழங்கும் நிகழ்ச்சித் திட்டக் கருத்தரங்கு திங் கட்கிழமை இடம்பெற்றது. வாகரைப் பொலிஸாரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த அறிவூட்டல் கருத்தரங்கில் பாடசாலை மாணவர்கள், கிராம சேவை அலுவலர்கள், பொலிஸார், பொது மக்கள், பெண்கள் நிறுவனப் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள், நீதிபதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பொது மக்களுக்காக ஒதுக்கப்பட்ட குறைகேள் நேரத்தில் அவர்கள் அங்குள்ள பல்வேறு பொதுநலன் சார்ந்த விடயங்கள் குறித்துக் கேள்வி எழுப்பியதோடு தமது மனக்குறைகளையும் வெளியிட்டனர்.

பொதுவாக வாகரை, மாங்கேணி போன்ற பிரதேசங்களில் உள்ள அனுமதி பெற்ற மற்றும் அனுமதி பெறாத மதுபானசாலைகளால் பாடசாலை மாணவர்கள் உட்பட தமது வாழ்க்கையும் சீரழிந்து போகிறது எனப் பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த இலங்கைப் பெண்கள் சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவி பத்மா டி சில்வா, இந்தப் பிரதேசத்தில் இருக்கும் மதுபான சாலைகளால் மட்டுமல்ல, நாடுபூராகவும் உள்ள மதுபான சாலைகளாலும் தொல் லைகளும் சீரழிவுகளும்தான் ஏற்படுகின்றன.

''இதில் அரசு கவனம் செலுத்த வேண்டும். பெண்கள் என்ற பக்கத்தில் இருந்து பார்க்கும்போது இந்த மதுப் பாவனையால் ஏற்படும் பாரதூரம் புரிகிறது.

கற்றறிந்தவர்களும் குடிபோதையில் மூழ்கியிருக்கும் ஒரு துரதிர்ஷ்ட நிலை தற்போது ஏற்பட்டுள்ளது'' என்று அவர் மேலும் கூறினார்.

## 6 வைத்தியசாலைகளுக்கு அம்புலன்ஸ்கள் கையளிப்பு




கல்முனை, ஏப்.11

கல்முனை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட 6 வைத்தியசாலைகளுக்கு அம்புலன்ஸ் வாகனங்களை சுகாதார அமைச்சு வழங்கியுள்ளது.

'தேசத்திற்கு மகுடம்' வேலைத்திட்டத்தின் கீழ் கல்முனை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பொத்துவில், சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, காரைதீவு, தீகவாவி, மத்திய முகாம் ஆகிய வைத்தியசாலைகளுக்கே திங்கட்கிழமை ஆறு அம்புலன்ஸ் வாகனங்கள் வழங்கப்பட்டன.

கல்முனை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பணிப் பாளர் டாக்டர் எம்.எஸ்.இப்றாலெவ்வையின் தலைமையில் பணிமனை வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.ஐ.எம்.மன்சூர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அம்புலன்ஸ் வாகனங்களை கையளித்தார்.

## புதுவருடத்தை முன்னிட்டு களைகட்டிய திருமலை நகர்

திருகோணமலை,ஏப்.11

தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டு தற்போது திருகோணமலை நகரம் களைகட்டியுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலிருந்து பொருள்களைக் கொள்வனவு செய்யவென பெருமளவு தமிழ்-சிங்கள மக்கள் திருகோணமலை நகருக்கு வருகை தருகின்றனர். இவ்வாறு கொள் வனவுக்கு வரும் மக்களின் பணம், உடை மைகளைப் பாதுகாக்கவென திருகோணமலை பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வர்த்தக கட்டடங்கள் கட்டடத் தொகுதிகளிலும் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (வ-40)

## ஆபாச இறுவட்டு விற்பனை நிலையம் சுற்றி வளைப்பு

மத்துகம, அகலவத்தை பிரதேசத்தில் ஆபாச இறுவட்டுகள் மற்றும் தற்போது திரையரங்குகளில் திரையிடப்பட்டுள்ள சிங்களத் திரைப்பட இறுவட்டுகளை விற்பனை செய்த நிலையம் ஒன்று பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது. இதன் போது இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

மத்துகம பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 5 வயதுச் சிறுவனின் உயிரைப் பறித்த வீதி

அம்புலன்ஸ் செல்ல முடியாத நிலையில் உள்ள வீதியால் 5 வயது சிறுவனின் உயிர் பறிபோனது. காய்ச்சலால் பீடிக்கப்பட்ட சிறுவனை உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முடியாததால் இந்தப் பரிதாபம் நிகழ்ந்தது.

இந்தச் சம்பவம் நோட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெலிஓயா தோட்டத்தின், தண்டுகலா பிரிவில் இடம்பெற்றது. மேற்படி சிறுவன் கடந்த 3 தினங்களாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தார். நேற்று முன்தினம் அதிகாலை 3 மணியளவில் காய்ச்சல் தீவிரமடைந்ததால் பெற்றோர்கள் அந்தச்சிறுவனை உடனடியாக வட்டவளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல ஆயத்தமாகியுள்ளனர்.

அந்தப்பிரதேச வீதி மிக மோசமாக இருந்ததால் அம்புலன்ஸ் வாகனத்தை வீட்டருகே கொண்டுவர முடியவில்லை. இதனால் சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்துக்கு ஓட்டோ ஒன்றில் அவர்கள் பயணித்தனர்.

இதற்கு சுமார் ஒரு மணிநேரம் எடுத்ததாகத் தெரிய வருகிறது. அந்தளவுக்கு வீதி மிகமோசமாக இருந்தது. அம்புலன்ஸில் ஏற்றப்பட்ட சிறுவனை வட்டவளை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது சிறுவனின் உயிர் பிரிந்துவிட்டது.

குறித்த வீதி சீரின்மையால் முறையான போக்குவரத்து வசதிகள் இல்லாததாலே சிறுவனின் உயிர் பறிக்கப்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் கவலை வெளியிட்டனர்.

அந்தச் சிறுவனுக்கு ஏற்பட்ட விபரீதம் மற்றைய குழந்தைகளுக்கு ஏற்படும் முன்னர் தண்டுகலா பிரதேசத்துக்கான வீதியை சீர்செய்து தரும்படி பெற்றோர் மற்றும் பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

2013 விஜய வருட சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
யாழ் மண்ணில் 11.04.2013 புதிதாக ஆரம்பிக்கவுள்ள

EG எவகிறீன் அச்சகம்

சகலவித ஓப்செட் அச்சுத் தேவைகளை
ஒரே இடத்தில் துரிதகதியுடனும் வினைத்திறனுடனும்
வழங்கவுள்ளது.

- பில் புத்தகங்கள்
- லெட்டர் ஹெட்
- திருமண அழைப்பிதழ்கள்
- சுவரொட்டிகள்
- போஸ்டர்கள்
- கலண்டர்கள் / டயறிகள்
- சான்றிதழ்கள்
- இன்னும் பல.....

நியாயமான விலை
நேர்த்தியான வேலைப்பாடுகள்
விரைவான சேவை,
இலவச விநியோகம் இவற்றோடு...

- மாணவர்களுக்கான பாடசாலை மட்ட கணிப்பீட்டு புத்தகம், கற்றல் தேர்ச்சி, தேர்ச்சி அறிக்கை
- ஆசிரியர்களுக்கான பாடக் குறிப்பு.
- ஆசிரியர்களுக்கான பாடவேலைத்திட்டம்
- பாடப்பதிவுப் புத்தகம்
- புள்ளிப் பதிவேடு

தொடர்புகளுக்கு......
Tel - 021 2219893
0777 141444
077 8418172
#693, K.K.S.வீதி
யாழ்ப்பாணம்.

கௌரவத்துக்கு உரியவர்கள்



பளையில் தவழ்ந்து முழங்காவில் வேம்பொடுகேணி பாடசாலைகளில் கல்வி புகட்டி
தென்மராட்சிக்கு ஓடிக் கல்வியை வளர்த்து சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின்
பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினராகவும், சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய
மாணவர் சங்க முனைப்புள்ள உறுப்பினராக செயற்படுகின்றவரும்,
கைதடி - நுணாவில் அ.த.க.பாடசாலை அதிபராகக் கடமையாற்றுபவரும்
பண்பாலும் செயல்திறனும் துணிவும் உள்ள
ஆ. தங்கவேலு அவர்களும்
பளை பிரதேச செயலக நிர்வாக அலுவலராகவும், பளை வைத்தியசாலை
அபிவிருத்திச்சபைத் தலைவராகவும் பல வருடங்கள் சேவையாற்றிய அமைதியான
போக்கும் ஆங்கில அறிவும் உடையவரும் பல கஷ்டங்கள் இருந்தும்
தான் பிறந்த ஊரைப் பற்றி நிற்பவருமான
தா. சுவாமிநாதன் அவர்களும்
சமாதான நீதிவான்களாக நியமிக்கப்பட்டமை வரவேற்கத்தக்கதே



ச. அம்பிகைபாகன்
முன்னாள் பொறுப்பு வைத்தியர்,
முழங்காவில், பளை வைத்தியசாலைகள்.

கனடா ஜெயசாயி சுப்ப சென்ரரின் SALE
சித்திரை புதுவருட அதிரடி மலிவு விற்பனை
ஆரம்பம் 01.04.2013-15.04.2013 வரை
வண்ணமயமான புத்தம் புதிய டிசைன்கள்
கவர்ச்சிகரமான விலைக்கழிவுகள்
உங்கள் தெரிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்.
சாறி, சல்வார் வாங்குபவர்களுக்கு அதற்குரிய
காப்பு, நெக்கிலஸ் செட் இலவசம்
எம்மிடமுள்ள எல்லா நவநாகரிக
உடுபுடைவைகளும் 10% - 50%
விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.
SALE
CANADA JAYASAJI SUPER CENTRE,
114, Navalar Road, Jaffna.
(Kasthiriyar/Navalar Road Junction)
Tel-021-2219393
STORE HOURS-வாரத்தில் 7 நாள்களும்
காலை 9.00–இரவு 9.00 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடர்:** வெளிவட்டாரத்தில் நிதானம் அவசியம். விலை உயர்ந்த பொருள்களை கவனமாகக் கையாளுங்கள். பழைய பிரச்சினைகளுக்கு சுமூக தீர்வு காண்பது நல்லது. அரச காரியங்கள் இழுபறியாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விட்டுக் கொடுத்துப் போங்கள்.

**இடபர்:** குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. வீண் செலவுகளைத் தவிர்ப்பீர்கள்.

**மிதுனர்:** புதிய எண்ணங்கள் தோன்றும். பணவரவு உண்டு. உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்கள் முழுமையடையும். வியாபாரத்தில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். இளமைக்கால நண்பர்களைச் சந்திப்பதன் மூலம் மன நிறைவு கிடைக்கும்.

**கடகர்:** எதிர்பாராத செலவுகள் வந்தாலும் எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வந்து சமாளிப்பீர்கள். பேச்சுத் திறமையால் சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**சிங்கர்:** எதையும் திட்டமிட்டுச் செய்யப் பாருங்கள். அடுத்தவர்கள் மனம் காயப்படும்படி பேசாதீர்கள். பணப்பற்றாக் குறையால் பிறரிடம் கடன் வாங்க வேண்டி வரும். உதவி கேட்டு தொந்தரவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் குறை கூறுவர்.

**கன்னி:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும்.

நாளை

பங்குனி-30 வெள்ளிக்கிழமை 12.04.2013
திதி: துதியை மா. 05.31 வரை
நட்சத்திரம்: பரணி பி.இ. 01.16 வரை
சுபநேரம்: 06.06- 07.36 வரை
இராகுகாலம்: 10. 36- 12.06 வரை

**துலாபர்:** வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். சகோதரவகையில் நன்மை பிறக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடையும்.

**விருச்சிகர்:** குழப்பத்திலிருந்த நீங்கள் இன்று திட்டவட்டமான முடிவுகளை எடுப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். உறவினர் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**தனுசு:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். குழந்தைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். சகோதரவகையில் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனநிறைவு கிடைக்கும்.

**மகரர்:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். குடும்பத்தில் அமைதி நிலவும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பயணங்கள் திருப்திகரமாக அமையும். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

**கும்பர்:** மன நிறைவுடன் சில காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி கிடைக்கும். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். முன்கோபம் விலகும். அரசுப் பணிகள் சுமுகமாக முடியும். வேற்று மதத்தினரால் ஆதரவு கிடைக்கும்.

**மீனர்:** உணர்ச்சிவசப்படாமல் அறிவுபூர்வமாக முடிவெடுக்கப் பாருங்கள். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். உங்கள் திறமையை சிலர் குறைத்து மதிப்பிடுவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | | | 8 | | | |
| 1 | 7 | 2 | 9 | | | 8 | 4 | 3 |
| | | | 3 | | 1 | 6 | 9 | |
| | | 1 | 6 | | | | | |
| 5 | | 7 | | 2 | | 9 | | 8 |
| | | | | | 3 | 1 | | |
| | 5 | 6 | 4 | | 2 | | | |
| 2 | 8 | 3 | | | 9 | 4 | 5 | 1 |
| | | | 8 | | | | 7 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 9 | 3 | 7 | 8 | 4 | 2 | 5 |
| 4 | 2 | 3 | 6 | 5 | 1 | 9 | 8 | 7 |
| 7 | 8 | 5 | 9 | 4 | 2 | 1 | 3 | 6 |
| 9 | 7 | 2 | 1 | 3 | 4 | 6 | 5 | 8 |
| 3 | 5 | 4 | 7 | 8 | 6 | 2 | 9 | 1 |
| 8 | 6 | 1 | 5 | 2 | 9 | 3 | 7 | 4 |
| 5 | 4 | 6 | 8 | 9 | 3 | 7 | 1 | 2 |
| 2 | 3 | 8 | 4 | 1 | 7 | 5 | 6 | 9 |
| 1 | 9 | 7 | 2 | 6 | 5 | 8 | 4 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1—9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 — 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1—9 இலக்கங்கள் இரட்டிப்பாகாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# மரண அறிவித்தல்

## மார்க்கண்டு கிரிதரன் (கிரி)



மானிப்பாய், மேதர்ஸ் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொழும்பு, யாழ்ப்பாணம் விமாகி நிறுவன உரிமையாளருமான மார்க்கண்டு கிரிதரன் (கிரி) நேற்று முன்தினம் (09.04.2013) செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு - சுகிர்தரட்ணம் தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்ற இராஜரட்ணம் - சுகிர்தமலர் தம்பதியரின் மருமகனும் கலாரோகினியின் அன்புக் கணவரும், அம்ரிஷாவின் அருமைத் தந்தையும், கலாமாலினியின் மைத்துனரும் சூரியகுமாரின் சகலனும், பிரசாந்தி, தருஷ்ணன் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 6/1B. லயாட்ஸ் வீதி, பம்பலப்பிட்டியில் அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (11.04.2013) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப. 4 மணியளவில் பொரளை கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6/1B லயாட்ஸ் வீதி,
பம்பலப்பிட்டி.
011 250 8873

தகவல்:
மனைவி: கலாரோகினி கிரிதரன்
மகள்: அம்ரிஷா கிரிதரன்

(சி/8139)(6.7)



MEGA SALE

# சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

## மாபெரும் விற்றுத் தீர்த்தல்



சகல விதமான புடைவை தினுசுகளை 5000/= ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களின் பற்றுச் சீட்டு இலக்கம் (Bill Number) குலுக்கல் முறையில் தெரிவு செய்யப் பட்ட அதிர்ஷ்டசாலிகளுக்கு

முதலாம் பரிசு குளிர்சாதனப் பெட்டி
2 ஆம் பரிசு - DVD Player
3 ஆம் பரிசு - Stand Fan
4 ஆம் பரிசு - Mixer Grainder
5 ஆம் பரிசு - Rice Cooker



மேலும் 5 ஆறுதல் பரிசுகள்



இன்றே விரையுங்கள்.
5000 ரூபாவுக்கு
உடு புடைவைகள் கொள்முதல் செய்து
அதிர்ஷ்டசாலியாகுங்கள்.

(வெற்றிபெறும் அதிர்ஷ்டசாலிகளின் சிட்டை இலக்கம் (Bill Number) 18.04.2013 வியாழன் உதயன் பத்திரிகையில் வெளியிடப்படும்)

யாழ் ரெக்ஸ் YARL TEX
13 A, நவீன சந்தை வெளிபுறம்- சாவகச்சேரி.

(C/8277)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மப்பும் மந்தாரமான காலநிலை நிலவும்.

# ஈழத் தமிழர் விவகாரத்தில் துரோகம் இழைத்தது யார்?

## விளக்குகிறார் கருணாநிதி

சென்னை, ஏப்.11

ஈழத் தமிழர் பிரச்சினையாக இருந்தாலும் சரி, காவிரி நதிநீர்ப் பிரச்சினையான இருந்தாலும் சரி தமிழக சட்ட சபையில் உடனே தி.மு.க. துரோகம் இழைத்துவிட்டார்கள் என்றே கூறுகின்றனர். ஆனால் யார் உண்மையில் துரோகம் இழைத்தார்கள் என்று மக்களுக்குத் தெரியும் என்று தெரிவித்துள்ளார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

தமிழக சட்டமன்றத்தில் நேற்றுமுன்தினம் தென் பெண்ணையாற்றுத் தண்ணீரைக் கர்நாடக அரசு திருப்பி விடுவதைப் பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானத்தை திமுக சட்டமன்ற உறுப்பினர் எ.வ.வேலு சமர்ப்பித்திருந்தார். அப்போது பொதுப் பணித்துறை அமைச்சரும், அவையை அமைதியாக நடத்திச் செல்லும் பொறுப்பு மிக்க அவை முன்னவரும் எழுந்து தேவையில்லாமல், காவிரிப் பிரச்சினை பற்றியும், இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றியும் பேசி, அதில் தி.மு.கவும், நானும் துரோகம் இழைத்து விட்டதாகப் பேசியிருக்கிறார்கள். அதற்குப் பதிலளிக்க முயன்ற முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சரான துரைமுருகனைப் பேசவிடாமல் தடுத்திருக்கிறார்கள்

உண்மையில் துரோகம் இழைத்தது யார்?

இலங்கையில் போர் நிறுத்தம் நிரந்தரமாக ஏற்பட ஆவன செய்யும்படி மத்திய அரசை வலியுறுத்திட 23.4.2009 அன்று ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்வதற்கு நான் அழைப்பு விடுத்தபோது, இலங்கையில் நடைபெறும் போர் தமிழர்களை எதிர்த்து அல்ல விடுதலைப் புலி களை எதிர்த்துத்தான் என்று ஜெயலலிதா கூறினாரே, அதுதான் துரோகம். இலங்கையில் ஈழத் தமிழர்கள் கொல்லப்பட்ட போது, ஒரு போர் என்றால் அப்பாவி மக்கள் கொல்லப்படுவது சகஜம் தான் என்று 17.1.2009 அன்று ஜெயலலிதா சொன்னாரே, அதைவிட ஒரு பெரிய துரோகம் இருக்க முடியுமா?

காவிரிப் பிரச்சினையில் நடுவர் மன்றத் தீர்ப்பு வந்தால்கூட கர்நாடகாவில் அவர்களாகவே அணையைத் திறந்தால்தான் காவிரி நீர் தமிழ்நாட்டிற்கு வரும். கர்நாடகம் சம்மதித்து ஒரு நியாயமான அனுகூலமான முடிவை மேற்கொண்டால் தான் நடுவர் மன்றத்தீர்ப்பு பயனுள்ளதாக அமைய முடியும் என்று ஜெயலலிதா கூறியது தான் துரோகம்.

தமிழக சட்ட சபையில் எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் தி.மு.க துரோகம் இழைத்தது என்று எந்தவித அடிப்படையுமின்றி, எதையும் முழுமையாக அறிந்து கொள்ளாமல் பேசுகிறார்கள். அதை விடுத்து நடந்தது என்ன என்பது பற்றி சட்ட சபை உறுப்பினர்கள் ஆராய்ந்து பேச வேண்டும்-என்றுள்ளது. (ற)

# ரயில் கட்டணம் அதிகரிப்பில்லை

## அமைச்சர் குமார வெல்கம தெரிவிப்பு

ரயில் கட்டணம் விரைவில் அதிகரிக்கும் எனச் செய்திகள் வெளியாகியுள்ள நிலையில், ரயில் கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் குமார வெல்கம நாடாளுமன்றில் தெரிவித் தார்.

நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது புகையிரதத் திணைக்களத்துக்கு மேலதிக ஊழியர்கள் ஆள்சேர்க்கப் பட்ட நடைமுறை தொடர்பில் ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் அகில விராஜ் காரியவசம் போக்கு வரத்து அமைச்சரிடம் கேள்விகளை எழுப்பியிருந்தார்.

இந்தக் கேள்விகளுக்குப் பின்னர் மேலதிக கேள்வியொன்றை எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் அகில விராஜ் ரயில் கட்டணம் அதிகரிக்கப்படுமா என போக்குவரத்துத்துறை அமைச்சரிடம் வினா தொடுத்தார். இதற்குப் பதிலளித்த அமைச்சர், தற்போதைக்கு அதிகரிக்கப்பட மாட்டாது எனத் தெரிவித்தார்.

இவ்வேளையில், குறுக்கீடு செய்த நாடாளுமன்ற உறுப்பினர் எதிர்காலத் தில் ரயில் கட்டணம் அதிகரிக்கப்படுமா என மற்றுமொரு கேள்வியைத் தொடுத்தார்.

ரயில் கட்டண அதிகரிப்புத் தொடர்பில் இன்னும் எவ்வித பேச்சுகளும் இடம் பெறவில்லை எனப் பதிலளித்தார் அமைச்சர் குமார வெல்கம. (சி)

# போதை தலைக்கேறி 'நாறும்' நாவற்குழி சந்தி

## தடுக்கக் கோருகின்றனர் மக்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.11

நாவற்குழிச் சந்திப் பகுதியில் அண்மைக்காலமாக போதைப் பொருள்களின் பாவனையும் விற்பனையும் மிகத் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள் ளனர்.

குறித்த பிரதேசத்தில் தற்போது வெளி மாவட்டங்களைச் சேர்ந்தோரின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இந்த நிலையில் போதைப் பொருளின் 'செல்வாக்கும்' அதிகரித்துக் காணப்படுகிறது என்று மக்கள் கூறுகின்றனர்.

போதைப் பொருள் விற்பனையில் தென்னிலங்கையர்களுடன் உள்ளூர் வாசிகளும் இணைந்து கொண்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

இதேவேளை, இந்தப் போதைப்பொருள் விற்பனை மற்றும் பாவனை காரணமாக நாவற்குழிச் சந்திப் பகுதியில் கலாசாரச் சீரழிவுகளும் தலைதூக்கியுள்ளன என்றும் இரவு வேளைகளில் ஒன்று கூடும் இளைஞர்கள் போதை தலைக்கேறியதுடன் வீதியால் செல்பவர்களுடன் அநாகரிகமாக நடந்து கொள்கின்றனர் என்றும் மக்கள் முறையிடுகின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (ம-288)

# மத்தியஸ்தர் சபை அமர்வுகள் ஒத்திவைப்பு

தென்மராட்சி, ஏப். 11

சாவகச்சேரி மத்தியஸ்தர் சபையின் அமர்வு 13 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் அமர்வுகள் நடைபெறுகின்ற போதும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சித்திரைப் புதுவருடமாதலால் அன்றை தினம் நடைபெறவிருந்த அமர்வுகள் முதல் நாள் சனிக்கிழமை இடம்பெறும் என்று சபை தவிசாளர் ப. நடராஜா அறிவித்துள்ளார். (ஓ-9)

★ ★ ★

வடமராட்சி, ஏப்.11

பருத்தித்துறை மத்தியஸ்தர் சபை அமர்வு புத்தாண்டு தினமான ஞாயிற்றுக்கிழமை நடைபெறமாட்டாது என்றும் அந்த அமர்வு 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்றும் தவிசாளர் என். குணசீலன் அறிவித்துள்ளார். (ஓ-9-253)

# தனுஷ்கோடி அருகே கரையொதுங்கிய இரு உடல்கள் இலங்கையரதா?

## சந்தேகம் வெளியிடுகின்றனர் தமிழகப் பொலிஸார்

சென்னை, ஏப்.11

தனுஷ்கோடி அருகே உருக்குலைந்த நிலையில் இரு ஆண் களின் உடல்கள் நேற்றுமுன்தினம் கரை யொதுங்கியுள்ளன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தனுஷ்கோடி அருகே நடுத்துறை எனும் கடற் கரைப் பகுதியிலேயே உடல்கள் கரையொதுங்கியுள்ளன. அடையாளம் காணமுடியாத அளவுக்கு தலை, கை, கால்கள் உருக்குலைந்துள்ளன என்று கூறப்படுகிறது. உடல்கள் அடையாளம் காண முடியாத நிலையில் உடற்கூற் றுப் பரிசோதனைகளின் பின்னர் அங்கேயே உடல்கள் அடக்கம் செய்யப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தமிழகத் தில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் எவரும் காணாமற்போனதாக முறைப்பாடுகள் பதிவாகவில்லை என்று தெரிவித்துள்ள பொலிஸார், இந்த உடல்கள் இலங்கையைச் சேர்ந்த மீனவர்களுடையதாக இருக்கலாம் என்று சந்தேகம் தெரிவித்துள்ளனர். உடல் களை அடையாளம் காணும் பொருட்டு இது குறித்த தகவல்கள் இலங்கை அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற)

அறிவித்தல்
கட்டடம் விற்பனைக்கு

யாழ். கொட்டடி சிவன்பண்ணை வீதி, 50 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள யாழ். கொட்டடி சனசமூக நிலையத்துக்குச் சொந்தமான கலையரங்கக் கட்டடம் முழுமையாக விற்கப்படவுள்ளது. வாங்கவிரும்புவோர் காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை கட்டடத்தைப் பார்வையிடமுடியும்.

தொடர்பு:
077 3203 138,
077 6510 422.
(35904) (45.6)

செயலாளர்
யாழ். கொட்டடி சனசமூக நிலையம்.

மணநாள் மங்கல வாழ்த்து



பிரகாஷ் ஹேமா செளத்திரி

தென்றலின் சாமர வீச்சில் திங்களின் ஒளித்தடத்தில்
மங்கல மண நாளில் மண வாழ்வில் இன்றிணையும்
என் அன்பு நண்பனே! நீவிர் இருவரும்
பதினாறு செல்வங்களும் பெற்று
பல்லாண்டு காலம் வாழ
பாசமுடன் வாழ்த்துகின்றேன்.

நண்பன்
கைதடி கிழக்கு. ச. பிரதீஸ்வரன் (ரமேஸ்)

புத்தாண்டில்
NDB Real Saver மூலம்
உங்கள் இல்லமெங்கும் புது ஒளி




NDB REAL SAVER
සැබෑ ඉතිරිකරන්නන්ට
உண்மையாக சேமிப்போருக்கு

ஏப்ரல் 14ம் திகதி கொடுக்கல் வாங்கலுக்கான சுப நேரத்தில், இருமடங்கு வட்டி தரும் NDB Real Saver சேமிப்புக் ,கணக்கொன்றை ஆரம்பியுங்கள். கணக்கினை ஆரம்பிக்கும் அனைவருக்கும் CFL மின்குமிழ்களும், சேமிக்க சில வழிகளைச் சொல்லும் சிறு புத்தகமும் இலவசமாக வழங்கப்படும்.

கொடுக்கல் வாங்கலுக்கான சுப நேரமான
காலை 9.00 - நண்பகல் 12.00 வரை NDB கிளை திறந்திருக்கும்.

அழையுங்கள் 011 244 8888

(சி/8146)(2.6)

NDB வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்
## அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்
10.08.1933

மறைவு
12.03.2013

# Dr. இளையதம்பி பரமசிவம் (RMP)

கடந்த 12.03.2013 இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் Dr. இளையதம்பி பரமசிவம் அவர்களின் மரணச்செய்தி கேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும், வெளிநாடு, உள்நாட்டிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், மலர் வளையங்கள் செலுத்தி துயர் பகிர்ந்தோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## அமரர் Dr. இளையதம்பி பரமசிவம்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் (09.04.2013) செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (11.04.2013) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

மனைவி : பரமசிவம் செல்வதி
பிள்ளைகள் : சிவச்செல்வம் சாந்தா குடும்பம்,
சிவதாஸ் தபோதினி குடும்பம்,
சிவா பத்மசேகரம் குடும்பம்,
சிவசந்தர் நிர்மலா குடும்பம்,
சிவப்பிரியா அஞ்சலன் குடும்பம்.

கச்சாய் வீதி (கோயில் குடியிருப்பு),
சாவகச்சேரி.

(38823) (45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘அம்புலன்ஸ்’ படகு வாங்க காசில்லை ஆளுநர் மாநாட்டுக்கு கோடி செலவு

## மரண விசாரணை அதிகாரியும் இல்லை; அனலைதீவு வைத்தியசாலையின் பரிதாபம்

யாழ்ப்பாணம், ஏப்.11

அனலைதீவு வைத்தியசாலைக்குத் தனியானதொரு அம்புலன்ஸ் படகுச் சேவை மக்களால் கோரப்பட்ட போதும் ஏற்படுத்துமாறு அதற்கு 4 மில்லியன் ரூபா தேவை என்றும் உடனடியாக அதனைப் பெற்றுக் கொடுப்பது சாத்தியமில்லை என்றும், யாழ். பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி ஆர்.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போதே மேற்கண்ட விடயம் கூறப்பட்டது.

ஊர்காவற்றுறை பிரதேசத்தின் சுகாதாரத்துறை தொடர்பில் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

இந்தப் பிரதேசத்தின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போதும் எவரும் விண்ணப்பிக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இதனால் தற்போது பதில் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி வாரத்தில் இரண்டு நாள்களே பணியாற்றுகின்றார்.

எனவே 55 வயதுக்கு உட்பட்ட இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த தகுதியானவர்கள் இறப்பு விசாரணை அதிகாரி பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

''ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு நிரந்தர வெளிநோயாளர் கட்டடம் அமைக்கப்பட வேண்டும். சாவகச்சேரி வைத்தியசாலையைப் போன்று வெளிநோயாளர் பிரிவு அமைக்கப்பட வேண்டியிருப்பதால் 45 மில்லியன் வரையில் செலவாகும்'' என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

''அனலைதீவு வைத்தியசாலைக்கு தனியான 'அம்புலன்ஸ் படகுச் சேவை நடத்தப்பட வேண்டும் என்று மக்கள் கோரிக்கை முன்வைத்தனர். அதற்கு 4 மில்லியன் ரூபா வரையில் தேவைப்படுகிறது.

இது தொடர்பில் வடமாகாண ஆளுநருக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றோம்'' என்றார் கேதீஸ்வரன்.

இதேவேளை, மாகாணத்துக்கு குறித்தொதுக்கப்பட்ட நிதியில் கடந்த வருடம் ஆளுநர்களின் மாநாடு யாழ்.மாவட்டத்தில் ஆடம்பரமாக மேற்கொள்வதற்கு 60 மில்லியன் ரூபாவரையும் ஜனாதிபதியின் யாழ். வருகைக்கு 40 மில்லியன் ரூபா வரையும் செலவு செய்யப்பட்டிருந்ததைச் சுட்டிக்காட்டுகிறார்கள் சமூக ஆர்வலர்கள். (ம-5)

## சுய தொழில் உதவி நால்வருக்கு வந்தது

யாழ்ப்பாணம், ஏப்.11

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவு ஊடாக சுயதொழில் உதவி கோரி விண்ணப்பித்தவர்களில் நால்வருக்குத் தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் கொடுப்பனவுத் தொகை வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பின்வரும் பயனாளிகள் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ தெரிவித்துள்ளார்.

சிவபாதம் சரஸ்வதி துன்னாலை மேற்கு, அனுராசா சறோஜினி- இமையாணன் கிழக்கு உடுப்பிட்டி, இராசதுரை மங்களேஸ்வரி- கரணவாய், கருணதாஸ் சந்திரமாலா- கரணவாய் கிழக்கு. (ம-9)

## 16 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம் சந்தேகத்தில் சகோதரன் கைது

யாழ்ப்பாணம்,ஏப். 11

உடன்பிறந்த சகோதரியை கோயில் பூசகரான சகோதரன் பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நுணாவில் மேற்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

16 வயதான சிறுமியே இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமியின் உடல் நிலையில் மாற்றத்தை அவதானித்த தந்தை தனியார் வைத்தியசாலை ஒன்றுக்கு சிகிச்சைக்காக கூட்டிச் சென்ற போது சிறுமி பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

தனியார் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்த தகவலை அடுத்து பாலியல் துஷ்பிரயோகத்துடன் தொடர்புடைய பூசகர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே இந்தத் தகவல் கூறப்பட்டது. (ம-14)

## ‘பியர்’ போதையில் மூழ்கும் யாழ்ப்பாணத்து ‘குடிமக்கள்’

யாழ்ப்பாணம், ஏப்.11

யாழ்.மாவட்டத்தில் அண்மைக்காலமாக 'பியர்' விற்பனை அதிகரித்துள்ளதாக செல்த்தி லங்கா நிறுவனத்தின் வேலைத்திட்ட முகாமையாளர் எஸ்.தெய்வேந்திரம் உதயகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 4 வருடங்களாக யாழ்.மாவட்ட மதுசாரத்துக்கு எதிரான தமிழ் இளைஞர் அணியுடன் இணைந்து மதுப் பாவனையாளர்களை விழிப்படையச் செய்யக் கூடிய உளநல விருத்திச் செயற்பாடுகளை செல்த்தி லங்கா நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கைகளின் படி பியர் விற்பனை யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துள்ளது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மதுப்பிரியர்கள் 'பியர்' போதைக்கு இசைவாக்கம் அடைந்து அடிமைகளாகிவிட்டனர்.

'பியர்' அதிகம் வாங்குவோர் தொழில் நிமித்தம் யாழ்ப்பாணத்துக்குள் உள்நுழைந்திருப்போராக இருந்தாலும் படிப்படியாக யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த மதுப்பிரியர்களும் பியர் பாவனைக்குப் பழக்கப்பட்டுள்ளனர்.

**யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மதுப்பிரியர்கள் ‘பியர்’ போதைக்கு இசைவாக்கம் அடைந்து அடிமைகளாகிவிட்டனர்.**

இதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையின் முதல் கட்டமாக மதுசாரத்துக்கு எதிராகத் தமிழ் இளைஞர்கள் அணியுடன் 50 இளைஞர் கழகங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

இளைஞர்களை மதுப்பாவனையில் இருந்து விடுவிப்பதற்கான செயற்றிட்டமாகவே இது உள்ளது. அவர்களுக்கு உளநல விருத்தி ஆலோசனைகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. மதுப்பாவனை விற்பனை நிலையங்களில் திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அண்மைக்காலமாக 'பியர்' விற்பனை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது என்றார். (ம-14)

## காரைநகரில் புத்தாண்டு சந்தை

காரைநகர், ஏப்.11

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு காரைநகர் பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த புத்தாண்டுச் சந்தை காரைநகர் சுப்பிரமணிய வித்தியாலயத்தில் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது.

உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் மற்றும் புத்தாண்டுக்குத் தேவையான பொருள்கள், புடைவை வகைகள் என்பவற்றை குறைந்த விலையில் ஒரே இடத்தில் மக்களுக்கு வழங்கும் நோக்குடன் இந்தப் புத்தாண்டுச் சந்தை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது.

இதன் ஆரம்ப நிகழ்வு இன்று காலை 9 மணிக்குக் காரைநகர் பிரதேச செயலர் திருமதி தே.பாபு தலைமையில் இடம் பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சி.மோகனேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் யாழ்.மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் இ.ரகுநாதன், காரைநகர் பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவர் வீ.கண்ணன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-250)

## வேண்டுகோள் நிராகரிப்பு உறுப்பினர் வெளியேறினார்

தென்மராட்சி, ஏப்.11

பிரதேச சபையின் ஆளுங்கட்சி உறுப்பினரின் வேண்டுகோள் தலைவரால் நிராகரிக்கப்பட்டதால் உறுப்பினர் சபையிலிருந்து வெளியேறினார். சாவகச்சேரி பிரதேச சபைக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றபோது உறுப்பினரான இ.தெய்வேந்திரம்பிள்ளையே வெளிநடப்புச் செய்தவராவார். எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரிவில் கடந்த வருடம் மீளக்குடியமர்வு இடம்பெற்ற போதிலும் அங்கு சனசமூக நிலையம் புனரமைக்கப்படவில்லை.

இந்த நிலையில் பிரதேச சபையால் இந்தப் பிரிவில் மேற்கொள்ளப்பட வேண்டிய வீதி வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கு அயல் கிராமத்தில் உள்ள சனசமூக நிலையத்தின் பெயரை உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளை முன்மொழிந்து கடந்த கூட்டமொன்றில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நேற்று முன்தினம் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் குறித்த சனசமூக நிலையத்தின் மூலம் வேலைத் திட்டத்தை மேற்கொள்ள முடியாது என்று தலைவர் தெரிவித்துள்ளதை அடுத்து உறுப்பினர் சபையிலிருந்து வெளியேறியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## உதயன் கிளிநொச்சி அலுவலகம் தாக்கப்பட்டதை கண்டித்து தீர்மானம்

### சாவகச்சேரி பிரதேச சபையில் நிறைவேறியது

தென்மராட்சி,ஏப்.11

உதயன் தினசரியின் கிளிநொச்சி அலுவலகமும் பணியாளர்களும் தாக்கப்பட்டமையைக் கண்டித்து சாவகச்சேரி பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த ஐந்தாம் திகதி இடம்பெற்ற சபையின் மாதாந்தக் கூட்டத்தில் பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா கண்டனத் தீர்மானத்தை முன்மொழிந்து ''தமிழர்களின் உரிமைகளுக்காக துணிவுடன் குரல்கொடுக்கும் நாளிதழான உதயனின் கிளிநொச்சி பணிமனையையும் ஊழியர்களையும் தாக்கியமை கொடுமையிலும் கொடுமை. ஊடக சுதந்திரத்தை குழிதோண்டிப் புதைக்கும் விதத்திலான இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும்.

முப்பதுக்கும் மேற்பட்ட தாக்குதல்களை உதயன் பத்திரிகை இதுவரை எதிர்நோக்கியிருப்பினும் இந்தத் தாக்குதலிலாவது குற்றவாளிகள் நிச்சயமாகத் தண்டிக்கப்படுவார்கள் என நம்புகிறோம்.'' என்று உரையாற்றினார்.

இந்தத் தீர்மானம் சபையினால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனை அடுத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என அறிவிக்கப்பட்டது.

இதேவேளை யாழ். மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் அலுவலகம் மீது தாக்குதல் நடத்தியமை மற்றும் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் நா.கிஷோர் தாக்கப்பட்டமை குறித்து பிரதேச சபை உறுப்பினர் இ.சிறிதரன் கண்டனத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென சபையில் முன்மொழிந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-9)

## மூன்றாம் வாரத்தில் தமிழ்த் தினப் போட்டி யாழ்ப்பாணத்தில்

வடமராட்சி, ஏப்.11

யாழ்.மாவட்ட மட்டத்திலான பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ் மொழித் தினப் போட்டி இம்முறை எதிர்வரும் 18,19,20 மற்றும் 27 ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகா வித்தியால்யத்தில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் வலய மட்டத்தில் மூன்று இடங்களைப் பெற்ற வடமராட்சி, தென்மராட்சி, யாழ்ப்பாணம், வலிகாமம், தீவகம் ஆகிய 5 வலயங்களைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றுவார்கள். மாவட்ட மட்ட தமிழ்த் தினப் போட்டியை வடமராட்சி வலயத் திணைக்களம் இந்த முறை பொறுப்பேற்று நடத்துகின்றது. (உ-8)

## 150 உணவகங்களின் தரம் பரிசீலிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.11

யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இருநூற்று ஐம்பது உணவு கையாளும் நிலையங்கள் உள்ளன. இவற்றில் நூற்று ஐம்பது கடைகளின் தரம் பரிசீலிக்கப்பட்டு எடுத்த நடவடிக்கைகளை அடுத்து சிலர் தமது கடைகளை மூடிவிட்டனர்.

பதின்நான்கு கடைகளை நீதிமன்ற அனுமதி கிடைத்த பின்னரே திறக்க முடியும். உணவு கையாளும் நிலையங்களுக்கான கலந்துரையாடல் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றபோது யாழ். மாநகர ஆணையாளர் எஸ். பிரணவநாதன் இந்தத் தகவலைத் தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இரணைமடு திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில் வருடாந்த பெருந்திருவிழா

இரணைமடு திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில் வருடாந்த பெருந்திருவிழா 16.04.2013 செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தேர்த்திருவிழா 24.04.2013 புதன்கிழமையும் தீர்த்தத் திருவிழா 25.04.2013 வியாழக்கிழமையும் பூங்காவனத் திருவிழா வெள்ளிக்கிழமையும் நடைபெற திருவருள் கூடியுள்ளது. இக் காலங்களில் ஆலய வீதியில் கடைகள் அமைக்க விரும்புவோர் 12.04.2013 வெள்ளி மு.ப11.00 மணிக்கு அறங்காவலர் சபையுடன் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு: கடைகள் பெறுவோர் பணத்தைச் செலுத்தி பற்றுச் சீட்டை பெற்றுக்கொள்ளவும்.

**ஆலய அறங்காவலர் சபை**
**இரணைமடு.** (26277)(6.11)

### புத்தாண்டு பூஜை

மாவிட்டபுரம் வீணியவரை ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் புதுவருடப்பிறப்பை முன்னிட்டு எதிர்வரும் 14 ஆம் திகதி விசேட பூசைகள் நடைபெறவுள்ளதாக பிரதம குரு பிரம்ம ஸ்ரீ அ.துரைச்சாமி ஐயர் அறிவித்துள்ளார்.

இதனைத்தொடர்ந்து எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வியாழக்கிழமை வரை காலை 9 மணிக்கு விசேட அபிஷேகமும் பூசைகளும் இடம்பெறவுள்ளன.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
30.07.1933

மறைவு
12.03.2013



**திருமதி மகாலிங்கம் கனகமணி**

*பருந்தெனக் காலன் செய்த கொடுமையால் எம்மை விட்டு*
*பிரிந்து நீர் சென்று இன்று மாதமோ ஒன்று மாய்ச்சு*
*பொருந்திய உறவுக் கென்று இலக்கணம் நீங்களாச்சு*
*வருந்திய மனமோ உங்கள் வாழ்வினைப் பசும்போல் மீட்டும்.*

இன்று (11.04.2013) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும். தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: அழைப்பிதழ் கிடைக்காதவர்கள் எம்மை மன்னித்து இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**விளையாட்டரங்க வீதி,**
**கல்வியங்காடு,**
**யாழ்ப்பாணம்.** (35909)(6.7.11)

**குடும்பத்தினர்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும், அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்
04*07*1934
மறைவு
12*03*2013

**அமரர் குணரட்ணம் மகேஸ்வரி**

எமது குடும்பத் தலைவியின் பிரிவால் நாம் துயருற்றிருந்தபோது அனைத்து வழிகளிலும் எமக்கு ஆறுதல் வழங்கியோருக்கும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (11.04.2013) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(35911)(2.6)

**சங்குவேலி தெற்கு,**
**மானிப்பாய்.**

**குடும்பத்தினர்.**

## நினைவு அஞ்சலி



தோற்றம்
13*02*1934
மறைவு
16*03*2013

**அமரர் கந்தையா நாகம்மா**

நாள்கள் இருபத்தைந்து ஆனதுவோ அம்மா எமைவிட்டு
காத தூரம் சென்றுவிட்டீர் அம்மா
சீலமுடன் எமை வளர்த்து ஆளாக்கி இன்று
காலன் அழைத்த வழி கடுகிச் சென்றீரோ
தீராத துன்பம் அம்மா எம்தமக்கு உம்
பாதக் கமலம் இனி பணிவது எந் நாளோ?

எமது குடும்பத் தலைவி காலமான செய்தியறிந்து ஆறுதல் கூறியோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் உரிய உதவிகள் புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(35910)(2.6)


**மானிப்பாய் வீதி,**
**மருதனார்மடம், சுன்னாகம்.**

**– குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### பரமகுரு இராசகுரு

(சொல்வேந்தன், கலைவாரிதி, பண்டிதர், பிரசித்த நொத்தாரிசு – உறுதி எழுதுநர்)



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பரமகுரு இராசகுரு நேற்று (10.04.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமகுரு - இராசம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சற்குரு, தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற மல்லிகா தேவியின் (நெசவு ஆசிரியர்) பாசமிகு கணவரும், கலையரசியின் (கண்ணம்மா) பாசமிகு தந்தையும், முருகதாசனின் (ஆசிரியர், மல்லாவி மத்திய கல்லூரி) பாசமிகு மாமனும், தமிழ்நிலா (யாழ்ப்பாணக் கல்லூரி), பிரியங்கன் (யாழ்ப்பாணக் கல்லூரி), பிருந்தாபன் ஆகியோரின் அன்புப் பேரனும், கந்தபுஸ்கரணி, இராஜேஸ்வரி, புனிதமலர், கௌரி ஆகியோரின் மைத்துனரும், பாஸ்கரகுரு, தேவகுரு, தனுஷா, சிவகுமரன், செந்தில்குமரன், செல்வக்குமரன், திருக்குமரன், ரவிக்குமார், சஞ்சீவா, பவானி, அபிஷாயினி ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04 2013) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(2.6)(சி/8311)

தகவல்:
பண்ணாகம், சுழிபுரம்.
அ.முருகதாசன் (மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம், ஏப்.11

கொக்குவில் வட பத்தி ரகாளி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா நடை பெறும்.

எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திரு விழாவும் மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

★ ★ ★

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சிறப்பாக இடம்பெற்று வருகின்றது.

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு தினமான ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெற உள்ளது. (வ-250)

★ ★ ★

வடமராட்சி, ஏப்.11

வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பாகின்றது.

தொடர்ந்து 15 தினங்கள் பெருந்திருவிழா இடம்பெறும் தேர்த்திருவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமையும், தீர்த்தோற்சவமும் மறு நாள்வியாழக்கிழமையும் நடைபெறவுள்ளது.

பெருந்திருவிழாத் தினங்களில் தினமும் முற்பகல் 10 மணிக்கும் இரவு 7 மணிக்கும் வசந்தமண்டபப் பூசை நடைபெற்று அம்பாள் வீதி வலம்வந்து பக்தர்களுக்கு அருட்காட்சி கொடுப்பார்.

தினமும் மாலை 6 மணிக்கு க.ஜெயகோபாலசாமி வி.சுமதிஸ்வரன் ஆகியோரின் சொற்பொழிவுகளும் இடம் பெறும். கோயில் பிரதமகுரு சிவ ஸ்ரீ சோ. தண்ட பாணிக தேசிகர் பெருந்திருவிழாவை நடத்தி வைப்பார். (ஒ-8)

★ ★ ★

அல்வாய் கிழக்கு, பெருங்கலட்டி தில்லையம்பாள் பிள்ளையார் கோயில் வருடாந்த அலங்காரத் திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமானது.

பத்தாம் நாளான எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை அஷ்டோத்திர சங்கர சங்காபிஷேகத்துடன் அலங்கார உற்சவம் நிறைவு பெறும் (ஒ-9)

★ ★ ★

பிரசித்தி பெற்ற தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோயில் வருடாந்த கும்பாபிஷேக தினம் இன்று நடைபெறவுள்ளது.

காலை 7 மணிக்கு சங்குப் பூசையும் மு.ப. 10 மணிக்கு சங் காபி ஷேகமும், மு.ப. 11 மணிக்கு சண்முகார்ச்சனையும் இடம் பெற்று நண்பகல் 12 மணிக்கு அபிஷேக பூசைகளும் நடைபெறும். தொடர்ந்து சுவாமி வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் கடாச்சம் வழங்குவார். (ஒ-8)

# சமுர்த்திக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஏப்.11

சமுர்த்திப் பண முத்திரைக் கொடுப்பனவுகளை இன்று முதல் பெற்றுக் கொள்ளலாமென யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் க. மகேஸ்வரன் சமுர்த்திப் பயனாளிகளுக்கு அறிவித்துள்ளார்.

புத்தாண்டு பண்டிகையை முன்னிட்டு பயனாளிகளின் நன்மை கருதி மார்ச் மற்றும் ஏப்ரல் மாதக் கொடுப்பனவுகளை தற்போது வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே இன்று முதல் நாளையும் நாளை மறு தினமும் அந்தப் பிரிவு சமுர்த்தி வங்கிகளில் தமக்குரிய பொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (16)

**மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டியும் மரதன் ஓட்டப் போட்டியும்**

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
மூளாய் மனித வள அபிவிருத்தி சனசமூக நிலையத்தினரால்
யாழ்.மாவட்ட ரீதியிலான போட்டிகள் நாளை 12 ஆம் திகதி
வெள்ளிக்கிழமை சைக்கிள் ஓட்டப் போட்டியும்
13 ஆம் திகதி சனிக்கிழமை
மரதன் ஓட்டப் போட்டியும் நடைபெறும்.
(35912)(2.6) நிர்வாகம்.

**கண்ணீர் அஞ்சலி**

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் ஆயுள்வேத
வைத்தியசாலை மருந்துக் கலவையாளர்
திருமதி லலிதா வீரசிங்கம் அவர்களின் அன்புத் தாய்
திருமதி சிதம்பரப்பிள்ளை அன்னலட்சுமி
அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
தலைவர், செயலாளர், உத்தியோகத்தர்கள்
சாவகச்சேரி பிரதேச சபை ஊழியர் நலன்புரி சங்கம்.

# "கடவுளின் பெயரால் கேட்கிறேன்"

யாழ்ப்பாணம், ஏப் 11

''கடவுளின் பெயரால் கேட்கிறேன் இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் எண்ணத்தை இந்தியா கைவிட வேண்டும்'' என்று யாழ்ப்பாணம் வந்த இந்திய நாடாளுமன்றக் குழுவிடம் வலியுறுத்தினார் சிவில் சமூகப் பிரதிநிதி ஒருவர்.

இந்தியாவுக்குத் ஈழத் தமிழர்கள் மீது ஏதாவது அக்கறை இருப்பின் அது 13 ஆவது திருத்தத்தைக் கைவிட வேண்டும் என்று அவர் அழுத்தம் திருத்தமாக எடுத்துக் கூறினார்.

மாகாண சபை நிர்வாகத்தில் நீண்ட காலம் பணியாற்றிப் பல உயர் பதவிகளை வகித்து பழுத்த அனுபவம் கொண்டவர் அவர். தமிழர்கள் நன்மை ஏதும் பெறாத வகையில் உள்முரண்பாடுகளோடும் தெளிவற்ற வகையிலும் வேண்டும் என்றே உருவாக்கப்பட்டதாக அவர் விளக்கினார்.

''13ஆவது திருத்தம் பயனுள்ளது என்று கூறுவது தவறானது. இப்போதுதான் (மஹிந்த அரசால்) அதன் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு பயனற்றதாக்கப்பட்டது என்பதும் தவறு. ஆரம்பம் முதலே அது ஒரு பயனில்லாத ஏற்பாடாகவே இருந்தது என்பதே உண்மை'' என்று அவர் அழுத்தம் திருத்தமாகக் கூறினார்.

இதனடிப்படையில் 13 ஆவது திருத்தம், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஒரு தொடக்கப் புள்ளியாகக் கூடக் கருதப்பட முடியாது என சிவில் சமூகத்தைச் சேர்ந்த வேறு சிலரும் இந்தியத் தூதுக் குழுவிடம் வலியுறுத்தினர். ''தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதற்கு மறுப்பு ஏதும் தெரிவிக்காமல் இருந்ததால் அவர்களும் அதை ஏற்றுக் கொண்டார்கள் என்றே கருத முடியும்'' என்று சந்திப்பில் கலந்து கொண்ட சிவில் சமூகப் பிரதிநிதி ஒருவர் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல், ''சந்தர்ப்பத்துக்கான வாயிலாக'' அமையமாட்டாதா என்று இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கேள்வி எழுப்பினார். ''எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்க உதவ முடியாத மாகாண சபையாலும் அதற்கு நடத்தப்படும் தேர்தலாலும் தமிழ் மக்களுக்குப் பயனில்லை'' என்று சிவில் சமூகப் பிரதிநிதி ஒருவர் பதிலளித்தார். அரசியல்வாதிகள் பதில் எதுவும் தெரிவிக்கவில்லை.

இலங்கையில் 1978 அரசியலமைப்பின் கீழ், 13 ஆவது திருத்தத்துக்கு மேல் செல்வது என்பது சாத்தியம் அல்ல என்பதாலேயே இடைக் கால நிர்வாகம் ஒன்று அவசியம் என்று சிவில் சமூகப் பிரதிநிதி ஒருவர் வலியுறுத்தினார். தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இடைக் கால நிர்வாகம் வேண்டும் என்பதை அழுத்தினார். (உ)

# மாணிக்க விநாயகத்தின் இலங்கை வருகை இரத்து

கடும் எதிர்ப்பை அடுத்து தென்னிந்திய திரைப்படப் பாடகர் மாணிக்க விநாயகத்தின் இலங்கைப் பயணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை அரசின் இனப் படுகொலையைக் கண்டித்து தமிழகத்தில் போராட்டங்கள் நடத்தப்பட்டு வரும் நிலையில் இந்தியக் கலைஞர்களின் இலங்கைப் பயணம் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

இந்த நிலையில் மாணிக்க விநாயகத்தின் இலங்கைப் பயணத்தைக் கண்டித்து பெரியார் திராவிடக் கழகத்தினர் நேற்று அவரின் வீட்டை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தினர்.

இலங்கைப் பயணத்தை தவிர்க்க வலியுறுத்தி அவரிடம் போராட்டக்காரர்களால் மனுவும் கையளிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கைதுசெய்து அகற்றினர்.

சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவித்த மாணிக்க விநாயகம்;

'தமிழக உணர்வாளர்களின் கருத்துக்கு மதிப்பளித்து தனது இலங்கைப் பயணத்தை இரத்துச் செய்யவுள்ளதாகக் கூறினார்.

இன்று மாங்குளம் வண்ணான்குளம் கண்ணகை அம்மன் பொற்கோயிலில் ஏற்பாடு செய்யப்பட்ட இசை நிகழ்வில் தென்னிந்திய பாடகர்களான மாணிக்க விநாயகம், மாலதி, எல்.ஆர்.ஈஸ்வரி மற்றும் பல கலைஞர்கள் பங்குபற்ற இருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் இவர்கள் இன்றைய நிகழ்வில் கலந்து கொள்ளமாட்டார்கள் என மாணிக்க விநாயகம் தெரிவித்தார். (உ-16)

## கழுத்து...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சிறுமியை தந்தையார் கண்டித்த பின்னர் அவர் வீட்டைவிட்டு வெளியில் சென்றுள்ளார். அவர் வீடு திரும்பிய போது ஊஞ்சல் கயிற்றில் கழுத்து மாட்டுப் பட்ட நிலையில் மகள் உயிரிழந்தமை அவதானிக்கப் பட்டது எனக் கூறப்படுகிறது. சிறுமியின் உடல் நேற்று முன்தினம் இரவு யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டது. நேற்று இடம்பெற்ற உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (த-5)

## மன்னாரில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கொள்ளப்பட்டு வருவதாக முள்ளிக்கண்டல் விவசாய அமைப்புகள் குற்றஞ்சுமத்தியுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக அடம்பன் உதவி அரச அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

காணி ஆணையாளரின் 2013/1 சுற்றறிக்கையின் பிரகாரமும் கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி தங்கள் பணிமனையில் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு முரணாகவும் முள்ளிக்கண்டல் பிரதேசத்தில்அரச காணியில் அத்துமீறல் இடம்பெறுகின்றது.

இந்த நடவடிக்கை அரசியல் சார்பானதாகவும் ஓர் இனம் சார்பாகவும் மேற்கொள்ளப்பட்டு வருவதால் முள்ளிக்கண்டல் தேனுடையான் கண்டல், பாப்பா மோட்டை மக்கள் பெரும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

2009 இல் எமது கிராமத்தில் மீளக்குடியமர்வு இடம்பெற்றது. இன்றும் தற்காலிக கொட்டகையைக் கயிற்றினாலும், நாரினாலும் கட்டி வைத்துள்ளோம். பெரும் காற்று, மழை வரும் போது பாதுகாப்புத் தேடி பாடசாலை யிலும், கோயில்களிலும் தஞ்சம் புகுந்து வாழ்க்கை நடத்தி வருகின்றோம்.

ஒரு சில உயர் அதிகாரிகளாலும் ஒரு சில அரசியல் வாதிகளாலும் நில ஆக்கிரமிப்பு நடைபெற்று வருகின்றது. இதைத் தட்டிக் கேட்கும் மக்கள் மிரட்டி எச்சரிக்கப்படுகின்றனர்.

கடந்த சில நாள்களாக முள்ளிக்கண்டல் காடழிக்கப்பட்டு வருகின்றது. இந்தப் பகுதியில் புத்தளம், கற்பிட்டி, கெக்கிராவ பகுதியிலிருந்து அடியாள்கள், பிரதேசசபை உறுப்பினரால் குவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தமிழ் மக்களை அடித்து விரட்டுகின்றனர்.

காடழிக்கப்பட்ட பகுதியில் உடனடியாக 20 தற்காலிக கொட்டகைகள் சமைப்பதற்கு பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் நடவடிக்கை எடுத்து வருகின்றார். எனவே இவற்றை உடனடியாகத் தடுத்து நிறுத்துங்கள்.

மேற்படி மனுவில் பிரதிகள், மன்னார் மாவட்ட அரச அதிபருக்கும், மாகாண காணி ஆணையாளருக்கும், ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கும், மன்னார் மறை மாவட்ட ஆயர், மாந்தை பிரதேச சபைத் தலைவர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (த-5)

**யாழ்.மாவட்ட சாரண ஆணையாளரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்**

எமது நிறுவனத்தின் சிரேஷ்ட ஆசிரியர்
உயர்திரு.செ.தேவரஞ்சன்
யாழ்.மாவட்ட சாரண ஆணையாளராக பதவி ஏற்றுக்கொண்டமையையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைவதோடு மேலும் பல உயர்வுகள் பெற்று சிறந்த சமூக சேவையாற்ற வாழ்த்துகின்றோம்.



Best wishes

மதுரம் இன்ஸ்ரிரியூட் & மதுரம் கிட்ஸ்
டச்சுவீதி, கோப்பாய் தெற்கு.
கல்விச் சமூகம்.
(35918)(5-6)

**பருத்தித்துறை தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில் தரும பரிபாலன சபை அறிவித்தல்**

(1) வெளிமடைப் பொங்கல் - 2013
தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயில்
வருடாந்த வெளிமடைப் பொங்கல் விழா
★ விளக்கு வைப்பு : 2013.05.03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
★ வெளிமடை : 2013 .05.10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை

(2) வேள்விப் பொங்கல் - 2013
தும்பளை முத்துமாரி அம்மன் கோயில்
வருடாந்த வேள்விப் பொங்கல் விழா
★ விளக்கு வைப்பு : 2013.05.17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
★ வேள்வி : 2013 .05.24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை

நடைபெற உள்ளது என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

குறிப்பு: நிர்வாக சபையின் விஷேட தீர்மானத்தின்படி இத்தகவல் வெளியிடப்படுகின்றது.

சபா ரவீந்திரன் தலைவர் | இ.கணேசநாதன் பொருளாளர் | கா.புஸ்பராசா செயலாளர்
2013.04.10 (f/8314)(5.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மருதங்கேணிபிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளன விளையாட்டுப் போட்டிகளில், கரப்பந்தாட்டப் போட்டிகள் அம்பன் சிவனொளி விளையாடடுக்கழக மைதானத்தில் நடைபெற்றன. 22 கழகங்கள் கலந்துகொண்ட இந்தக் கரப்பந்தாட்ட தொடரின் இறுதியாட்டத்தில் ஆழியவளை அருணோதயா விளையாட்டுக் கழகமும் வத்தராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. இதில் ஆழியவளை அருணோதயா அணி வெற்றியீட்டி சம்பியனானது. இரண்டாமிடத்தை வத்தராயன் உதய சூரியன் விளையாட்டுக் கழகமும், அம்பன் சிவனொளி விளையாட்டுக் கழகம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (ற)

# மாவட்ட பெருவிளையாட்டு இம்மாதம் ஆரம்பமாகிறது

## அணி ஒழுங்குகள் நாளை

யாழ்ப்பாணம்,ஏப்.11

யாழ். பாடசாலைகளுக்கு இடையிலான மாவட்ட மட்டப் பெருவிளையாட்டுக்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன.

மென்பந்து துடுப்பாட்டம் எதிர்வரும் 15,16 ஆம் திகதிகளில் கனகரத்தினம் மகா வித்தியாலய மைதானம் மற்றும் யாழ். இந்துக் கல்லூரி மைதானங்களிலும், உதைபந்தாட்டம் 16, 17, 18 ஆம் திகதிகளில் சென். ஜோன்ஸ் கல்லூரி மற்றும் யாழ். இந்துக் கல்லூரி மைதானங்களிலும், கரப்பந்தாட்டம் 19, 20 திகதிகளில் நடராஜ இராமலிங்கம் வித்தியாலய மைதானத்திலும், கூடைப்பந்தாட்டம், ஹொக்கி என்பன 29, 30 ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரி மற்றும் வேம்படி மகளிர் கல்லூரி மைதானங்களிலும், வலைப்பந்தாட்டம் எதிர்வரும் மே மாதம் 2 ஆம், 3 ஆம் திகதிகளில் கனகரத்தினம் மகாவித்தியாலய மைதானத்திலும்,

கபடிப் போட்டி மே மாதம் 4, 5 ஆம் திகதிகளில் கனகரத்தினம் மகாவித்தியாலயம் மற்றும் யாழ். இந்துக் கல்லூரி மைதானங்களிலும், எல்லே சுற்றுப் போட்டி 6 ஆம் , 5 ஆம் திகதிகளில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மற்றும் கனகரத்தினம் மகா வித்தியாலய மைதானங்களிலும், ரெனிஸ் 7 ஆம் திகதி சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்திலும், உடற்பயிற்சிப் போட்டிகள் எதிர்வரும் 13 ஆம் திகதி யாழ்.மத்திய கல்லூரி மைதானத்திலும், கராத்தே எதிர்வரும் 14 ஆம் திகதியும், பளு தூக்கல் எதிர்வரும் 16 ஆம் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

இதேவேளை- இந்தப் போட்டிகளுக்கான அணி ஒழுங்குகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.கல்வி வலயத்தில் இடம் பெறவுள்ளது.இந்தப் போட்டிகளில் பங்குபற்றும் அணிகளின் பொறுப்பாசிரியர்களைத் தவறாது அதில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

(ற-400)

# இறுதியாட்டம் இன்று

தென்மராட்சி, ஏப்.11

தென்மராட்சிப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று பி.ப. 3 மணிக்கு மட்டுவில் வளர்மதி வி.க. மைதானத்தில் நடைபெறவுள்ளது.

10 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் இறுதிப் போட்டியில் மட்டுவில் கண்ணகை வி.க. அணியும் சங்கத்தானை ஸ்ரீமுருகன் வி.க. அணியும் மோதவுள்ளன.

(ற-9)

# வருடாந்த விளையாட்டு போட்டி இன்று

காரைநகர், ஏப்.11

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையேயான வருடாந்த விளையாட்டு போட்டிகள் இன்று வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம. வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம் பெற உள்ளது.

காரைநகர் பிரதேச செயலர் திருமதி தே.பாபு தலைமையில் நடைபெறும் போட்டியில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயக மும், சிறப்பு விருந்தினர் களாக காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவர் சிவா தி.மகேசன், தொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகரட்ணம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-250)

# இன்றைய ஆட்டங்கள்

வடமராட்சி, ஏப்.11

தம்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமாணவர் சதுரங்கப் போட்டிகள் இன்றும் நாளையும் காலை 9 மணிக்கு பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளன. (ற-8)

★ ★ ★

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் நடந்தும் உதைபந்தாட்டத் தொடரில் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம்:-

பி.ப. 4 மணி

கொற்றவத்தை சிவானந்தா வி.க. எதிர் நவிண்டில் கலைமதி வி.க. (ற-23-400)

# வடமாகாண மேசைப்பந்து

# இரு பிரிவுகளிலும் யாழ்.அணி சம்பியன்







வவுனியா, ஏப்.11

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாவட்ட அணிகளுக்கு இடையிலான மாகாண மட்ட மேசைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஆண், பெண் இருபிரிவுகளிலும் யாழ்.மாவட்ட அணி சம்பியனானது.

கடந்த சனிக்கிழமை வவுனியா நகரசபை உள்ளக விளையாட்டரங்கில் இடம் பெற்ற இந்தப் போட்டிகளில் முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியும், வவுனியா மாவட்ட அணியும் மோதிக் கொண்டன.

முதலில் இடம்பெற்ற ஒற்றையர் ஆட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சிந்துஜாவும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த நிஷாந்தினியும் மோதிக் கொண்டனர். பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 2:1 என்ற செற்களில் சிந்துஜா வெற்றி பெற்றார்.

அடுத்து இடம்பெற்ற இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்.மாவட்ட அணியைச் சேர்ந்த டன்சியாவும், வவுனியா மாவட்ட அணியைச் சேர்ந்த மேகலாவும் மோதிக்கொண்டனர்.

**கடந்த சனிக்கிழமை வவுனியா நகரசபை உள்ளக விளையாட்டரங்கில் இடம் பெற்ற இந்தப் போட்டிகளில் முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட அணியும், வவுனியா மாவட்ட அணியும் மோதிக் கொண்டன.**

அதில் டன்சியா வெற்றி பெற்று யாழ்.அணியின் இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்தார்.

மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்தையும் கைப்பற்றும் நோக்குடன் களமிறங்கியது யாழ்.அணி. யாழ்.மாவட்ட அணியைச் சேர்ந்த ஹேமாவும், வவுனியா மாவட்ட அணியைச் சேர்ந்த கிருஷாந்தினியும் மோதிக் கொண்டனர்.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாண அணிக்கு அதிர்ச்சி கொடுத்தார் கிருஷாந்தினி.

3:1 என்ற ரீதியில் ஆட்டத்தைக் கைப்பற்றி யாழ். அணிக்கு நெருக்கடியை ஏற்படுத்தினார்.

வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்கான 4 ஆவது சுற்றில் யாழ்.மாவட்ட அணியைச் சேர்ந்த சிந்துஜாவும் வவுனியா மாவட்ட அணியைச் சேர்ந்த மேகலாவும் மோதினர். அந்த ஆட்டத்தில் 3:0 என்ற ரீதியில் சிந்துஜா வெற்றி பெற்றார்.

இறுதியில் 3:1 என்ற ரீதியில் யாழ்.மாவட்ட அணி சம்பியனானது.

அடுத்து இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியும் மன்னார் மாவட்ட அணியும் மோதிக் கொண்டனர். அதில் யாழ்.மாவட்ட அணி 3:1 என்ற ரீதியில் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவாகியது.

(ற-23-400)

# வலைப்பந்தாட்டம் இன்றும் நாளையும்

வலி.வடக்கு, ஏப்.11

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 15 வயது 17 வயது 19 வயதுப் பிரிவினர்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டிகள் இன்றும் நாளையும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் காலை 8 மணிமுதல் நடைபெறவுள்ளன.

15 வயதுப் பிரிவு

அராலி சரஸ்வதி ம.வி. எதிர் மல்லாகம் ம.வி.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி எதிர் வயாவிளான் ம.ம.வி.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தி. எதிர் இளவாலை கன்னியாமடம் ம.வி.

அராலி சர்ஸ்வதி ம.வி. எதிர் பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி எதிர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தி. எதிர் உடுவில் மகளிர் கல்லூரி.

பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. எதிர் மல்லாகம் ம.வி.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எதிர் வயாவிளான் ம.ம.வி.

உடுவில் மகளிர் கல்லூரி எதிர் இளவாலை கன்னியர் மடம் ம.வி.

17 வயதுப் பிரிவு

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் மல்லாகம் ம.வி.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி எதிர் வட்டுக் கோட்டை மத்திய கல்லூரி.

அராலி சரஸ்வதி ம.வி. எதிர் இளவாலை கன்னியர் மடம் ம.வி.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி எதிர் வயாவிளான் ம.ம.வி.

அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் எதிர் உடுவில் மகளிர் கல்லூரி.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எதிர் மல்லாகம் மகா வித்தியாலயம்.

பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. எதிர் உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்.

வயாவிளான் மத்திய ம.வி. எதிர் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி.

உடுவில் மகளிர் கல்லூரி எதிர் இளவாலை கன்னியர் மடம் ம.வி.

19 வயதுப் பிரிவு

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் வட்டுக் கோட்டை மத்திய கல்லூரி.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி எதிர் இளவாலை கன்னியர்மடம் ம.வி.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எதிர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரி.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் உடுவில் மகளிர் கல்லூரி

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எதிர் வயாவிளான் ம.ம.வி.

உடுவில் மகளிர் கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி

வயாவிளான் ம.ம.வி. எதிர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி. (ற-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாப்பை பந்தாடியது சென்னை

ஐ.பி.எல். தொடரின் நேற்றைய ஆட்டத்தில் பஞ்சாப் அணியை 10 இலக்குகளால் வீழ்த்தியது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி.

மொஹாலியில் நேற்று இரவு இடம்பெற்ற 11 ஆவது போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை எதிர்த்து கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பஞ்சாப் அணி சார்பில் கில்கிறிஸ்டுடன் இணைந்து மன்தீப் சிங் தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினர்.

அதிரடியாக ஆடிய கில்கிறிஸ்ட் மூன்றாவது பந்துப் பரிமாற்றத்தில் 9 ஓட்டங்களுடன் நன்ஸின் பந்தில் பிராவோவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அதே பந்துப் பரிமாற்றத்தில் அடுத்த இலக்கும் சாய்க்கப்பட 3 பந்துப் பரிமாற்றங்களில் 20 ஓட்டங்களுக்கு இரண்டு இலக்கு களை இழந்து தடுமாறியது அந்த அணி.

இலக்குகள் சரிக்கப்பட்டாலும் பஞ்சாப்பின் ஓட்ட வேகத்தை சென்னையால் கட்டுப்படுத்த முடியவில்லை. வொஹ்ரா மற்றும் டேவிற் ஹசி இணைந்து ஓட்டங்களைக் குவித்தனர். வொஹ்ரா (16) ஓட்டங்களுடன் வெளியேற்றப்பட ஹசியுடன் இணைந்தார் குர்கீரத் சிங்.

இருவரும் இணைந்து சிறந்த இணைப்பாட்டத்தை கட்டியெழுப்ப பஞ்சாப் அணி 14 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 106 ஓட்டங்களை எட்டியது.

எனினும் டேவிற் ஹசி 41 ஓட்டங்களுடன் அஸ்வினின் சுழலில் சிக்கி ஆட்டமிழக்க பஞ்சாப்பின் சரிவு ஆரம்பமானது.

அடுத்து வந்த வீரர்கள் விரைவாக ஆட்டமிழக்கச் செய்யப்பட 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றது பஞ்சாப் அணி. பந்து வீச்சில் சென்னை அணி சார்பில் பிராவோ 3 இலக்குகளையும் மொஹித் சர்மா, நன்ஸின் தலா இரு இலக்குகளையும் அஸ்வின், ஜடேஜா ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

139 என்ற வெற்றி இலக்கை விரட்டத் தொடங்கியது சென்னை அணி.

ஆரம்ப வீரர்களாக களமிறங்கினர் மைக்கல் ஹசி, முரளிவிஜய் ஜோடி. இருவரும் இணைந்து நிதானமாகவும் அதிரடியாகவும் ஓட்டங்களைச் சேர்த்தனர். 36 பந்துகளை எதிர் கொண்டு அரைச் சதம் கடந்தார் ஹசி. மறு முனையில் விஜய்யும் நிதானமாக ஆட 15 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் இந்த ஜோடி இணைப்பாட்டமாக 100 ஓட்டங்களைக் கடந்தது.

இருவரது இலக்குகளையும் சரிக்க பஞ்சாப் அணி வீரர்கள் போராடினர்.

எனினும் இறுதியில் 18 அவது பந்துப் பரிமாற்றத் தில் சென்னை அணி இலக்கு இழப்பின்றி வெற்றி இலக்கை எட்டியது.

முரளிவிஜய் 50 பந்துகளில் அரைச் சதத்தை எட்டினார். மறு முனையில் சிறப்பாக ஆடிய மைக்கல் ஹசி 54 பந்துகளில் 86 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

ஆட்ட நாயகனாக சென்னை அணி சார்பில் அதிக ஓட்டங்களைக் குவித்த மைக்கல் ஹசி தெரிவு செய்யப்பட்டார். (16)


ஆட்ட நாயகனாக தெரிவான மைக்கல் ஹசி

## சிறந்த வீரர் கிளார்க் விஸ்டன் சஞ்சிகை



இங்கிலாந்தின் விஸ்டன் சஞ்சிகையின் கடந்தாண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரராக ஆஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் அறிவிக்கப்பட்டுள்ளார்.

அத்தோடு விஸ்டன் கிரிக்கெட் வீரர்களாக ஹசிம் அம்லா, நிக் கொம்ப்டன், ஜக்ஸ் கலிஸ், மார்லன் சாமுவேல்ஸ்,டேல்ஸ்ரெய்ன்ஆகியோரும்தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

2003ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட விஸ்டனின் சிறந்த கிரிக்கெட் வீரர் விருதை வெற்றி கொள்ளும் 3ஆவது ஆஸ்திரேலிய வீரர் மைக்கல் கிளார்க் ஆவார்.

இதற்கு முன்னர் 2003ஆம் ஆண்டு ரிக்கி பொன்டிங்கும் 2004ஆம் ஆண்டு ஷேன் வோர்ன் இந்த விருதை வென்றிருந்தனர். 2011ஆம் ஆண்டுக்கான விருதை இலங்கையின் குமார் சங்ககார பெற்றிருந்தார்.

விஸ்டனின் சிறந்த 5 கிரிக்கெட் வீரர்களாக அறிவிக்கப்பட்டவர்களில் 3 வீரர்கள் தென்னாபிரிக்க வீரர்களாகவும் மார்லன் சாமுவேல்ஸ் மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்தவராகவுள்ளதுடன் இங்கிலாந்தைச் சேர்ந்த நிக் கொம்ப்டனும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

விஸ்டனின் சிறந்த 5 கிரிக்கெட் வீரர்கள் விருது இங்கிலாந்து கிரிக்கெட்டில் தாக்கத்தைச் செலுத்தியமைக்காக வழங்கப்படுவதோடு, இந்த கௌரவத்தை ஒரு வீரர் ஒருமுறை மாத்திரம் பெறலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது. [ற]

## ஐ.பி.எல்லில் ரைடர் இல்லை

இனந்தெரியாதோரால் தாக்கப்பட்ட நியூஸிலாந்து அணியின் சர்ச்சைக்குரிய வீரர் ஜெசி ரைடர் நடப்பு ஐ.பி.எல். '20/20' தொடரில் பங்கேற்க மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கிறைஸ்ட்சர்ச்சில் உள்ள ஹோட்டலில் குடித்துவிட்டு வெளியே வந்த இவரை மர்ம நபர்கள் சிலர் தாக்கியதில் கோமா நிலைக்கு சென்றார். தீவிர சிகிச்சைக்குப் பின்னர் வீடு திரும்பியுள்ள இவர் தற்போது குணமடைந்து வருகிறார்.

இது குறித்து ரைடரின் மேலாளர் ஆரோன் வெளியிட்டுள்ள அறிக்கையில், ''ரைடர் சோர்வாகத்தான் உள்ளார். இவரின் உடல் நிலை சரியாக இரண்டு அல்லது மூன்று மாதங்கள் தேவைப்படும்'' என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதன் மூலம், இவர் நடப்பு ஐ.பி.எல். தொடரில் பங்கேற்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. வரும் ஜூலை மாதம் நடக்கும் கரீபியன் பிறீமியர் லீக் தொடரில் இவர் விளையாடுவதற்கான வாய்ப்பு உள்ளன என்று கூறப்படுகிறது. [ற]

## சின்னத்திரையில் டெண்டுல்கர்



இந்திய கிரிக்கெட் துடுப்பாட்ட நட்சத்திரமான டெண்டுல்கர் சின்னத்திரையில் கால் பதிக்கிறார். கார்ட்டூன் வடிவ கதாபாத்திரமாகவே தொலைக் காட்சி தொடரில் அறிமுகமாகிறார்.

'மாஸ்டர் பிளாஸ்டர்ஸ்' என்ற அந்தக் கார்ட்டூன் படத்தில் கதாநாயகனே டெண்டுல்கர்தான். இதன் மூலம் குழந்தைகள் மத்தியில் கிரிக்கெட் ஆர்வம் அதிகரிக்கும் என்று சச்சின் நம்பிக்கை தெரிவித்துள்ளார். முதல்கட்டமாக 22 நிமிடங்கள் நீடிக்கும் 26 தொடர்களை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. முதல் தொடர் அடுத்த ஆண்டு ஒளிபரப்பாகும் எனத் தெரிகிறது

இது குறித்து சச்சின் கூறுகையில், 'பொதுவாக அனிமேஷன் படங்களை என் குழந்தைகளுடன் சேர்ந்து விரும்பிப் பார்ப்பேன். இத்தொடரில் நடிப்பது சவாலாக இருக்கும் என்று நினைக்கிறேன்' என்றார். [ற]

## பலவீனமாக உள்ளது சென்னை
### – அக்ரம்



தற்போதைய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி பலவீனமாக உள்ளது என்று கருத்துத் தெரிவித்துள்ளார் பாகிஸ்தானின் கிரிக்கெட் முன்னாள் அணித்தலைவரும், தொலைக்காட்சி வர்ணணையாளருமான வசீம் அக்ரம்.

ஐ.பி.எல். கிண்ணத்தை இரு முறை வென்ற ஒரேஒரு அணியாக சென்னை சுப்பர் கிங்ஸ் திகழ்கிறது. 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் அந்த அணி ஐ.பி.எல். கிண்ணத்தை கைப்பற்றியது.

எனினும் தற்போது நடைபெற்றுவரும் 6ஆவது ஐ.பி.எல். தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் தொடக்க ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸிடம் தோற்றது.

இந்நிலையில் இந்த ஐ.பி.எல். போட்டியில் விளையாடும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை பார்க்கும் போது சிறிது பலவீனமாக தெரிகிறது என்று கூறியுள்ளார் வசீம் அக்ரம்.

''சென்னை அணி எப்போதுமே வலுவானதாக இருக்கும். தொடக்க ஆட்டத்தில் அந்த அணி கடைசி வரை போராடியே தோற்றது.

ஆனால் இந்த முறை சென்னை சூப்பர் கிங்சை பார்க்கும்போது சிறிது பலவீனமாக இருப்பதாக தெரிகிறது. கடந்த கால துடுப்பாட்ட வரிசையை பார்த்து இதை சொல்கிறேன். முதல் ஆட்டத்தில் தோற்றதை வைத்து சொல்லவில்லை .அந்த அணிக்குரிய ஆற்றல்திறன் குறைவாக இருப்பது தெரிகிறது- என்று அவர் கூறியுள்ளார்.

இதேவேளை-சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் சகலதுறை வீரரான அல்பி மார்கல் தென்னாபிரிக்காவில் இருந்து தற்போது சென்னை வந்துள்ளார். அவரும், மேற்கிந்திய தீவுகள் வீரர் கிறிஸ் மாரிசும் சென்னை அணியோடு இணைந்து கொண்டுள்ளனர்.[ற]

## அரைமணி நேரத்தில் டிக்கெட்டுக்கள் காலி

இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதும் சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிக்கான டிக்கெட் அரை மணி நேரத்தில் விற்றுத்தீர்ந்தன.

ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் எதிர்வரும் ஜூன் மாதம் இங்கிலாந்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான டிக்கெட் விற்பனை நேற்று இணையத்தில் தொடங்கியது. தொடங்கிய அரை மணி நேரத்தில் மொத்த டிக்கெட்டுக்களும் விற்றுதீர்ந்தன.

இந்தக் கிரிக்கெட் தொடரின் முகாமையாளர் ஸ்டீவ் வொர்த்தி கூறுகையில்,''நேற்று விற்பனை தொடங்கிய அரை மணி நேரத்திலேயே அனைத்து டிக்கெட்டுக்களும் விற்றுத் தீர்ந்தன. டிக்கெட் உடனே விற்பனையாகும் என்று நாங்கள் எதிர்பார்த்தபோதும், இவ்வளவு விரைவாக விற்பனையாகும் என்றும் நாம் எதிர்பார்க்கவில்லை'' - என்று கூறினார். [ற]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பத்திரிகைகளுக்கு மிரட்டல் விடுத்த அஸ்வர்

கொழும்பு, ஏப்.11

தமிழ்ப் பத்திரிகைகள் தனது பேச்சை முழுமையாகப் பிரசுரிக்காவிட்டால், நான் நாடாளுமன்றத்தில் சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்புவேன் என தமிழ்ப் பத்திரிகைகளுக்கு மிரட்டல் விடுக்கின்றார் ஆளும்கட்சி தேசியப் பட்டியல் உறுப்பினரான ஏ.எச்.எம்.அஸ்வர்.

அதேவேளை- நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தனின் பேச்சுக்கு ஒரு தடவை அல்ல, ஆயிரம் தடவைகள் இடையூறு செய்வேன் என்றும் கூறினார்.

நேற்று நாடாளுமன்றத்தில் நான்கு சட்டவரைவுகள் தொடர்பான விவாதம் நடைபெற்றது. இந்த விவாதத்தில் உரையாற்றிய அஸ்வர் சட்டவரைவுகள் தொடர்பாக எதையும் பேசவில்லை. நேற்று முன்தினம் இந்தச் சபையில் நானும் பிரதி அமைச்சர் காதரும் அடிக்கடி இடையூறு செய்ததாகத் தமிழ்ப் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

முஸ்லிம் மக்கள் படுகொலை செய்யப்பட்ட போது மௌனமாக இருந்த சம்பந்தனுக்கோ, கூட்டமைப்புக்கோ தற்போது பேச எந்தவிதமான அருகதையும்இல்லை. அதனாலேயே நாம் இடையூறு செய்தோம். தொடர்ந்தும் செய்வோம். நாம் எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றுபவர்கள் அல்லர். எரியும் நெருப்பை அணைப்பவர்கள்.

அரசுடன் இருக்கும் அமைச்சர்களும், உறுப்பினர்களும் எமது மக்களின் நலன்களுக்காகவே சேவையாற்றுகின்றோம்.

தொலைக்காட்சிகளிலும், பத்திரிகைகளிலும் தமது புகைப்படங்கள் வெளிவர வேண்டும் என்று போராட்டம் நடத்துபவர்கள் அல்லர் நாம்.

எமது இனத்தின்மீது எமக்கு அக்கறை உண்டு. ஆர்வம் உண்டு. அதன் காரணமாகவே நாம் எமது ஆதங்கங்களை வெளிப்படுத்துகின்றோம்.

தமிழ்ப் பத்திரிகைகள் எமது உள் உணர்வுகளையும், ஆதங்கங்களையும் புரிந்துகொண்டு செய்திகளைப் பிரசுரிக்கவேண்டும்.

எனது பேச்சுகளை அவை முழுமையாகப் பிரசுரிக்க வேண்டும். இல்லையேல், நாடாளுமன்றத்தில் சிறப்புரிமை பிரச்சினையொன்றை எழுப்புவேன்'' - என்றார் அஸ்வர்.

## இராணுவக் காவலரணை பந்தாடியது சுழல் காற்று

சாவகச்சேரி, ஏப் 11

கடற்கரையில் அமைக்கப்பட்டிருந்த கடற்படையினரின் காவலரணைத் தூக்கி வீசியது சுழற் காற்று.

நேற்று பிற்பகல் 4 மணியளவில் சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலயத்துக்கு அருகிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த காவலரணுக்குள் படையினர் சமையல் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே கூரைகள் மற்றும் அங்கு வைக்கப்பட்டிருந்த பொருள்கள் கடலுக்குள் தூக்கி வீசப்பட்டதாக சிப்பாய் ஒருவர் கூறினார். எனினும் எவரும் காயங்கள் இன்றித் தப்பினர்.

(உ-16-9)

## பாம்புப் பெண் பிணையில் விடுதலை

கொழும்பு, ஏப்.11

பம்பலப்பிட்டி ஹோட்டல் ஒன்றில் வைத்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்ட பாம்புப் பெண் 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கொள்ளுப்பிட்டிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட பாம்புப் பெண் கொழும்பு மேலதிக நீதிவான் பிரசன்ன அல்விஸிடம் முன்னிலைப் படுத்தப்பட்ட போதே அவருக்குச் சரீரப் பிணை வழங்கப்பட்டுள்ளது.


**Personal & Group Classes**
**வங்கியியல் கற்கைநெறி**

**CBF**
Structure of Accounts
**DBF**
Accounting Analysis & Planning
K.ஸ்ரீபரன்BBA(Fm.spl)
0774598430 (35877)(8.6)

**விற்பனைக்கு**
நல்ல நிலையில் உள்ள Japan Hamada Printing Machine (700 CD) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு- 0774700468 (35892) (14.09)

**புத்தாண்டு கணினி மலிவு விற்பனை**
IBM DUAL CORE (160GB, 1GB, DVD, 19" LCD) 29750/=
HP DUAL CORE (160GB, 2GB, DVD, 19"LCD) 32750/=
INTEL DUAL CORE (500GB, 2GB, 19"LED, DVD) 42500/=
LAPTOPS
LAP D/CORE- 57500/=
LAP I3 - 61500/=
LAP I5 - 84500/
ALL COMPUTERS FREE
4GB PENDRIVE, WEBCAM, HEADPHONE
ST.ANTONY'S 187, K.K.S ROAD, JAFFNA.
0212224865, 0750698608 (15 வருட சேவையில்)
(சி/8318) (14.09)

**உயர்ந்த பெறுபேறுகளுக்கு உறுதுணையான நிறுவனத்தில்**
**O/L DAY CLASS**
(காலை 8.00 - பி.ப.1.00)
ஏப்ரல் 15இல் ஆரம்பம்
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
The Express Institute
Irupalai Junction Kopay

**5000/= க்கு 5000/=**
**நீங்களும் அதிஷ்டசாலி ஆகலாம்**

| மகா சில்க்ஸ் | பியூட்டி சில்க்ஸ் | கவுஸ் ஒவ் செலெக்ஷன் |
|---|---|---|
| 32, 40A, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம். | 69, 69A, நவீனசந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம். | 22j, பெரிய கடை வீதி, நவீன சந்தை (வெளிப்புறம்), யாழ்ப்பாணம். |
| 021 222 7359 | 021 222 7359 | 021 222 7675 |

ஆகிய எமது மூன்று ஸ்தாபனங்களிலும் 14.04.2013 வரை ரூபா 5000/= பெறுமதியான புடவை வகைகளைக் கொள்வனவு செய்பவர்களில் அதிஷ்டசாலிகளாக மூவர் தெரிவுசெய்யப்பட்டு ஒவ்வொருவருக்கும் ரூபா 5000/= பெறுமதியான பட்டுச் சாறி இலவசமாக வழங்கப்படும்.

அதிஷ்டசாலிகளாக 14.04.2013 ஞாயிற்றுக்கிழமை குலுக்கல் மூலம் மூவர் தெரிவு செய்யப்படுவார்கள்

**காணி விற்பனைக்கு**
சுன்னாகம் பிரதேச சபையின் வர்த்தக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் அந்தோனியார் ஆலயப் பின் வீதிக்கும் சுன்னாகம் ஐயனார் ஆலயத்துக்கு செல்லும் வீதியில் செல்லாச்சியம் மையார் வீதி சந்திக்குமிடையில் 12 அடி அகலமுடைய பாதையுடன் மூன்று பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0775821041 (35893)(8.6)

**விக்னா**
**கல்வி நிறுவனம்**
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
**O/L DAY CLASS** புதிய பிரிவு
ஆரம்பம்
(12.04.2013) காலை 8.00 மணி
★கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன் இயங்கும் ஒரே நிறுவனம்.
★ O/L DAY CLASS நடைபெறும் ஒரே இடம்
★முதல் அனுமதி பெறும் 100 மாணவர்களுக்கு மட்டுமே பிரிவு 1 இல் அனுமதி.

**காணி விற்பனைக்கு**
பருத்தித்துறை வீதி (751)
வியாபாரிமூலை பிள்ளையார் கோயிலுக்கு வடக்கு வீதியில் உள்ள
"கிணற்றாம் பாத்தெணி"
8¼ நிலப்பரப்புக்காணி
உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776608385 (ராசாத்தி) (35324)(8.6)

**ABI BABY MART in**
**பரிசு மழை**
1000/= மேல் கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களிற்கும் பரிசுப்பொருள்கள்! உடனேயே தங்கள் வீட்டிற்கு எடுத்துச் செல்ல லாம். காத்திருக்காமல் உடனேயே விரையுங்கள்...!
Discount 10% - 20% வரை
★ 3000/= மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களின் பெயர்கள் 13.04.2013 11 மணிக்கு குலுக்கலும் இடம் பெறும்.
#267, Brown Road, Jaffna.

**மணல் மண் வேண்டுமா?**
★கட்டட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் மிகச் சிறந்த மண் வேண்டுமா?
★இருந்த இடத்திலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டுமா?
★உங்கள் இடத்துக்கே கொண்டு வருகிறோம்.
4½ டிரக்டர் 20,500/-
தொடர்பு:- ராம்
072 63 78 546
(23-34166)

**SUBRA**
**A/L 2015 கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானப் பிரிவுகள் புதுவருட சுபவேளையில் ஆரம்பம் 14.04.2013 ஞாயிறு காலை 9.15 a.m**

| பாடம் | சித்தன்கேணியில் | வட்டுக்கோட்டையில் |
|---|---|---|
| தமிழ் | யசிந்தன் | அமரசிவம் |
| இந்துநாகரிகம் | சிவகரன் | சிவகரன் |
| அளவையியல் | S.பவன் | S.பவன் |
| நாடகம் | கணேஷ் | வினோதன் |
| அரசியல் | சுகாஸ் | றமேஸ் |
| புவியியல் | ஐங்கரன் | ஐங்கரன் |
| விவசாயம் | சசிகுமார் | சசிகுமார் |
| சித்திரம் | அருள்றமேஸ் | அருள்றமேஸ் |
| வரலாறு | ஆனந்தன் | ஆனந்தன் |
| கிறிஸ்தவம் | அன்ரனி | அன்ரனி |
| மனையியல் | மயீவன் | மயீவன் |
| இணை. கணிதம் | சதீஸ் | சதீஸ் |
| வணிகம் | நந்தீஸ் | நந்தீஸ் |
| கணக்கீடு | சுபேஸ், விசுவராஜ் | D.Sam, விசுவராஜ் |
| பொருளியல் | ஜெயக்குமார் | ஸ்ரீ |
| வணி.புள்ளி | தவசேகர் | தவசேகர் |
| இரசாயனம் | பிரதீபன் | சுரேஸ் |
| பௌதிகவியல் | சதீஸ், உயிரோவியம் | சதீஸ் |
| இணைந்தகணிதம் | மயூரன் | தவசேகர் |
| உயிரியல் | பாலா, ஈசன் | பாலா, ஈசன் |
| ஊடகவியல் | கரன் | கரன் |

**O/L Day Class**
ஆரம்பம்
14.04.2013
ஞாயிற்றுக்கிழமை
ஒரு பிரிவில் 50 மாணவர்கள் மட்டுமே.
தீவுப்பகுதி மாணவர்கள் மற்றும் போரால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு விசேட சலுகைக் கட்டணம்
(சி/8312)(14.9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் துணை

# வவுனியா-ஓமந்தை-அரசர்பதி
# ஸ்ரீகண்ணகை அம்மன் பொற்கோயில் புனராவர்த்தனப் பிரதிஷ்டா
# மஹாகும்பாபிஷேக சிறப்பிதழ் - 11-04-2013





## பிரதம குருக்களின் ஆசியுரை



வவுனியா, ஓமந்தை வண்ணாங்குளம் பகுதியில் பன்னெடுங் காலமாக அருளாட்சி புரிந்து வரும் ஸ்ரீ கண்ணகை அம்மன் பெருங் கருணைக் கடலாக விளங்கி வருகின்றாள். அன்னை கண்ணகைத் தாயின் இருமருங்கிலும் ஸ்ரீ மஹா மாரியம்மனும், பேச்சி அம்மனும் கூடவே வீற்றிருந்து பக்தர்களைக் காத்து துஷ்டர்களைப் பயமுறுத்தி, விரட்டியும், காப்பாற்றியும் வருகின்றாள். இந்த ஆலயத்தின் அருகில் மா, பலா, வில்வம், நெல்லி முதலான பல விருட்சங்களும் பறங்கியாறு என அழைக்கப்படும் ஆறும் அமைந்து அரசர்பதி திவ்ய சேத்திரமாக விளங்குகின்றது. அழகும் பெருமையும் சேர்க்கின்ற இங்குள்ள பல ஆலயங்களைப் பராமரித்து வந்த அரசர் வேலுப்பிள்ளை அவர்கள் இவ்வாலயத்துக்கு மாட்டு வண்டியில் வந்து பூசை செய்துவிட்டுத் திரும்பிச் செல்லும்போது அன்னையிடம் இவ்வூர் மக்களைக் காப்பாற்ற வேண்டும் எனப் பிரார்த்தித்துச் சென்றார். இக் கண்ணகை அம்மன், பேச்சி அம்மன், மாரி அம்மன், காத்தவராயர் முதலான தெய்வங்கள் இவ்வூரைக் காத்து வருகின்றனர். இந்த ஆலயத்தினை அரசர் வேலுப் பிள்ளை தங்கராசா அவர்களும், அரசர் வேலுப்பிள்ளை கேதீஸ்வரன் அவர்களும் பராமரித்து வருகின்றனர். அம்மனின் திருவருளால் அரசர் வேலுப்பிள்ளையின் இளைய மகன் அரசர் குணரட்ணம் அவர்கள் லண்டன் சென்று வர்த்தகம் செய்து வந்தார். அன்னையின் அருளின்படி அரசர்பதி கண்ணகை அம்மன் ஆலயத்தை முற்று முழுதாகப் புதிதாக அமைத்துப் பஞ்சதள ராஜ கோபுரத்துடன் இலங்கையில் எங்கும் இல்லாதவாறு பொற் கோயிலாக அமைக்கப்பட்டு 11.04.2013இல் மிகவும் சிறப்பான முறையில் கும்பாபிஷேகம் நடத்தப்படுகின்றது. அன்னையின் அருளில் பிறந்த குழந்தை வைஷ்ணவியின் கைங்கரியமாக இப்பெரும் ஆலயத்தை அமைத்துப் புகழ் வாய்ந்த பொற்கோயில் அமைத்துத் திருத்தலமாக்கியுள்ளார். இவ்வாலய கும்பாபிஷேகம் இனிதே சிறப்புற வாழ்த்துவதுடன் அரச குடும்பத்தவர்களும், அனைத்து அம்பிகை அடியார்களும், நீடூழி வாழவும் அன்னையின் அருளை வேண்டி ஆசீர்வதிக்கின்றேன்.

டாக்டர் சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்தக்குருக்கள் சிவாகம ஆலோசகர் ஸ்ரீ வரசித்திவிநாயகர் தேவஸ்தானம். (ரொறன்ரோ, கனடா)
கலாநிதி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள், பிரதமகுரு ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தானம், சுன்னாகம்.

## அரசர் பதியில் அன்னை கண்ணகைக்கு ஒரு பொற்கோயில்



வவுனியா, ஓமந்தை வண்ணான்குளம் பகுதியில் மிகவும் பிரபலமாக விளங்கிய தெய்வம் அரசர்பதி கண்ணகை அம்மன் கோயில் ஆகும். அரசர் குடும்பம் என அழைக்கப்பட்டு வந்த எமது முன்னோர்களுக்குச் சொந்தமான காணிக்குள் தமது குலதெய்வமான கண்ணகைக்கும் பேச்சியம்மன், மாரியம்மன், நாகதம்பிரான் மற்றும் காத்தவராயர் ஆகிய தெய்வங்களுக்கும் சிறு கோயில மைத்து பக்தியுடன் தாமே பூசைசெய்து வந்த எமது மூதாதையர்கள் கோயிலைச் சூழ்ந்திருக்கும் காணிகளையும் கண்ணகைக்கே எழுதி வைத்திருந்தனர்.

சுமார் 800 ஆண்டுகளுக்கு முற்பட்ட இப் புராதனமான இக்கோயிலின் தொன் மையை பழைய விமானத்தின் சதுர வடிவமைப்பிலுள்ள வெள்ளைப் பித்தளை ஸ்தூபியைப் பார்த்தாலே நன்கு புரிந்துகொள்ளலாம். அக்காலத்தில் எமது தந்தையார் அரசர் வேலுப்பிள்ளை இரட்டை மாட்டு வண்டிலில் தினமும் வந்து பூசை செய்துவிட்டு போகும்போது அம்மனிடம் 'தாயே இந்த ஊரையும் மக்களையும் காப்பாற்று தாயே' என்று வேண்டிப் பிரார்த்தித்து விட்டுச் செல்வது வழக்கம். அம்மனும் தனது பரிவாரங்களுடன் சுற்று வட்டாரம் முழுவதையும் தனது கட்டுப்பாட்டிலேயே வைத்துக் காப்பாற்றி வந்தாள். தென்னையும் மாவும் விளாவும் புளியும் நாவலும் வில்வமும் நெல்லியும் நிறைந்த சோலைகளிலும் காடுகளிலும் நூற்றுக்கணக்கான பசுக்களும் காளைகளும் ஆடுகளும் மான்களும் மயில்களும் கிளிகளும் குயில்களும் பருந்துகளும் பாம்புகளும் குளங்களிலும் பறங்கி ஆறுகளிலும் தமது இஷ்டப்படி உண்டு உறங்கிப் பாடியும் ஆடியும் ஆரவாரித்து ஆர்ப் பரிக்கும் சூழலில் அரசர்பதி அன்னையாக கண்ணகைத்தாய் ஒரு கையில் சிலம்பும் மறுகையில் அம்மானையுமாக திருவிளையாடல் புரிந்து வந்தாள். தனது எண்பது வயது வரை அன்னையின் தொண்டைப் புரிந்து வந்த அவரின் வழியில் பிள்ளைகளாகிய எனது அண்ணன்மாரில் பெரியவரான அரசர் வேலுப்பிள்ளை தங்கராசா பூசாரியாகவும் இளையவராகிய அரசர் வேலுப்பிள்ளை கேதீஸ்வரன் உதவியாளராகவும் அவரின் உபதேச முறைப்படியே இன்றும் அன்னையின் பூசைத் தொண்டைப் புரிந்து வருகின்றனர். எமது தந்தையாரின் அருள்வாக்குப்படியே வெளிநாடு சென்று வியாபாரத்துறையில் ஈடுபட்டிருந்த எனது மனத்தில் குறையேதும் இன்றி நிறைவான வாழ்வை எமது தந்தையும் குருவுமாகிய அரசர் வேலுப்பிள்ளையின் வாக்கில் நின்று அன்னை கண்ணகைத் தாய் ஆணையிட்ட பிரகாரம் அருமை மகள் வைஷ்ணவி தோன்றினாள். அதன் பின்னர் அம்மனின் இஷ்டப்படியே முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ சர்வேஸ்வரக் குருக்களின் ஆலோசனைகளையும் பெற்று இந்தியத் திருத்தலங்களில் எனது மனதை மிகவும் கவர்ந்த வேலூர் பொற்கோயிலைப் போன்று எமது அன்னைக்கும் சிற்ப வல்லுநர் வினோஸ்ரீ அவர்களின் குழுவினரின் கைவண்ணத்துடன் மாடகூட கோபுரங்களுடன் தங்கமயமான திருக்கோ யிலை அமைத்து மஹா கும்பாபிஷேகத்தை நிகழ்த்தும் பெரும் பாக்கியத்தைத் தந்த எமது குலதெய்வமாகிய அன்னை அரசர்பதிக் கண்ணகைத் தாயின் திருவடிகளுக்கே அனைத்தையும் சமர்ப்பணம் செய்து போற்றி வணங்குகின்றேன். அவளின் அருளாட்சி அகில உலகத்தையும் இரட்சித்து அனைவரும் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு வாழ்வார்களாக!

அன்னையின் பணியில் திற்கும் அடியவன்: அரசர் வேலுப்பிள்ளை குணரத்தினம் (குணா)

## வாழ்த்துச் செய்தி

வவுனியா மாவட்டம் ஓமந்தை வண்ணான் குளத்தைச் சேர்ந்த அரசர்பதி ஸ்ரீகண்ணகை அம்மன் பொற்கோயிலில் நடைபெறவுள்ள மகா கும்பாபிஷேகத்திற்கும் அதனையிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்வடைகின்றேன். ஆலயம் என்பது இறைவன் வீற்றிருந்து ஆன்மாக்களுக்கு அருள் பாலிக்கும் இடமாக விளங்குகின்றது. ஒவ்வொரு பிரதேசத்திலும் அமைந்துள்ள ஆலயங்கள் அப்பிரதேச மக்களின் ஆன்மீக வாழ்வுக்கும்,சமூகம், கலைகள் சம்பந்தமான வாழ்வியல் வளர்ச்சிக்கும் தளமாக அமைந்துள்ளன. அவ்வகையில் ஆலயங்களின் வரலாற்றிலும் விருத்தியிலும் அப்பிரதேச மக்களின் வரலாறும் விருத்தியும் தங்கியிருந்ததுடன், அவற்றை வெளிக்காட்டும் இடமாகவும் விளங்கின; விளங்குகின்றன. இத்தகைய ஆலயங்களை சிறப்பாகப் புனராவர்த்தனம் செய்து கும்பாபிஷேகம் நடத்திப் பராமரித்தல் அவசியமானதாகும். அந்தவகையில், பழம்பெரும் ஆலயமாக விளங்கும் ஓமந்தை வண்ணான் குளம் அரசர்பதி ஸ்ரீகண்ணகை அம்மன் பொற்கோயில் புதிய ராஜகோபுரத்துடன் புன ருத்தாரணம் செய்யப்பட்டு இன்று கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. ஆலயத்தின் கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடத்துகின்ற ஆச்சாரிய பெருமக்களுக்கும்,திருப்பணியைச் செம்மையாக நிறைவேற்றி கும்பாபிஷேகத்தை நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்ட ஆலய தர்ம கர்த்தா அரசர் வேலுப்பிள்ளை குணரட்ணம் அவர்களுக்கும், பரிபாலன சபையினருக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன். அனைவரும், துன்பங்கள் நீங்கி இன் பமாக வாழ எல்லாம் வல்ல ஸ்ரீகண்ணகை அம்மன் அருள்பாலிக்க வேண்டுமெனப் பிரார்த்திக் கின்றேன்.

சாந்தி நாவுக்கரசன், பணிப்பாளர், இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்.

## வவுனியா பிரதேச செயலாளரின் வாழ்த்துரை



வன்னி மண்ணில் தாய்த் தெய்வவழிபாடு மிகவும் தொன்மையானது. மிகவும் நீண்ட சரித்திரங்களைத் தன்னத்தே கொண்ட வன்னியின் குக்கிராமங்களில் இன்னமும் தமது பாரம்பரிய வழிபாட்டு முறைமூலம் முத்துமாரியம்மன், கண்ணகியம்மன், காத்தவ ராயன் எனத் தம் குலதெய்வங்களுக்கு கோயில் அமைத்து வணங்கும் வாழ்வியலைக் காண முடியும். தமது வாழ்வின் ஒவ்வோர் நிகழ் விற்கும் குலதெய்வத்தின் அனுமதியையும் ஆசியையும் பெற்று செயற்படும் பயபக்தி என்பது வன்னிக் கிராமங்களின் சிறப்புக்களில் ஒன்றாகும். மக்கள் இறைபயத்தோடு வாழும்போது ஒழுக்கக்கேடான விடயங்களுக்கு முனைய மாட்டார்கள் என்பதுடன், சமுதாயம் இயல்பாகவே நியாய தர்மங்களுக்கு கட்டுப்படும் பண்பினையும் பெற்று வருகின்றது. தாய்த்தெய்வ வழிபாடு சமுதாயத்தில் இயல்பாகவே நற்பண்புகளைத் தருவிக்கும் ஒன்றாக விளங்குவதை வன்னிக் கிராமங்களில் பிரதியீட்டமாக காணமுடியும்.


ஓமந்தை அரசர்பதி கண்ணகை அம்மன் ஆலயத்தின் வரலாறு புராதனமானதாகும். இவ்வாலயத்தின் அமைவிடம் அதனைச் சூழவுள்ள கிராமங்கள் மற்றும் தொல்பொருள் அமைவிடங்களைக் கொண்ட வனப்பகுதிகள் இவ்வாலய வரலாறு பற்றி அறியத் தூண்டுவனவாகும். இவ்வாலயத்தின் மூர்த்தியாகிய கண்ணகையம்மன், முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகை அம்மனோடு இணைந்ததாக கர்ணபரம்பரைக் கதைகளினூடாக அறியமுடிகின்றது. வன்னிப் பகுதியில் ஆட்சி செய்த பண்டைய மன்னர்கள் வழிபட்ட ஆலயங்களில் ஒன்றாகவும் இது விளங்கியது எனவும் கூறுவர். எவ்வாறாயினும் இவ்வாலயம் அமைந்துள்ள கிராமத்தவர்களும் சுற்றயல் கிராமத்தவர்களும் கடந்த காலங்களில் இந்த கண்ணகை அம்மனுக்கு பெருவிழா எடுத்து வழிபாடு இயற்றி வந்தனர். நாட்டில் ஏற்பட்ட அமைதியற்ற கலவர சூழ்நிலை காரணமாக இப்பிரதேச மக்கள் இடம் பெயர்ந்து உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வசித்துவந்தபோதும் கண்ணகை அம்மன் மீது அளவற்ற பக்தி கொண்டவர்களாக விளங்கினர். வவுனியா பிரதேச செயலக பிரிவில் ஒரு கோடியில் அமைந்துள்ள இவ்வாலயத்தின் பெருமையும் மூர்த்தியின் கீர்த்தியும், உலகறிய செய்யப்பட வேண்டும் என்பதுடன் அம்மனின் அருளை அனைவரும் பெற வழிசெய்ய வேண்டும் என்பது எனது அவாவாக உள்ளது.

வவுனியா மாவட்டத்தில் கீர்த்திமிக்க ஆலயங்களில் ஓமந்தை அரசர்பதி கண்ணகை அம்மன் ஆலயம் குறிப்பிடத்தக்கதாகும். அரசர்பதி எனும் பெயர் இவ்வாலயத்தின் பரம்பரை உரித்தாளரும் பூசகருமான அரசர் என அழைக்கப்படும் அமரர் வேலுப்பிள்ளை என்பவரது நாமத்தைக் கொண்டதாகும். பரம்பரை பரம்பரையாக கண்ணகையம்மனுக்கு பூசை செய்துவரும் இவரது சகோதரர்கள், பிள்ளைகளே தொடர்ந்தும் இங்கு பூசை இயற்றிவரு வதும் குறிப்பிடத்தக்கதாகும். அம்மனின் பேரருளின் பேறாக அவரின் ஆசியுடன் நல் வாழ்வு வாழும் பெருமனமும், வள்ளலும் இவ்வாலயத்தின் உரித்தாளரும், பூசகருமான மறைந்த வேலுப்பிள்ளையின் புதல்வர்களில் ஒருவரான குணரட்ணம் அவர்களின் கொடையினாலும் அவரோடு இணைந்த ஆலயத்தின் அடியவர்களின் பெரும் ஒத்துழைப்புடனும் இவ்வாலயம் ஒரு பொற்கோயிலாக மிளிர்வது பெருமைக்குரிய விடயமாகும். இந்துமத பாரம்பரியங்களுடன் கிராமிய வழிபாடுகளுக்குரிய சிறப்புக்களை முன் னிறுத்தி இத்தகையதோர் பிரமாண்டமான ஆலயத்தின் எழுச்சி என்பது தொலைதூர கிராமங்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாகும். மீளக்குடியமர்ந்து, வாழ்க்கையை மீள அமைத்து வரும் மக்க ளுக்கு தமது மத, கலாசார விழுமியங்களையும் மீளப்பெற்றுத்தரும் இத்தகைய ஆலயத்தின் எழுச் சிக்கு காரணமான குணரட்ணம் அவர்கள் சமயப் பணியோடு இந்த மக்களுக்கான சமுதாய பணியிலும் ஆர்வம் காட்டுபவராக உள்ளமை இக்கண்ணகை அம்மன் மூலமாக அருட் கொடையினை கொள்ளுதல் மிகை அன்று. அந்த வகையில் இப்பகுதி மக்களின் கல்வி மற்றும் வாழ்வாதார வளர்ச்சிக்கும் அன்னார் மூலமான பொருட்கொடையினையும் எதிர்பார்ப்பதுடன் மனமுவந்து இவ்வாலயத்தை அமைத்து வரண்டு போயிருக்கும் இச்சமுதாயத்தின் வளர்ச்சியில் பங்கெடுக்க முன்வந்த குணரட்ணமும் அவர் சந்ததியும் சகல நலன்களுடனும் வாழ அரசர்பதி கண்ணகை அம்மனின் அருள் என்றென்றும் கிடைக்கட்டும் என வாழ்த்துவதுடன், ஆலய வளர்ச்சியின் மூலம் பாரம்பரியங்களுடனான வழிபாட்டு முறைகள் பாதுகாக்கப்படவேண்டும் என அனைத்து பக்தர்களையும் வேண்டிக்கொண்டு இப்பொற்கோயில் எழுச்சிபெற பாடுபட்ட ஒவ்வொரு ஆன்மாவுக்கும் ஈடேற்றத்தை வழங்கவேண்டுமென அன்னை அருளை இறைஞ்சி நிற்கின்றேன்.

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.'

அ.சிவபாலசுந்தரன் (பிரதேச செயலாளர், வவுனியா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












செயல்திறன் அரங்க இயக்கத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக திறந்தவெளி நாடகத் திருவிழா அண்மையில் யாழ். முத்திரைச் சந்தியில் நடைபெற்றது. இரண்டு நாள்கள் நடைபெற்ற நிகழ்வில் 10 நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. குடாநாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த18 முதல் 25 வயது வரையான இளைஞர்கள் இந்த இந்த நாடங்கங்களை உருவாக்கிப் படைத்திருந்தார்கள். ஈழத்தின் முக்கிய நாடக இயக்குநர்களில் ஒருவரான தே.தேவானந்தின் வழிப்படுத்தல் மற்றும் நெறியாள்கையில் இடம்பெற்ற இந்த நாடகத் திருவிழாவுக்கு சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் நிறுவனம் நிதியுதவி வழங்கியிருந்தது.












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
மாணிக்கம் இலங்கைராஜா
(முன்னாள் யாழ். பல்கலைக்கழக சுகாதாரநிலைய சுகாதாரக் கவனிப்பாளர் விசேடதரம்)

தோற்றம்
01.03.1951

மறைவு
04.04.2011

ஆண்டுகள் இரண்டு சென்றாலும் ஆறுமா - எம் துயரம்
விருதுகளும் கேடயங்களும் கொடுக்க அழைக்கிறார்கள்
பல்கலைக்கழகத்தில் அதை வாங்க நீர் இல்லையே
இதையெல்லாம் எங்கிருந்தோ பார்க்கின்றீர் எப்படி நாம் அறிவோம்.
உம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசாரிலேன்,
கோண்டாவில் மேற்கு.

இந்திராதேவி (மனைவி).


# அதிக பயணிகளை ஏற்ற விரைவில் வருகிறது தடை

கொழும்பு,ஏப்.11

அரைச் சொகுசு பஸ்க ளில் ஆசன எண்ணிக்கைக்கு மேலதிகமாக பயணிகளை ஏற்றிச் செல்வதைத் தடை செய்வதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்தச் சட்டத்தை சித்திரைப் புத்தாண்டுக்குப் பின்னர் நடைமுறைக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் தலைவர் ரொஷான் குண திலக்க தெரிவித்துள்ளார்.

ஆசன எண்ணிக்கைக்கு மேலதிகமாக 3 வரையான பயணிகள் ஏற்றிச் செல்லப்படுவார்களானால் 500 ரூபாவும் 6 வரையான பயணி கள் ஏற்றிச்செல்லப்படுவார்களானால் ஆயிரம் ரூபாய்களும் 6 பயனாளிகளுக்கு மேல் ஏற்றிச் செல்லப்படுவார் களானால் பயணி ஒருவருக்கு 250 ரூபா வீதமும் தண்டம் அறவிடப் படவுள்ளது.

இரண்டாவது சந்தர்ப்பத்திலும் அதே தவறைப் புரிந்தால் ஒரு பயணிக்கு 375 ரூபா வீதமும் தண்டத் தொகை அறவிடப்படவுள்ளது. அத்துடன் ஏழு தினங்களுக்குப் பயணத் தடையை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

மூன்றாவது சந்தர்ப்பத்திலும் ஆசன எண்ணிக்கைக்கு மேலதிகமாக பயணிகள் ஏற்றிச் செல்லப்படுவார்களானால் ஒரு பயணிக்கு 500 ரூபா வீதம் தண்டம் அறவிடப்படுவதற்கு மேலதிகமாக இருவார காலத்துக்கு பயணத் தடை ஏற்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதே தவறு நான்காவது சந்தர்ப்பத்திலும் இடம்பெறுமானால் ஒரு பயணிக்கு 750 ரூபா வீதம் தண்டத் தொகை அறவிடப்படுவதோடு மூன்று மாத காலத்துக்கு பயணத் தடை ஏற்படுத்தப்படும்.

நான்காவது சந்தர்ப்பத்தின் பின்னரும் ஆசன எண்ணிக்கைக்கு மேலதிகமாக பயணிகள் ஏற்றிச் செல்லப்படுவார்களானால் பஸ் வழி அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து அமைச்சர் சீ.பி.ரத்நாயக்கவின் பணிப்பின் பேரில் அனைத்து பஸ் சங்கங்களுடன் கலந்துரையாடி இந்த நடைமுறைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன என்று அவர் மேலும் கூறி னார். (ம-22)




நாடுகடந்த உறவுகளிடம் உங்களைக் கொண்டு செல்லும் Hutch IDD இப்பொழுது

செக்கனுக்கு
2 சதம்

உள்நாட்டு மற்றும் IDD அழைப்புகளை செக்கனுக்கு 2 சதத்தில் அனுபவித்திடுங்கள்!

- ரூ. 298 ரீலோட் செய்து இச் சலுகையை அனுபவித்திடுங்கள்.
- ரீலோட் செய்து 30 நாட்களுக்கு செல்லுபடியாகும்.

அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, சீனா, ஐக்கிய இராஜ்ஜியம், ஜெர்மனி, ஹொங் கொங், பிரான்ஸ், நியுசிலாந்து, இத்தாலி, சிங்கப்பூர்

நிபந்தனைகளுக்குட்பட்டது

www.hutch.lk
/hutchsrilanka
Call 1788

3G HUTCH



உங்கள் கனவுகள் நனவாக இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!

சித்திரை புத்தாண்டில் நடைபெறும் கொடுக்கல் வாங்கலில் கலந்து கொள்வதற்கு வருடத்தின் 365 நாட்களும் திறந்திருக்கும் எமது வங்கி கிளையொன்றிற்கு வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்

எமது கிளைகள் கொடுக்கல் வாங்கல்களுக்காக ஏப்ரல் 14 ஆம் திகதியன்று மு.ப 9.00 மணி முதல் பி.ப 2:00 மணி வரை திறந்திருக்கும்



லஞ் பேக்
ரு.5,000* க்கு மேலான வைப்புகளுக்கு



நெப்செக் பேக்
ரு.10,000* க்கு மேலான வைப்புகளுக்கு



சிறிய ட்ரெவலிங் பேக்
ரு.25,000* க்கு மேலான வைப்புகளுக்கு



ட்ரெவலிங் பேக்
ரு.100,000* க்கு மேலான வைப்புகளுக்கு



ட்ரொலி பேக்
ரு.250,000* க்கு மேலான வைப்புகளுக்கு



பாடசாலை பேக்
சிறுவர் சேமிப்பு கணக்கில் ரு.10,000* க்கு மேலான வைப்புகளுக்கு

அழையுங்கள்: 011 4 711 411 www.nationstrust.com

Nations Trust Bank


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org